464

குண்டூசி

பிப்ரவரி '53....எட்டு அணா

464
1.53
387



கண்ட உடன் எடுக்கச் செய்யும் நிறம்!

எடுத்த உடன் போடச் செய்யும் மணம்!

போட்ட உடன் மகிழச் செய்யும் குணம்!

மகிழ்ந்த உடன் புகழச் செய்யும் திறம்!

எல்லாம் ஒருங்கே அமைந்தது

M.S

No.1

பட்டணம் பொடி

ஒன்றே!

மோகன் கம்பெனி

தந்தி: 'EMMES' த. பெ. 1161. மதராஸ்-1.

சேல்ஸ் டிப்போ:—கடலூர், N. T.

அசோகன் ஏஜென்சீஸ்,

தெப்பகுளம் :: திருச்சி.

யாவற்றிலும் எது மிக முக்கியம்?...

உங்கள் அழகிய தோற்றம்தான். சமூகத்தில் நீங்கள் எவ்விதம் காட்சி அளிக்கிறீர்கள் என்பதே மிக முக்கியம். நீங்கள் என்னதான் மேக்கப் செய்து கொண்டாலும், ஏராளமான நகைகளை அணிந்து கொண்டாலும், ஒரு சிறந்த புடவையை உடுத்திக் கொள்ளும்போது ஏற்படும் தனி அழகு ஏற்பட்டுவிடாது.

மைசூர் கவர்ன்மென்ட் பாக்டரியில், கிழ்நாட்டு கிரேப்-டி-சைன் முறைப்படி சுத்தமான மைசூர் பட்டிலிருந்து தயாரிக்கப்படும் கவர்ன்மென்ட் கிரேப்-டி-சைன் புடவைகள் இந்தத் தனி அழகை உங்களுக்கு அளிக்கின்றன. இவை விசேஷமான மினுமினுப்பும், துல்யமும், கண்யமும் கொண்டவை. புது மாதிரியான பார்டர்களில கிடைக்கும் இப் புடவைகளே ஒரு தனி ரகத்தைச் சேர்ந்தவை. நூற்றுக்கு நூறு சுத்தமான மைசூர் ஸில்க் புடவைகளே தற்கால நாகரீகத்தின் சின்னம்.

மைசூர் கவர்ன்மென்ட் கிரேப் புடவைகளையே
வாங்கி உபயோகியுங்கள்.

மைசூர் கவர்ன்மென்ட் ஸில்க்
வீவிங் பாக்டரி, :: மைசூர்.

கடற் காற்றளிக்கும்
புத்துணர்ச்சி

வோத்ரா

பெண்கள் போற்றும் டானிக்

கேஸரி குடீரம்
லிமிடெட்,
மதராஸ்—14.

தமிழ்நாடு ஏஜெண்டுகள்:

..ராமா ஜெனரல் ஸ்டோர்ஸ்
மேலகோபுர வாசல்,
மதுரை.

நறுமணமுள்ளது

சாமீஸ் காபி

எங்கும் கிடைக்கும்
சாமிஸ் காபியை...
வாங்குங்கள்....

சாமீஸ் காபி MFG. CO

262, சுபாஷ் சந்திர போஸ் ரோட்,
மதராஸ்—1.

கல்யாணம் ஆகியும் பிரமச்சாரியா!

கவலையை ஒழியுங்கள்!

மெலிந்துபோன உடம்பைப் பெருக்கச் செய்து, அசுத்த இரத்தத்தை சுத்தி செய்து, குழி விழுந்த கன்னங்களை ரோஜா நிறம் போலாக்கி, முகத்திற்கு அழகையும், தேஜஸையும் கொடுக்கும். மஹாபோக லேகியம் சேர் 1-க்கு ரூ. 10. ஒரிஜினல் டானிக் பில்ஸ் (ரூ 3/-). சேர்த்துச் சாப்பிட்டால் இணையில்லா இன்பம் உண்டாகும்.

ஏஜண்டுகள் :

பெருமாள் டிரேடர்ஸ்
எஸ். பி. ஜி. சர்ச் தெரு,
மதுரை.

இந்த ஊசியில்

பிப்ரவரி 1953

'கோமாளி'க் கூத்து ...	தலையங்கம்	7
திரை மனோஹரன்	வாழ்க்கை வர்ணனை	8
குண்டூசியைக் கேளுங்கள்	பதில்கள்	13
பி. கே. சரஸ்வதி	வர்ணப்படம்	21
ம னோ ஹ ர் ...	... ஆர்ட் படம்	22
கேமிரா மேதை ராம்னாத்	'குதூகலன்'	23
பகலில் நக்ஷத்திரங்கள் பிரகாசித்தன! ...	...	... 26
நு னி ப் பு ல் ...	'வெட்டுக்கிளி'	35
பராசக்தி பேசுகிறாள்	டி. எஸ். பாலய்யா	40
புஸ்தகப் பொழுது ...	விமர்சனம்	44
பொதுஜனம் பேசுகிறார் ...	கடிதங்கள்	47
வீரத்தேவன் கோட்டை ...	'லக்ஷ்மி'	51
இது செய்தி ...	... செய்திகள்	60
பத்மினி, என். டி. ராமராவ்	ஆர்ட் படம்	63
டி. டி. வஸந்தா ...	... ஆர்ட் படம்	64
மீனா குமாரி ...	ரேடியோ பேட்டி	66
சென்ற வருஷத்தில் சினிமாத் தொழில் நிலைமை ...	...	... 72
நாடகக்காரி ...	... 'ராகு'	73
பிரம்மலோகம் ...	ஸ்டுடியோச் செய்தி	80
புயல் நிவாரணத்திற்கு குழந்தைகள் உதவி ...	செய்திகள்	84

வருஷ சந்தா

இந்தியா, இலங்கை ... ரூ. 6

வெளிநாடுகள் ... ... ரூ. 9

தனிப் பிரதி

இந்தியா ... ... 8 அணா

இலங்கை ... ... 50 சதம்

வெளி நாடு ... ... 12 அணா

கட்டுரையாளர்களுக்கு

"குண்டூசி"யில் வெளியிடுவதற்கு நல்ல சிறு கதைகள், கட்டுரைகள், ஹாஸ்யத் துணுக்குகள் முதலியவை வரவேற்கப் படுகின்றன. வெளியிடப் படுபவைகளுக்குத் தக்க சன்மானம் உண்டு.

அங்கீகரிக்கப் படாத விஷயங்களைத் திரும்பப் பெற வேண்டுபவர்கள் போதிய ஸ்டாம்ப் உள்ள கவர் வைத்து அனுப்ப வேண்டும்.

குண்டூசி காரியாலயம்,
26, கிடங்குத் தெரு,
சென்னை—1.

குறிப்பு :—"குண்டூசி"யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகள், விகடத் துணுக்குகள் முதலியவைகளில் காணப்படும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே. அவை நிஜ நபர் யாரையும் குறிப்பிடுபவை அல்ல.

'கோமாளி'க் கூத்து!



நக்ஷத்திரக் கிரிக்கெட் விழாவின்போது என். எஸ். கிருஷ்ணன் முதலானோர் மறியல் செய்தனர்!

குண்டூசி

ஆசிரியர்-பி.ஆர்.எஸ்.கோபால்

நிகரற்ற விநியோகமுள்ள மாத சினிமாப் பத்திரிகை

பிப்ரவரி. 1953

பட்டை—6 ஊசி—5 பிரதி—65

‘கோமாளி’க் கூத்து!

கூனவேகமாக முன்னேறும் ஒரு யானையை சில எலிகள் ஒன்றுகூடி, கறுப்புக் கொடி காட்டி நிறுத்திவிட முடியுமா? முடியாதுதான். ஆனால், இந்த மாதிரி அசட்டுத்தனமான முயற்சி ஒன்று சென்ற மாதம் 11ந் தேதி நடக்கவே செய்தது.

நக்ஷத்திர கிரிக்கெட் ஆட்டத்தைப் பார்ப்பதற்காக ஆவலுடன் வந்திருந்த லக்ஷக் கணக்கான ரஸிகர்களை திரும்பிச் செல்லும்படி என். எஸ். கிருஷ்ணன் முதலான சிலர் மறியல் செய்தனர். ஆனால், ரஸிகர்கள் இந்த மறியலை அலக்ஷியம் செய்துவிட்டு மைதானத்திற்குள் பிரவேசித்தனர். அது மட்டுமல்ல; கிரிக்கெட் விழாவில் அவர்கள் காட்டிய உத்ஸாகம் அளவிலடங்காததாய் இருந்தது.

மேற்படி மறியல் எதற்காக நடந்தது என்று கேட்கிறீர்களா? ஸினி டெக்னிஷ்யன்கள் சங்கத்தினர் தங்களுக்கென ஒரு கட்டடத்தைக் கட்டிக்கொள்ள நிதி திரட்டுவதற்காக இந்த விழாவை ஏற்பாடு செய்தனர். ஆட்டத்திற்கு ஆகும் நிகர வசூலை வடஇந்தியரும் தென்னிந்தியரும் சமமாகப் பகிர்ந்துகொள்ளுவது என்ற ஒப்பந்தப்படி எல்லா ஏற்பாடுகளும் ஆனபின், கிருஷ்ணன் முதலான சில நக்ஷத்திரங்களும், சில படப் பிரமுகர்களும் கிரிக்கெட் விழாவிற்கு முட்டுக் கட்டைபோட முற்பட்டனர். “நிகர வசூலில் பாதியை புயல் நிவாரணத்திற்குக் கொடுப்பதாயிருந்தால்தான் நாங்கள் இந்த விழாவில் கலந்து கொள்ளுவோம்” என்று அவர்கள் கூறினர். தங்கள் பங்கில் வேண்டுமானால் பாதியை—அதாவது நிகர வசூலில் நாலில் ஒரு பங்கை—புயல் நிவாரணத்திற்குக் கொடுத்து விடுவதாக ஸினி டெக்னீஷ்யன்கள் ஒப்புக்கொண்டனர். கட்டட நிதிக்கு ஏற்பாடு செய்தானபின், எதிர்பாராமல் ஏற்பட்ட புயல் நிதிக்கு தங்கள் பங்கில் பாதியைத் தர அவர்கள் இசைந்தது பாராட்டத்தக்கது.

நிகர வசூலில் ஒரு பாதி வடஇந்தியரைச் சேர்ந்தது. அதிலும் பாதி தரும்படி கேட்பதற்கு ஸினி டெக்னீஷ்யன்களுக்கோ, அல்லது கிருஷ்ணன் கோஷ்டிக்கோ உரிமை ஏது? இங்கு வந்த கிரிக்கெட் நக்ஷத்திரங்கள் பம்பாயிலுள்ள தங்கள் சங்கத்தினரைக் கேட்காமல் ஒன்றும் செய்துவிட முடியாது. இதையெல்லாம் கிருஷ்ணன் கோஷ்டியினர் சிந்தித்துப் பாராமலே கண்மூடித் தனமாய் காரியத்தில் இறங்கிவிட்டனர்.

நாடகத்தினிடையே கோமாளி வருவான்; ஏதேதோ பேசி ஏக இரைச்சல் போடுவான். அவன் பேச்சையும், செய்கையையும் யாரும் ஒரு பொருட்டாகக் கொள்ள மாட்டார்கள். இதேபோலத்தான் அன்றைய மறியலும் ஒரு ‘கோமாளி’க் கூத்தாக முடிந்தது.

இந்த மறியலில் ஈடுபட்டவர்களை ரஸிகர்கள் தியாகமூர்த்திகளாக கருதவில்லை. அதற்குப் பதில் அவர்களது அறியாத்தனத்திற்கும், அவசர புத்திக்கும் அநுதாபமே கொள்ளுகின்றனர்.

திரை மனோஹரன்

மீனாக்ஷீ கல்யாணம் கதையைக் கேட்டிருப்பீர்கள்; படித்திருப்பீர்கள்; சினிமாப் படத்தில் பார்த்துமிருப்பீர்கள். சுந்தரேஸ்வரர் மீனாக்ஷி அம்மனை மணந்து கொள்ளுவதற்காக மதுரைக்கு வருகிறார். அவருடன் ஒரு கொட்டாப்புளி நபரைத் தவிர வேறு யாருமே (பிள்ளை வீட்டாராக) வராததால் பெண் வீட்டார் கவலை கொண்டனர். 'வராதவரையில் அரிசி மிச்சம்' என்று அவர்கள் சும்மாயிருந்துவிடவில்லை. "பிள்ளைவீட்டார் யாருமே ஏன் வரவில்லை?" என்று அவர்கள் மாப்பிள்ளையிடமே கேட்டுவிட்டார்கள். கேட்டதற்கு, சுந்தரேஸ்வரர் பதிலளித்தார்: "என் மனிதர்கள் எல்லோரையும் அழைத்து வந்துவிட்டால் உங்களால் சோறு போட்டு மாளாதே" என்று.

இந்த பதிலைக் கேட்ட பெண் வீட்டார் மிக அவமானமும், கோபமும் அடைந்தனர்: "அதென்ன அப்படிச் சொல்லிவிட்டீர்கள்? நாங்கள் கையாலாகாதவர்கள் என்று நினைத்துவிட்டீர்களோ. உங்கள் மனிதர்கள் எத்தனை ஆயிரம் பேர்களாயிருந்தாலும் சரி, வரவழையுங்கள். அத்தனை பேருக்கும் விருந்தளிக்க எங்களுக்குச் சக்தி உண்டு" என்று சவால் விட்டனர்.

சுந்தரேஸ்வரர் தமக்குள்ளேயே சிரித்துக்கொண்டு, "சரி, வராதவர்களைப் பற்றிப் பிறகு கவனிக்கலாம். வந்திருக்கும் என் தோழனுக்கு முதலில் வயிறு நிரம்ப சாப்பாடு போட்டுத் திருப்தி செய்யுங்கள்" என்று கூறினார்.

அதன்பேரில் நண்பன் குண்டோதரனைப் பெண் வீட்டார். அழைத்துச் சென்றனர். குண்டோதரன் சாப்பிட ஆரம்பித்தான். பல்லாயிரக் கணக்கானவர்களுக்கு தயாராகியிருந்த விருந்தெல்லாம் பத்தே நிமிஷங்களில் காலியாகிவிட்டது. மேலும் வடித்துப் போட்டார்கள்; குண்டோதரன் சாப்பிட்டுக்கொண்டேயிருந்தான். முடிவில் 'இனி சோறு வடிக்க வேண்டுமானால் அரிசி விளைந்துவந்தால் தான் சாத்தியம்' என்ற நிலைமை ஏற்பட்டபோது நல்லவேளையாக குண்டோதரனின் பசியும் ஒருவாறு அடங்கியது!

"இதெல்லாம் நம்ப முடியாத கட்டுக் கதை" என்கிறீர்களல்லவா நீங்கள்! "இக்கதையைப் பூராவாக நம்பாவிட்டாலும் ஓரளவாவது நம்பத்தான் வேண்டும்" என்று அழுத்தமாய் கூறுகிறார்—சமீபத்தில் பிரபலமாகியிருக்கும் கதாநாயகன் மனோஹர்.

உங்களுக்கு ஒரு கேள்வி: ஒரு அரை மணி நேரத்திற்குள். இருபது சப்பாத்திகள்; அல்லது ஒரு வீசை வெண்ணெய்; அல்லது இரண்டு டின் (இறுகிய) புட்டிப் பால்—இவைகளில் ஏதாவது ஒன்றை உங்களால் காலிசெய்ய முடியுமா! "முடியவே முடியாது; சாத்தியமே இல்லை" என்று நீங்கள் அடித்துச் சொல்கிறீர்கள். ஆனால், மனோஹரிடம் இந்தக் கேள்வியை கேட்டால், "ஏன் முடியாது; தாராளமாய்ச் செய்யலாம் அவ்வளவெதற்கு! நானே இதைச் செய்து காட்டியிருக்கிறேன்" என்று கூறுவார்.



சினிமாவுக்கு வருவதற்கு முன் மனோஹர் டில்லியில் சில காலம் இருந்தபோது ஒரு சாப்பாட்டுப் போட்டி ஏற்பட்டது. மனோஹர் அரைமணி நேரத்திற்குள் இருபத்தொன்பது சப்பாத்திகளைக் காலி செய்துவிட்டு போட்டியில் வெற்றி பெற்றார்! பிறகு ஒரு போட்டியில் ஒரு வீசை வெண்ணெயையும், மற்றொரு போட்டியில் இரண்டு டின் (இறுகிய) புட்டிப் பாலையும் சாப்பிட்டிருக்கிறார். இந்தக் காலத்திய மனோஹர் விஷயத்தையே உங்களால் நம்ப முடியாமலிருக்கும்போது, அந்தக் காலத்திய குண்டோதரன் கதையையா நீங்கள் நம்புவீர்கள்!

சிறுவர், சிறுமியர் ஒரு காரியத்தைச் செய்ய முடியாமல் விழிக்கும்போது, ''நன்றாக சாப்பிட மட்டும் தெரியுமா!''

வாழ்க்கை வர்ணனை

குண்டூசி

என்று கேட்பது வழக்கம். ஆனால், மனோஹரின் சாப்பாட்டுத் திறமையை அறிந்தவர்கள் இனி அந்தமாதிரி கேட்கமாட்டார்கள் என்று நினைக்கிறேன். சுலபமாக கருதப்படும் சாப்பாட்டு விஷயத்தையே மற்றவர்கள் பின்பற்ற முடியாத ஒரு தனிக் கலையாக மனோஹர் விருத்தி செய்திருக்கிறார் அல்லவா! ஆனால், இந்தக் கலை வளர்ச்சிக்கு—தற்போதைய உணவுப் பஞ்ச நிலைமையில் பொதுஜன ஆதரவோ சர்க்காரின் அங்கீகாரமோ கிடைக்காது! இனி மனோஹரின் நண்பர்கள் தங்கள் கல்யாணத்திற்கு அவரை 'மாப்பிள்ளைத் தோழனாக' அழைத்துச் செல்ல ஒருக்காலும் துணிய மாட்டார்கள் என்பது நிச்சயம்!

ராஜாம்பாள்

தஞ்சை ஜில்லாவில் நீடாமங்கலத்திற்கு அருகிலுள்ள பூவனூர் கிராமம்தான் மனோஹரின் சொந்த ஊர். அவர் செல்வமும் செல்வாக்கும் நிறைந்த ஒரு குடும்பத்தில் பிறந்தவர். மனோஹரின் தகப்பனாரான ஆர். சுப்ரமண்ய ஐயர் முதலில் தபால் ஆபீஸ் இன்ஸ்பெக்டராக உத்தியோகம் ஏற்று, முடிவில் அஸிஸ்டென்ட் பிரஸிடென்ஸி போஸ்ட் மாஸ்டர் பதவியிலிருந்து ரிடையர் ஆனவர்.

தாய் உள்ளம்

ஸ்ரீ. ஐயர் நாமக்கல்லில் உத்கியோகம் யார்த்துவந்தபோதுதான்—1925-ம் வருஷம் ஜூன் மாதம் 29-ந் தேதியன்று—மனோஹர் பிறந்தார். பிரசித்தி மிக்க நாமக்கல் நரஸிம்ம ஸ்வாமியின் பெயர்தான் அவருக்கு வைக்கப்பட்டிருக்கிறது. சினிமா உலகத்தினருக்கு மட்டும்தான் அவர் 'மனோஹரா'க விளங்குகிறார். இந்த அழகான பெயரை அவருக்கு அளித்து, சினிமா உலகில் அது பிரபலமாகும்படிச் செய்த பெருமை அருணா பில்ம்ஸாரையே சேரும்.

மனோஹருடன் பிறந்தவர்கள் மீனுக்ஷி, ஸ்வர்ணம்பாள் என்ற இரு தமக்கைகளும், ஸ்ரீநிவாஸன், வைத்யநாதன், சுகவனீஸ்வரன் என்ற மூன்று தம்பிகளும் ஆவர். மீனுக்ஷி மட்டும் முதல் மனைவியின் பெண். மற்ற ஐவரும் இரண்டாவது மனைவியான ராஜலக்ஷ்மி அம்மாளின் குழந்தைகள்.

மற்ற தொழில்களில் உள்ளவர்களைப் போலல்லாமல் சர்க்கார் உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு ஒரு பிரத்



மாமியார்

தியேகமான சங்கடம் உண்டு. அதாவது, அவர்களை ஊர் ஊராக மாற்றிக் கொண்டேயிருப்பதால், அவர்களுடைய குழந்தைகள் ஒரே ஊரில் ஒரே பள்ளியில் படிக்க முடியாமற் போய்விடுகிறது. சில சமயம் தங்கள் தாய் பாஷையை விட்டு விட்டு வேறு பாஷையில் படிக்க வேண்டிய நிர்ப்பந்தம் கூட ஏற்படுவதுண்டு. இதுபோன்ற நிர்ப்பந்தம் மனோஹருக்கு ஏற்பட்டது. நாமக்கல்லில் அவர் இரண்டாவது வகுப்பில் படித்துக்கொண்டிருந்தபோது தகப்பனர் பெல்லாரிக்கு மாற்றப் பட்டார். அங்குச் சென்றவுடன் தமிழ்ப் படிப்பை உதறிவிட்டு, தெலுங்கில் முதல் வகுப்பிலிருந்து படிக்க வேண்டியதாயிற்று. இப்படி ஐந்து வகுப்புகளில் படித்த பின் தந்தை சென்னைக்கு மாற்றப் பட்டார். அதன் விளைவாக, மனோஹர் சென்னையில் முதலில் முத்தய்யா செட்டியார் ஹைஸ் கூலிலும் பிறகு ராமகிருஷ்ண மிஷன் ஹைஸ்கூலிலும் சேர்ந்து படிக்கலானர். தம் தாய் பாஷையான தமிழை அவர் தாமாகவே கற்று, விருத்தி செய்து கொள்ள வேண்டியதாயிற்று. இவ்வளவு இடையூறுகள் ஏற்பட்ட போதிலும், நல்ல வேளையாக சறுக்கி விழாமல், பச்சையப்பன் கல்லூரியில் சேர்ந்து பி. ஏ. பரீக்ஷையில் தேற, பட்டம் பெற்றார்.

படிப்பு முடிந்தவுடனேயே அவருக்கு இம்பீரியல், டுபாக்கோ கம்பெனியில் ஒரு நல்ல உத்தியோகம் கிடைத்து விட்டது. அத்துடன் மேற்கு பாகிஸ்தான் தவிர இந்தியா பூராவிலும் (இக் கம்பெனி வேலையாக) சுற்றிப் பார்த்து வரும் பாக்கியத்தையும் பெற்றார். ஆனல் இரண்டு மூன்று வருஷங்களுக்குள்ளாகவே இந்த ஊர் சுற்றும் வேலையில் அவருக்கு சலிப்பு ஏற்பட்டு விட்டது. அதனுல் அவர் இந்த

தாய் உள்ளம்

தோட்ட வேலை

போஜா

நீந்தப் போகிறார்

வேலையை ராஜீநாமாச் செய்துவிட்டு, தபால் இலாகாவில் உத்தியோகம் தேடிக்கொண்டார்.

மனோஹர் பள்ளியில் படித்துக்கொண்டிருந்தபோதே நடிப்புக் கலையில் ஆசை கொண்டு விட்டார். முதல் பாரத்தில் படித்துவந்தபோது அவர் ஆங்கிலம், தெலுங்கு பாஷைகளில் நடத்தப்பட்ட ஓரங்க நாடகங்களில் கலந்து கொண்டார். பிறகு பெரிய நாடகங்களிலும் அவர் நடிக்கத் தொடங்கினார். அவர் முதன் முதலாக நடித்த பெரிய நாடகம் "ராஜ பக்தி" ஆகும். ராமகிருஷ்ணா பள்ளி மாணவர்களால் நடத்தப்பட்ட இந்த நாடகத்தில் அவர் தூர்ஜயன் வேஷத்தை ஏற்று நடித்தார். அதன் பிறகு, அவர் "வஸந்தா" என்ற சமூக நாடகத்திலும், பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் நடத்திய இரண்டு சம்ஸ்கிருத நாடகங்களிலும் நடித்திருக்கிறார்.

பள்ளி நாட்களில் ஏற்பட்ட நாடகப் பழக்கம் அதோடு நின்றுவிடாமல் உத்தியோக நாட்களிலும் அவரைத் தொடர்ந்தது. எழும்பூர் டிராமாட்டிக் ஸொஸைட்டி ஓய். எம். ஐ. ஏ., நடராஜா அமெச்சூர்ஸ் ஆகிய நாடக சபைகளின் நாடகங்களில் அவர் பங்கெடுத்துக் கொள்ளலானார். அந்த நாடகங்களில் அவர் பலதரப்பட்ட வேஷங்களை ஏற்று நடித்திருக்கிறார். ஆனால் பெண் வேஷங்களில் மட்டும் அவர் நடித்ததே கிடையாதாம்.

நாடகங்களில் மனதையும், உத்தியோகத்தில் கவனத்தையும் செலுத்திவந்த மனோஹரின் வாழ்க்கையில் 1951ம் வருஷத்தில் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டது. அந்த மறுமலர்ச்சிக்குக் காரணமே ஒரு "மறுமலர்ச்சி" நாடகம்தான். மியூஸியம் தியேட்டரில் ஒரு தடவையும், நாடகக் கழகத்தில் ஒரு தடவையும் நடந்த இந்த நாடகத்தை டைரெக்டர்களான ஏ. டி. கிருஷ்ணஸ்வாமியும், ஆர். எம். கிருஷ்ணஸ்வாமியும் பார்த்தனர். அவர்கள் நாடகம் பார்த்தது வெறுமனே பொழுது போக்கிற்காக அல்ல. அப்பொழுது "ராஜாம்பாள்" படத்தைத் தயாரிக்க முற்பட்டிருந்த அருணா பில்ம்ஸாருக்கு ஒரு புதுக் கதாநாயகனைத் தேடிப் பிடிக்கும் நோக்கத்துடனேயே அவர்கள் பார்த்தனர். மனோஹரின் நடிப்பு அவர்களுக்கு மிகப் பிடித்துப் போய்விட்டது. உடனே அவர்கள் "ராஜாம்பாள்" படத்தில் நடிப்பதற்கு மனோஹரை அழைத்தனர்.

(82-ம் பக்கம் பார்க்க)



குண்டூசியைக் கேளுங்கள்

சினிமா, நாடகம், நடனம், சங்கீதம் ஆகிய கலை சம்பந்தமாக உங்களுக்குள்ள சந்தேகங்களைத் தீர்ப்பதற்கே இந்தப் பகுதி ஏற்பட்டிருக்கிறது. யாருடைய மனமும் நோகாதபடி தமாஷாகவே பதிலளித்து, மேற்சொன்ன கலைகளை சீர்திருத்துவதே என்னுடைய நோக்கம் ஆகும்.

வினுப் பித்தன் (அச்சுவேலி, இலங்கை)

குரல் இரவல் வாங்கப் படுவதுபோல் நம் நக்ஷத்திரங்களுக்கு நடிப்பு இரவல் வாங்கப் பட்டால் என்ன?

அதாவது தற்போதைய (சில அல்லது பல) நக்ஷத்திரங்கள் நடிப்பு சூன்யமானவர்களாய் உள்ளனர்–என்று நீர் மறைமுகமாய்க் கூறுகிறீர்! ஆனல், பல நக்ஷத்திரங்களுக்கு கத்திச் சண்டை, குதிரை சவாரி, மோட்டார் ஓட்டுதல், நீந்துதல் போன்றவைகள் இரவல் வாங்கப் பட்டிருக்கின்றன. படம் முடிவதற்குள் சில நக்ஷத்திரங்கள் முறைத்துக் கொண்டு போயிருக்கின்றனர். அந்தமாதிரி சந்தர்ப்பங்களில் பட முதலாளிகள் 'டூப்ளிகேட்' நபர்களை வைத்து சாதுரியமாகப் படம் எடுத்துச் சேர்த்து மிருக்கிருர்கள்.

ஆர். ராமமூர்த்தி (கிர்க்கி, புனு-3)

ஜெமினியின் ''சன்ஸார்'' ஹிந்திப் படத்தில் நடிக்கும் புஷ்பவல்லியே ஹிந்தி பேசி யிருக்கிருரா?

இல்லை, அவர் பேசவில்லை; நடிப்புடன் சரி.

கே. முருகன் (பெருங்குளம்)

ஒரு ஆணுக்கு அழகு தருவது எது? ஒரு பெண்ணுக்கு அழகு தருவது எது? தெரிவிக்கவும்.

அதிக ஆடைகள் ஆண்களுக்கு அழகு தரும்; அவைகளே குறைவது பெண்களுக்கு அழகு தரும்.

எம். எஸ். சூசைமாணிக்கம் (கொழும்பு)

'காதல் கனிரஸம்' என்று சின்னப்பா பாடியிருக்கிருர். மஹாலிங்கமோ 'காதலை நம்பாதே' என்று பாடி யிருக்கிருர்! இவற்றில் எது சரி?

சின்னப்பா ஏ. ஆர். சகுந்தலாவைக் காதலித்துக் கைகூடிய பலனைப் பெற்ற

வாழ்க்கையில் இல்லையென்ருலும் பிள்ளை தூக்கும் பாக்கியத்தை பண்டாபாய் ''செல்லப் பிள்ளை''யில் பெற்று, இப்படி காட்சியளிக்கிருர்.

வர் அல்லவா! மஹாலிங்கம் யாரையேனும் காதலித்து ஏமாந்திருக்கக் கூடும்!

பி. எஸ். பழனிவேல் (மஸ்கேலியா)

ஜெமினி எஸ். எஸ். வாஸன் தாமே ஒரு கதையை எழுதிப் படம் எடுக்கக் கூடாதா?

வாஸன் முன்பு கதை எழுதிக் கொண்டிருந்தவர்தான். "சதிலீலாவதி" படக் கதை அவருடையதே. ஆனல், அவர் கதை எழுதுவதை நிறுத்தி கால் நூற்றூண்டு ஆகிவிட்டது. இப்பொழுது அவர் கதை எழுதும் நேரத்தில் ஒரு படத்தையே தயாரித்தாராளுல் லக்ஷக் கணக்கில் புரளுமே!

"முத்து" (திருவனந்தபுரம்)

மலையாளப் பத்திரிகைகள், ஹிந்திப் படங்கள் எவ்வளவு மோசமாயிருந்தாலும் புகழ்ந்தும், தமிழ்ப் படங்கள் எவ்வளவு நன்ருயிருந்தாலும் இகழ்ந்தும் வருவதேன்?

நெ. 96 ஸ்விஸ் மேக் 16 வருஷ உத்தரவாதம். க்ரோமியம் கேஸ், ரவுண்டு ஷேப், 6 ஜ¬. ரு. 16. சென்டர் செக. ரு. 18. லேடி ஸைஸ் ரு. 21. ரோ. கோ. ரு. 20. 15 ஜ¬. தட்டை ஷேப் ரு 26. பாக்கெட் கடிகாரம் ரு. 10. டைம்பீஸ் ரு. 16. ரிபீட்டர் ரு. 18.

நெ. 97. நீண்ட சதுரம் க்ரோ. 8 ஜ¬. ரு. 22. ரோ. கோல்டு ரு. 24. 17 ஜ¬. க்ரோ. ரு. 30. ரோ. கோ. ரு. 35.

நெ. 98. நீண்ட சதுரம். டன்னே வளைவு. க்ரோ. கேஸ். 9 ஜ¬. ரு. 26. ரோ. கோ. ரு. 28. சிறந்தது ரு. 30. 17 ஜ¬. க்ரோ. ரு. 38. 17 ஜ¬. ரோ. கோ. ரு. 40. பாக்கிங், தபாற் செலவு ரு. 1-4-0

பாக்கெட் பிரஸ். பெயர் விலாசம், கடிதம் லேபிள். நிகழ்ச்சிக் குறிப்பு ஆகியவைகளை வீட்டிலேயே அச்சடிக்கலாம். நெ. 8 : ரு. 1-8-0. நெ. 9 : ரு. 2-4-0. ஸ்பெஷல் ரு. 2-12-0. சிறந்தது ரு. 3-4-0. பெரிய அளவு உயர் ரகம் ரு. 4-8-0.

தபாற் செலவு ரு 1-4-0

FRENCH COMMERCIAL STORES (GK-1)
Post Box No. 12216, CALCUTTA-5.

'தூரத்துப் பச்சை கண்ணிற்கு அழகு' என்ற பழமொழிப்படி நடந்து கொள்ளுவதிலிருந்து மலையாளத்தில் பத்திரிகைத் தொழில் ஆரம்ப தசையிலிருப்பதாக ஊகிக்க வேண்டியிருக்கிறது. தமிழ்ப் பத்திரிகைகள்கூட முன்பெல்லாம் இப்படித்தான் செய்து வந்தன.

"தமிழ்ப் பித்தன்" (சிங்கப்பூர்)

இதுவரை வெளிவந்துள்ள தமிழ்ப் படங்களில் சிறுவர் சிறுமியர் பார்க்கத் தகுந்தவை எவை?

சென்ற பத்து வருஷங்களாகத்தான் 'ஸெக்ஸ் அப்பீல்' நம் படத்தொழிலில் தலைவிரித்தாடத் தொடங்கியிருக்கிறது. அதற்கு முன்பெல்லாம் படங்கள் (தரத்தில் கொஞ்சம் குறைந்திருந்தாலும்) ஆபாசக் கலப்பற்றவையாய்—குழந்தை, பெரியோர், யாவரும் பார்க்கக்கூடியவையாய் இருந்தன.

யோ. அருள் பிரகாசம் (கொழும்பு)

வஸந்த குமாரி, பெரிய நாயகி, கோமளா, ஜானகி, லீலா, 'ஜிக்கி'—ஆகியோரில் தற்போது பின்னணிப் பாட்டில் யார் முன்னணியில் நிற்கிருர்?

பி. லீலாவே முதன்மை ஸ்தானம் வகிக்கிருர்.

கே. எம். நிஸார்தீன் (கண்டி)

எம். கே. டி. பாகவதர் நடிப்பதாக அறிவிக்கப்பட்ட "புது வாழ்வு" என்ன ஆயிற்று? தயாராகி வருகிறதா?

மெதுவாக தயாராகி வருகிறது.

கே. ரகுபதி (கும்பகோணம்)

தற்போதெல்லாம் எம். கே. டி. பாகவதர் நடிக்கும் படங்கள் தோல்வியுற்று வருவதின் காரணம் என்ன?

பாகவதர் பழங்காலப் பாத்திரங்களுக்கே தம்மைத் தகுதி உடையவராக்கிக் கொண்டிருக்கிருர். ஆனல், தற்போதோ ரஸிகர்கள் தற்காலக் கதைகளையே விரும்பி வரவேற்று வருகின்றனர். இது ஒருபுறமிருக்க. "முன்போலவே பிரமாதமான வெற்றிபெற வேண்டும்" என அவர் அபாரமான கவலைப்படுவதே தோல்விக்கு முக்கிய காரணமாயிருக்கலாம்!

• • •

"உண்மையின் வெற்றி" என்ற படம் ஏன் வெளிவரவில்லை?

'வெளிவரவில்லை' என்று கூறுவது உண்மைக்கு மாருக இருக்கும். "உண்மை

யில் வெற்றி"பெற முடியாமல் இப்படம் தோல்வி அடைந்துவிட்டது என்பதை இப்பொழுதேனும் தெரிந்துகொள்ளும்.

எம். சம்பங்கி ராமய்யா (பங்களூர்)

எம். கே. தியாகராஜ பாகவதரும், எம். எஸ். சுப்புலக்ஷ்மியும் சேர்ந்து, ஜெமினியில் " கனவின் காதலி " என்ற படத்தில் நடிக்கப் போவதாகக் கேள்விப் பட்டேன். இச் செய்தி உண்மைதானா?

இது செய்தியுமல்ல ; உண்மையுமல்ல. வேண்டுமானால் நீர் இதைக் கனவில் கண்ட கனவாக வைத்துக்கொள்ளலாம்.

" கேள்விப் பிரியன் " (திருநெல்வேலி)

"நடிகன் கட்சி சார்பற்றவன். படத்திற்காக நான் ஏதேதோ வசனங்களைப் பேச வேண்டி வரலாம். அதனாலே நான் அந்தக் கொள்கையை உடையவன் அல்ல" என்று 'பராசக்தி' கணேசன் சொல்கிறாரே. அப்படியானால், சொந்தக் கொள்கைகளை விட்டு விட்டு பணத்திற்காக எது வேண்டுமானாலும் செய்வாரா?

கணேசன் சொன்னது முற்றிலும் சரியானதே. இல்லாததைத் தத்ரூபமாய் நடித்துக் காட்டுவதுதானே சிறந்த நடிப்பு? மேலும் கொலைகார வில்லனாக

"எஸ். வி. வி. பந்துலுவின் பலம்தான் மூக்கிலேயே குளிர்ந்து போயிருக்கிறதே; அந்த 'கூல்டிரிங்'கை எதற்காகக் கொடுக்கிறார் மாதுரி? ஜூபிடரின் "மனிதன்" படத்தில்.

நடிக்கும் ஒரு நடிகனையே நாம் வில்லனாக நினைப்பது மடமையல்லவா! அவரே சொந்தத்தில் படம் தயாரிக்க முற்படும் வரையில் மேற் சொன்னது போன்ற குறைகளுக்கெல்லாம் நாம் அவரைக் குறைகூற முடியாது. எய்தவனிருக்க அம்பை நொந்துகொள்ளுவது சரியா?

கே. பெருமாள் (மஸ்கேலியா, இலங்கை)

நடிகையை .....நான் படத்தில் பார்த்த



அடேயப்பா! என்ன ஆச்சரியமோ தெரியவில்லையே! ஏவி. எம்.மின் "செல்லப் பிள்ளை"யில் கே. ஆர். ராமசாமியும், பண்டரி பாயும் இவ்விதம் தோன்றுகின்றனர்.

திலிருந்து யாராவது அந்த நடிகையின் பெயரை என் காது கேட்கச் சொல்லி விட்டால் என் உயிர் போய் விடும்போல் ஆகிவிடுகிறது. நீங்கள்தான் இதற்கு ஒரு வழி சொல்ல வேண்டும்.

ரஸிகர்கள் தங்களுக்காக உயிரைவிட வேண்டும் என்பதற்காகத்தான் நம் நடிகைகள் உயிரைக்கொடுத்து உழைக்கிறார்கள்! ஆதலால் நீர் உயிரை விட்டுவிட்டால்கூட நான் ஆச்சரியப்படமாட்டேன். ஆனால், இந்த நக்ஷத்திரங்களை மணந்துகொண்டு, பிறகு அவர்களை மறப்பதற்காக உயிரை விடுவதைவிட, இப்பொழுதே அவர்களை நினைத்துக்கொண்டு நீர் உயிர்விடுவதே மேல் என்று எனக்குத் தோன்றுகிறது!

சி. எம். தம்பித்துரை (கொழும்பு)

பாலச்சந்தர், கே. ஆர். ராமசாமி, எம். ஜி. ராமச்சந்திரன், 'பராசக்தி' கணேசன்—இந்த நால்வரில் வசனம் பேசுவதில் சிறந்தவர் யார்?

'பராசக்தி' கணேசன்தான் என்று தாராளமாய் சொல்லலாம்.

சுருளிவேல் (மார்க்கையன் கோட்டை)

சின்னப்பா மரணத்தால் ஏற்பட்ட ஸ்தானத்தைக் கைப்பற்ற முயற்சித்து வரும் நடிகர் யார்?

உயரம், பருமன், பாணி, பாட்டு, நடிப்பு எல்லாவற்றிலும் கே. ஆர். ராமசாமி சின்னப்பா ஆகிவிட வேண்டுமென்று முயலுகிறார். ஆனால், அது வீண்முயற்சி என்றுதான் எனக்குத் தோன்றுகிறது.

சின்னப்பன் (அம்பாசமுத்திரம்)

லலிதா, பத்மினி, ராகினி—இம் மூவரில் யார் நன்றாக நடிக்கக் கூடியவர்? அழகில் சிறந்தவர் யார்? இவர்கள் எந்த ஜாதியைச் சேர்ந்தவர்கள்?

நாயர் ஜாதியைச் சேர்ந்த இம் மூவரிலும் பத்மினியே அழகு மிகுந்தவர். விறுவிறுப்பான பாத்திரங்களில் லலிதாவும், அமைதி மிகுந்த பாத்திரங்களில் பத்மினியும் நன்கு சோபித்து வருகின்றனர்.

கனவில் பாடிய-'புதுப் பெண்ணின் மனசைத் தொட்டு விட்டுப் போறவரே' என்று பாடும் பாட்டை குணசேகரனுக்கு சொல்லிக் கொடுத்தவர் யார்?

அந்தப் பராசக்தியைத் தவிற வேறு யாராய் இருக்க முடியும்!

கந்தன்குட்டி (கல்முனை, இலங்கை)

எம். ஜி. ராமச்சந்திரன், ரஞ்சன் இவ்வருவரில் கத்திச் சண்டையில் சிறந்தவர் யார்?

உஷ்! கத்தி விஷமமய்யா, இது! கத்திப் பேசாதேயும்! இருவரையும் மோதச் செய்துவிட்டுத் தீர்மானிக்க வேண்டிய விஷயம் அல்லவா இது?

எஸ். வி. வி. டி. (புதுச்சேரி)

ஹாஸ்ய நடிகர்களுக் குள்ளேயே உங்களுக்கு யாரை அதிகம் பிடிக்கும்?

காமெடியன் சாரங்கபாணியைத்தான். காரணம்; அவர் தம் உன்னத நடிப்பைப் படத்துடன் நிறுத்திவிட்டு, நேரில் இயல்பான (நல்ல) குணத்துடன் பழகுகிறார்.

ஆர். கோவிந்தசாமி (ஆண்டர்ஸன் பேட்டை)

மாதுரி தேவி, எஸ். ஏ. நடராஜன் இவர்களுடைய விலாஸங்களைத் தெரிவிக்கவும்.

C/o மதருஸ் ஆர்ட் புரடக்ஷன்ஸ், மாசிலாமணி தெரு, தியாகராய நகர், சென்னை-17—என்று எழுதினால் கடிதம் போய்ச் சேர்ந்து விடும்.

• • •

சினிமா சம்பந்தமாக உங்களிடம் கேள்வி கேட்கும் எங்களைப் போன்ற ரஸிகர்களைப் பற்றி நீங்கள் உண்மையாக என்ன நினைக்கிறீர்கள்?

உலகமாய்கையால் தவிப்பவர்களைவிட அதிகமாய் 'சினிமா மாய்கை'யால் தவிக்கிறார்களே இந்த ரஸிகர்கள் என்ற பச்சாதாபம்தான்.

ஜி. வி. துரைராசா (யாழ்ப்பாணம்)

குண்டுசியாரே! உமக்கு விவாஹம் ஆகிவிட்டதா? குழந்தைகள் உண்டா?

விவாஹம் எனக்கு ஒரு மஹா மஹத்திற்கு மேற்பட்ட பழைய விஷயம். இந்திய சர்க்கார் தீர்த்து வைக்கத் திவிரமாய் முயன்று கொண்டிருக்கும் உணவுப் பிரச்னையில் என் மூன்று குழந்தைகளுக்கும் கூடப் 'பங்கு' உண்டு!

ஏ. செல்லப்பன் (தக்கலை)

'பராசக்தி'யில் விமலா

சோபா பிலிம்ஸாரின் "பரோபகாரம்" தமிழ்ப் படத்தில் ஜி. வரலக்ஷ்மி.

எஸ். அப்பாஸ் (வடலிவிளை)

பக்ஷிராஜா, நியூடோன் ஆகிய ஸ்டுடியோக்களின் விலாஸங்களைத் தெரிவிக்க முடியுமா?

பக்ஷிராஜா ஸ்டுடியோ, கோயமுத்தூர் —என்று எழுதினாலே போதும். நியூடோன் ஸ்டுடியோ—சென்னை கீழ்ப்பாக்கத்தில் உள்ளது.

எஸ். கே. ஹாஜா முகீதீன் (அதிராம்பட்டினம்)

மஹாலிங்கம், என். டி. ராமராவ், எம். ஜி. ராமச்சந்திரன், நாகேஸ்வர ராவ், நரசிம்ம பாரதி, எம். கே. டி. பாகவதர்—இவர்களில் முக அழகில் மிகச் சிறந்தவர் யார்?

உம் கண்களை இரவல் கொடுத்திருக்கிறீரோ? இந்த விஷயத்தை நீரே பார்த்துத் தீர்மானித்துக் கொள்ளலாம் அல்லவா!

பி. தி. செல்வம் (வட இலங்கை)

எம். கே. ராதா, எம். ஜி. ராமச்சந்திரன், இருவரில் நடிப்பில் சிறந்தவர் யார்?

எம். கே. ராதாதான்.

ஆ. நாகலிங்கம் (கொழும்பு)

ஏவி. எம். ஸ்டுடியோவின் விலாஸத்தை தயவு செய்து தெரிவிக்கவும்.

ஏவி. எம். ஸ்டுடியோ, சென்னை—26 என்று எழுதினால் கடிதம் சேர்ந்துவிடும்.

எம். கே. எஸ். (புல்கான்)

டி. ஆர். மஹாலிங்கம் சமீபத்தில் வெளியிட்ட படம் ஆபாசமாகவும், சமூக சீர்திருத்தம் இல்லாத தாகவும் இருக்கக் காரணம் என்ன?

அவர் சமூகத்தைச் சீர்திருத்துவது இருக்கட்டும். அவர் முதலில் சுயச் சீர்திருத்தம் செய்து கொள்ளட்டும்!

எம். கே. பழனியாண்டி (இலங்கை)

கிருஷ்ண குமாரிக்கு விவாஹம் ஆகிவிட்டதா? அவரது விலாஸம் என்ன?

கிருஷ்ணகுமாரி இன்னும் குமாரியாகவேதான் இருக்கிறார். விலாஸம்:—

என். டி. ராமராவ் (சகஸ்ரநாமம் சாட்சியாக) லலிதாவுக்கு மாலை சூட்ட வரும் இந்தக் காட்சியை கிருஷ்ணா பிக்சர்ஸாரின் "மருமகள்" தமிழ்ப் படத்தில் காணலாம்.

நெ. 11 மூஸாசேட் தெரு, தியாக ராய நகர், சென்னை–17.

இ. சுவாமி அய்யா(மாவியக்காடு)

பி. கே. சரஸ்வதிக்கு விவாஹம் ஆகிவிட்டதா? விலாஸம் என்ன?

இன்னும் இல்லை. சரஸ்வதி மட்டும் மணந்து கொள்ளப் போவதாக துளி தெரிவித்தால் போதும்; எத்தனையோ பேர்கள் 'பிரம்ம பிரயத்தனம்' செய்யத் தயாராய் இருப்பார்கள்! விலாஸம்: புதுப்பேட் கார்டன் தெரு, ராயப்பேட்டை, சென்னை-14.

ஜி. மைக்கேல் (குருநாக்கல்)

என் கல்யாணத்தின் போது லலிதா, பத்மினி சகோதரியரை நடனம் ஆட அழைத்தால் வருவார்களா?

இந்தக் கேள்விக்கு நான் பதில் அளிப்பதற்கு முன் உம்மிடம் நிறைய "சல்லி" இருக்கிறதா என்று பார்த்துக்கொள்ளும்.

இராம. சோமசுந்தரம் (புதுக்கோட்டை)

பட முதலாளிகள் "கதை யில்லை, கதையில்லை" என்று கதறுகிறார்களே. கல்கியின் "சிவகாமியின் சபதம்", "பார்த்திபன் கனவு" போன்ற நல்ல கதைகளை ஏன் படமாக்க யாரும் முன் வரவில்லை?

"வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்க்கு அழும்" வழக்கம்தான் நம் பட முதலாளிகளிடம் ஊறிப்போன விஷயம் ஆயிற்றே! இல்லையென்றால், நம் தமிழ்ப் படங்களில் மாதிரிக்குக்கூட ஒரு அசல் தமிழ் கதாநாயகி இல்லாத நிலைமை ஏற்பட்டிருக்குமா?

• • •

சில தினங்களுக்கு முன் வெளிவந்திருக்கும் "பெண் மனம்" படத்தின் கதை—சமீபத்தில் பரிசு பெற்ற "லக்ஷ்மி"யின் கதையா?

இல்லையில்லை. ஒருவர் முன்பே எழுதிப் பிரபலமான பெயரை மற்ற கதாசிரியர்கள் ஸ்வீகரித்துக்கொண்டு கதை எழுதுவதும், அதைத் தயாரிப்பாளர்கள் படம் தயாரிப்பதும் படம் பார்ப்பவர்களை ஏமாற்றுவதற்கான வெறுக்கத்தக்க முயற்சிகளே ஆகும்.

கிருஷ்ணகுமாரியும், டி. கே. பகவதியும் இப்படித் திருமணக் கோலத்தில் காட்சியளிக்கப் போவது ஜுபிடர்—லாவண்யாவின் "மனிதன்" படத்தில்.

ஏ. பி. எஸ். தியாகராஜன் (காவத்தை)

நம் படங்கள் எல்லாவற்றிலும் காதலே சித்தரிக்கப் படுகிறதே. காதலைப் படங்களிலிருந்து ஒழித்து விட்டால்?...

காதல் ஒழிந்தால் நம் படத்தொழில் சாதல் நிச்சயம்!

என். ராதாகிருஷ்ணன் (கோரடாச் சேரி)

வான நக்ஷத்திரங்களுக்கும், திரை நக்ஷத்திரங்களுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகள் என்ன?

இரண்டும் லக்ஷக் கணக்கில்—முந்தியவை வானத்திலும், பிந்தியவை பணத்திலும்—இருக்கின்றன! வெளிக்கிளம்பியதும் கையெழுத்து வேட்டைக்காரர்களோ ரஸிகர்களோ வான நக்ஷத்திரங்களைச் சூழ்ந்து கொள்ளுவதில்லை. ஆனால், திரை நக்ஷத்திரங்கள் வெளிக் கிளம்பினால் ரஸிகர்கள் அவர்களைத் திணர அடித்துவிடுகிறார்கள்.

"மானத்தோடு வாழவேண்டும்" என்று என். எஸ். கே. அந்த நடனமணிகளுக்கு உபதேசம் செய்கிறாரோ? —"பணம்" என்ற தமிழ்ப் படத்தில்.

ரஸிகர்களின் எண்ணிக்கைக்கேற்பவான நக்ஷத்திரங்களின் 'பிரகாசம்' அதிகரிப்பதில்லை. ஆனால், திரையுலக நக்ஷத்திரங்களுக்கோ ரஸிகர்களின் கூட்டம் அதிகரிக்க அதிகரிக்க 'பிரகாசம்' அதிகரிப்பதைக் காணலாம்.

பி. பெரியசாமி, (நோர்ட்டன் பிரிட்ஜ், இலங்கை)

நான் ஒரு மாணவன்; எனக்கு வயது 15. டைரெக்ஷன் வேலையைப் பழக ஆவல் கொண்டிருக்கிறேன். இது ஈடேறுமா?

கனவுகளுக்கு பரீக்ஷையில் மார்க் கிடைக்காது. ஆதலால் மார்க் விஷயத்தை முதலில் கவனியும். பிறகு இருக்கவே யிருக்கிறது, கனவு காணும் விஷயம்.

எஸ். செல்லையா (திருநெல்வேலி)

எம். கே. டி. பாகவதரின் வாழ்க்கை வர்ணனையை ஏன் நீங்கள் பிரசுரிக்கவில்லை? எப்பொழுது வெளியிடுவீர்கள்?

நான் இதை "குண்டூசி"யின் முதல் ஆண்டு மலரில் வெளியிட்டுள்ளேன். இப்பொழுது வேண்டுமானால் நீங்கள் என்னுடைய "நட்சத்திரமாலை-2" புத்தகத்தை வாங்கிப் படியும். அதில் மற்றும் பல பிரபல நக்ஷத்திரங்களின் வாழ்க்கை வரலாறுகளும் அடங்கியிருக்கின்றன.

ராஜலக்ஷ்மி (சைதாப்பேட்டை)

தினமணி "கதிர்" பத்திரிகையில் சினிமா விமர்சனம் செய்யும் "என். ஆர்." என்பவர் யார்?

அதன் ஆசிரியர் என். ராமஸ்வாமி.

ஏ. கே. ராமமூர்த்தி (மதுரை)

பானுமதி என்ன நிறமுடையவர்?

ரோஜா சிவப்பு நிறமுடையுவர் அவர்.

• • •

தமிழ்ப் பட உலகில் பின்னணி பாடுவோரில் ஒரு பாட்டுக்கு அதிகப் பணம் வாங்கியவர் யார்?

டி. கே. பட்டம்மாள் தான் என்று நினைக்கிறேன்.

ஜுபிடர்-மேகலா தயாரிப்பான ''கன்னி''
தமிழ்ப் படத்தில் பி.கே. சரஸ்வதி.



மனோஹர்
(பொன்வயல்)

கேமிரா மேதை கே. ராம்னுத்

‘குதூகலன்’

‘ஒரு ஆளைப் பார்த்தே அவர் எப்படிப் பட்டவர் என்பதை எடைபோட்டு விடலாம்’ என்று சொல்வது வழக்கம். ஆனல், பட உலகில் ஒருவர் விஷயத்தில் அது முடியாத காரியம்; அந்த ஒருவர் தான் டைரெக்டர் கே. ராம்னுத். மிகக் குள்ளமாக, பெரிய கண்களை மறைக்கும் தடித்த மூக்குக் கண்ணுடியுடன், சட்டைக்கு மேல் வேஷ்டி கட்டியபடி காட்சி அளிக்கும் அவரை முதன் முதலில் சந்திக்கும் யாரும், “இவரா அந்த அசகாய சூரர்?” என்று ஆச்சரியப்படாமல் இருக்க முடியாது.

தச்சு வேலையா; ஆடை ஆபரணங்கள் விஷயமா; ஒலிப் பதிவு விவகாரமா; இன்னும் படத் தயாரிப்பில் சம்பந்தப்பட்ட எது விஷயமாக ஆனுலும் சரி, ஏற்படும் சந்தேகங்களைப் பற்றி பதில் கூறக் கூடிய—நன்ருக மனதில் பதியும்படி எடுத்து விளக்கக் கூடிய—ஒரே ஒரு நபர்தான் நம் படத் துறையில் உண்டு என்று சொல்லலாம். அந்த நபர் தான் பிரபல ‘கேமிரா மேதை’யாக இருந்து டைரெக்டராகி யிருக்கும் கே. ராம்னுத். இன்று படத் துறையில் இவர் ஒரு பிரபல மனிதராக மதிக்கப்பட்டு வருகிருர். ஒரு சிலரைப் போல அதிருஷ்டத்திஞலோ, அல்லது பிறரைக் காலை வாரி விட்டோ இவர் முன்னேறியவர் அல்ல. தமது திறமையினுல், முயற்சியினுல் உன்னத ஸ்தானத்தை அடைந்தவர் என்பது அவரது வாழ்க்கையைப் பார்க்கும் போது நன்கு தெரிகிறது.

ராம்னுத் 1912-ம் வருஷம் டிஸம்பர் மாதம் 8-ம் தேதி பிறந்தவர். அவரது தந்தை பி. கிருஷ்ண அய்யர் ஹெட்மாஸ்டர் உத்தியோகம் பார்த்தவர். திருவனந்தபுரம்தான் அவரது சொந்த ஊர். அவரது தாய் மொழியும் தமிழ் தான். 1932-ம் வருஷம் திருவனந்தபுரம் காலேஜில் பி. ஏ. பரீக்ஷையில் தேறினுர்.

கல்லூரியில் படிக்கும் காலத்திலேயே போட்டோகிராபியில் அவருக்கு ஆசை விழுந்தது. ‘சினிமாத் துறையில் முன்னுக்கு வர நிறைய இடம் இருக்கிறது. அந்தத் துறையில்தான் வேலைக்குப் போக வேண்டும்’ என்று சங்கல்பம் செய்து கொண்டிருந்தார் அவர். ஆகவே, கல்லூரிப் படிப்பு முடிந்ததும், உள்ளூரில் உள்ள ஒரு ‘கோடக்’ வியாபாரியிடமிருந்து கோடக் கம்பெனிக்கு ஒரு சிபார்சுக் கடிதத்துடன் சென்னைக்கு 1932-ம் வருஷத்தில் வந்தார்.

கோடக் கம்பெனியில், அவர்களுடைய லாபரெட்டரியில் வேலை கற்றுக் கொள்ள ஆரம்பித்தார். கோடக் கம்பெனி மானேஜர் அவரை ஒரு நல்ல இடத்தில் அமர்த்தவென, வட நாட்டில் அப்பொழுது பிரபலமாக இருந்த பிரபாத் போன்ற பல ஸ்டுடியோக்களுக்கு எழுதி முயற்சி செய்தார்கள். ஆனுல், பலன் எதுவும் கிட்டவில்லை. அந்த சமயத்தில், டைரெக்டர் ‘முருகதாஸா’வை ஆசிரியராகக் கொண்டு “ஸவுண்ட் அண்டு ஷாடோ” என்ற ஆங்கில சினிமாப் பத்திரிகை நடந்து வந்தது. ராம்னுத், ‘முருகதாஸா’வின் நட்பைப் பெற்று, அப்பத்திரிகையில் கட்டுரைகள் எழுதி வரலானுர். அப்பொழுது தான் அவருக்கு ஏ. கே. சேகரும் நண்பரானுர். அது முதல் ராம்னுத்-சேகர்-முருகதாஸா மூவரும் ஒன்ருயினர்.

1933-ம் வருஷம். அப்பொழுது சினிமா சென்ட்ரல் கொட்டகையை நடத்தி வந்தவர்களுக்கு ஒரு படம் தயாரிக்க வேண்டுமென்ற எண்ணம் ஏற்பட்டது. அந்த வருஷம் மே மாதம் “சீதா கல்யாணம்” என்ற படத்தைத் தயாரிக்க அவர்கள் புனு பிரபாத் ஸ்டுடியோவுக்குக் கிளம்பிப் போனுர்கள். அந்த கோஷ்டியில் ராம்னுத்-சேகர்-முருகதாஸா மூவரும் இடம் பெற்றனர். பாழு

ராவ் பெண்டர்கார் டைரெக்ட் செய்த இப்படத்தில் அவருக்கு உதவியாக வேலை செய்ததுடன், கதை, வசனம் எழுதுவதி லும் பங்கெடுத்துக் கொண்டார் ராம் னுத். இப்படம் 1934-ம் வருஷம் பிப்ர வரி மாதம் திரையிடப்பட்டது.

இதன் மத்தியில் மேற்படி படத் தயா ரிப்பாளர்கள் ஒன்று சேர்ந்து சென்னை யிலேயே ஒரு ஸ்டுடியோவை ஆரம்பிப்ப தற்கான முயற்சிகளில் ஈடுபட்டார்கள். அதன் விளைவாக வேல் பிக்சர்ஸ் ஸ்டுடி யோ ஆரம்பமாயிற்று. அங்கு முதன் முதலாக "சீதா கல்யாணம்" தெலுங்கில் தயாரிக்கப்பட்டது. இதுதான் ராம்னுத் முதன் முதல் ஒளிப்பதிவு செய்த படம். அதன்பின், "கிருஷ்ண லீலா" (தெலு ங்கு), "மார்க்கண்டேயர்" (தமிழ்) படங் கள் அங்கு தயாரிக்கப்பட்டன. இப் படங்களின் கேமிராமேன் ராம்நாத் தான். இப்படங்கள் முடிந்ததும், கம் பெனியில் ஆந்திரர்-தமிழர் என்ற தக ராறு ஏற்பட்டு ராம்னுத் அங்கிருந்து விலகினர்.

அதன் பின்னர் 1935-ம் வருஷம், கிரு ஷ்ணு பில்ம்ஸார் "பாதுகா பட்டா பிஷேகம்" என்ற தமிழ்ப் படத்தைத் தயாரித்தனர். அப்படத்தை டைரெக்ட் செய்த "முருகதாஸா" விடம் உதவி டைரெக்டராக வேலையில் அமர்ந்தார் ராம்னுத்.

1936-ம் வருஷம் ராம்னுத்-சேகர்-முருகதாஸா மூவரும் முன் நின்று, வேறு ஐந்து பாகஸ்தர்களைச் சேர்த்துக் கொண்டு 'கார்த்திகேயா பில்ம்ஸ்' என்ற ஸ்டுடியோவை ஆரம்பித்தார்கள். இங்கு தான் முருகதாஸாவின் டைரெக் ஷனில் "சுந்தரமூர்த்தி நாயனுர்" தமிழ்ப் படம் தயாரிக்கப்பட்டது. ராம் னுத் இப்படத்தின் ஒளிப் பதிவாளர். படம் தோல்வியுற்றுலும், இப்படத்தில் சில காட்சிகளை அருமையாக ஒளிப்பதிவு செய்து, தாம் ஒரு சிறந்த கேமிரா நிபு ணர் என்பதை வெளிப்படுத்தினர் ராம் னுத். இதே ஸ்டுடியோவில் தான் "கிருஹ லக்ஷ்மி" தெலுங்குப் படமும் தயாரிக் கப்பட்டது. இப்படத்திலும் ராம்னுத் தின் கேமிரா வேலைக்கு நல்ல பெயர் கிடைத்தது.

"வாஹினி" என்ற பெயரை வைக் கலாமென யோசனை கூறியதே ராம்னுத் தானும். 1938-ம் வருஷம் வாஹினி பிக் சர்ஸ் ஆரம்பிக்கப்பட்டது. இக்கம்பெனி யில் ராம்னுத் ஒளிப் பதிவாளராகவும், கதாசிரியராகவும் சேர்ந்தார். லாபத்தில் பங்கு பெறும் ஒரு பாகஸ்தராகச் சேர்ந் தார் என்பது குறிப்பிடப்பட வேண்டிய விஷயம். "வந்தே மாதரம்", "சுமங் கலி", "தேவதா", "போதனு" ஆகிய நான்கு வாஹினிப் படங்களும் பிரமாத மான வெற்றி பெற்றன. அவைகளின் ஒளிப்பதிவு படத் துறையில் உள்ளவர் களின் — பத்திரிகைகளின் ஏகோபித்த பாராட்டுதலைப் பெற்றது. 1942-ம் வருஷம் ஜப்பான் படையெடுப்பு பயம் ஏற்பட்டு, சென்னையில் சங்கு ஊதப் பட்டதும், வாஹினி பிக்சர்ஸார் தாட் பத்ரி என்ற ஆந்திர நகருக்கு மூட்டை கட்டி விட்டார்கள். ராம்னுத்தும் அவர் களுடன் சென்று "போதனு" படத்தின் எடிட்டிங் வேலைகளில் உதவி செய்து விட்டு வந்தார்.

அந்த சமயம் தான் அவருக்கு ஜெமினி ஸ்டுடியோவிலிருந்து அழைப்பு வந்தது. 1942-ம் வருஷம் மே மாதம் அவர் ஜெமினி ஸ்டுடியோவில் 'டைரெக்டர் ஆப் புரொடக்ஷன்ஸ்' என்ற ஸ்தானத் தில் பொறுப்பேற்ருர். அப்பொழுது ஜெமினியில் தயாராகி முடிவடையும் தரு வாயிலிருந்த "பால நாகம்மா" தெலுங் குப் படத்தின் நகாஸ் வேலைகளை அவர் செய்து கொடுத்தார்.

அது முடிந்ததும் "மங்கம்மா சபதம்" பட வேலையை எடுத்துக் கொண்டார். இப்படத்தை ஒளிப் பதிவு செய்தவரும் அவர் தான். ஒளிப்பதிவில் பிரமிக்கத் தக்க சில முறைகளை இப்படத்தில் அவர் கையாண்டிருந்தது வாசகர்களுக்குத் தெரியும். அவர் ஜெமினி ஸ்டுடியோ நிர் வாகத்தில் சில நல்ல மாறுதல்களைச் செய்தார். "மங்கம்மா சபதம்" முடி வுற்றது முதலே, ராம்னுத்துக்கும் ஜெமினி அதிபர் எஸ். எஸ். வாஸனுக் கும் படத் தயாரிப்பு விஷயமாக அபிப்பி ராய பேதங்கள் ஏற்பட்டன. ராம் னுத், 'குறைந்தது, வருஷத்திற்கு ஆறு படங்களாவது தயாரிக்க வேண் டும்' என்று வற்புறுத்தி வந்தார். ஆனல், ஜெமினி அதிபரின் அபிப்பிராயமோ இதற்கு மாருக இருந்தது.

"கண்ணம்மா என் காதலி" படம் சுப்புவால் டைரெக்ட் செய்யப்பட்டது

என்றாலும், முழுக்க முழுக்க சிரத்தையெடுத்துக் கொண்டு சிரமப் பட்டவர் ராம்னுத்தான். "சந்திரலேகா" படத்தின் ஸர்க்கஸ் காட்சிகள் பூராவையும் ராம்னுத்தான் ஒளிப் பதிவு செய்தார். ஜெமினியில் தயாரிக்கப்பட்ட "கல்பனா" முழு நடனப் படத்தின் மூலம் ராம்னுத் சிறந்த கேமிரா மேதை என்று அகில உலகப் புகழ் பெற்றார்.

1948-ம் வருஷம் சுதந்திர தினத்தன்று (ஆகஸ்ட், 15-ம் தேதி) ராம்னுத் ஜெமினி ஸ்டுடியோவிலிருந்து விலகினார். அவர் விலகக் காரணம், ஒரு வேலையும் இல்லாது சம்பளம் வாங்கிக்கொண்டு சும்மா பொழுதைப் போக்கிக் கொண்டிருக்க மனமில்லாதது தான்.

உடனடியாக அவர் ஜுபிடர் பிக்சர்ஸாரால் இரண்டு படங்களை டைரெக்ட் செய்ய ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டார். ஜுபிடரின் "மோஹினி" அப்பொழுது முடிவடையும் நிலையில் இருந்தது. அதன் டைரெக்டரான லங்கா சத்யத்துடன் சேர்ந்து படத்தின் வெற்றிக்கு சில நல்ல மாறுதல்களைச் செய்தார். பிறகு, ஜுபிடருக்காக "கன்னியின் காதலி", "மர்மயோகி" ஆகிய இரு படங்களையும் அவர் டைரெக்ட் செய்து கொடுத்தார். இடையில் நாராயணன் கம்பெனிக்காக "ஏழைபடும் பாடு" படத்தையும் டைரெக்ட் செய்தார்.

நாராணயன் கம்பெனியின் "தாயுள்ளம்" படத்தை டைரெக்ட் செய்தார். படம் மிகவும் சிறப்பாக இருந்தும், நம் நாட்டுக்கு ஏற்ற கதையாக அமையாததால் படத்தின் வசூல் பாதிக்கப்பட்டது. ராம்னுத் டைரெக்ட் செய்த எல்லாப் படங்களிலுமே, ஒளிப் பதிவு சிறப்பாக அமைந்திருக்கிறது. காரணம், கேமிரா மேதையான அவருடைய மேற்பார்வையிலும், யோசனையின்படியும் கேமிரா கையாளப்பட்டிருப்பது தான்.

ஜெமினி ஸ்டுடியோவை விட்டு விலகியதுமே அவர் மாடர்ன் தியேட்டர்ஸாராலும் ஒரு படத்திற்கு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டார். என்றாலும், இது வரை இன்னும் அவர்களுக்காக வேலை செய்யவில்லை. இப்பொழுது அவர் ஜுபிடர்-லாவண்யாவின் கூட்டுத் தயாரிப்பான "மனிதனை" டைரெக்ட் செய்வதில் கண்ணும் கருத்துமாக இருந்துவருகிறார்.

ராம்னுத் ஒரு நிமிஷமாவது சும்மாயிருந்து நான் பார்த்தது கிடையாது. படப்பிடிப்புக்குப் போனால்கூட ஒரு காட்சி தயாரிக்கப்பட்டு முடிந்து, அடுத்த காட்சிக்கான ஏற்பாடுகள் செய்வதற்குள் உள்ள இடைக்காலத்தைக்கூட அவர் வீணாக்காமல் ஏதாவது படித்துக் கொண்டிருப்பார். இந்தத் துறையில் யாருடனும் அவர் எப்பொழுதும்சச்சரவு செய்து கொண்டது கிடையாது. அதே சமயத்தில் தமக்கு சரி என்று படுவதை அடித்துப் பேசவும் அவர் தயங்கியதில்லை. 'தொழிலை நம்பி ஜீவிக்கிறோமே தவிர, முதலாளியை நம்பி அல்ல' என்ற அபிப்பிராயம் கொண்டவர். ஸினிமா டெக்னீஷியன்கள் சங்கத்தின் தலைவராக இருந்து உபயோககரமான பல பிரசங்கங்களை நிகழ்த்தியிருக்கிறார்; காரியங்களைச் செய்திருக்கிறார். 'பொதுஜன அபிப்பிராயமே பட உலக ஜீவநாடி'' என்ற ஆணித்தரமான அபிப்பிராயம் கொண்டவர். "நம் சினிமா உலகுக்கு உண்மையில் இப்பொழுது தேவையானது புதுக் கதைகளும், திறமைசாலிகளான எழுத்தாளர்களுமே" என்ற அபிப்பிராயம் கொண்டவர் அவர்.

கே. ராம்னுத் இன்று டைரெக்டராகப் புகழுடன் இருந்து வருகிறார். சிறந்த டைரெக்டர் என்ற (1951) பொதுஜன கௌரவத்தைப் பெற்றவர் அவர். என்றாலும், இன்றுகூட 'கேமிரா மேன் ராம்னுத்' என்றுதான் அழைக்கப்படுகிறார். காரணம், அவரது கேமிராத் திறமையை யாரும் மறந்துவிட முடியாததுதான். ஏன், அவருக்கே கூட, "மீண்டும் கேமிராமேன் ஆகிவிடலாமா" என்று தோன்றுகிறதாம். ஆகவே, அவரை "கேமிரா மேதை" என்று குறிப்பிடுவது மிகவும் பொருத்தமென்றே எண்ணுகிறேன்.

பாக் படம் நிறுத்தப்பட்டது

பாகிஸ்தானில் தயாரிக்கப்பட்ட "பக்காரார்" என்ற படத்தைக் காட்டக் கூடாது என்று கான்பூரில் ஒரு தியேட்டர் முன் ஹிந்து மஹா சபை ஊழியர்கள் 200 பேர் சென்ற மாதம் 10ம் தேதி ஆர்ப்பாட்டம் செய்தனர். அதன் விளைவாக அப் படம் நிறுத்தப் பட்டது. இந்தியப் படங்களை பாகிஸ்தானில் காட்டக் கூடாதென்று தடை செய்ததின் எதிரொலியாம் இது.

பகலில் நக்ஷத்திரங்கள் பிரகாசித்தன!

கடந்த இரண்டு வருஷங்களாகவே ஜனவரி மாதம் சினிமா ரஸிகர்களைப் பொருத்தமட்டில் குதூகலமான வாரமாகவே இருந்து வருகிறது. சென்ற வருஷம் ஜனவரி மாதம் தான் முதன் முறையாக சென்னையில் நக்ஷத்திர கிரிக்கெட் விழா நடைபெற்றது. இந்த வருஷம் அதே ஜனவரி மாதத்தில் அகில இந்திய நக்ஷத்திர கிரிக்கெட் விழா நடைபெற்றது. ஆனால் இரண்டு ஆட்டங்களுககும் ஒரு வித்தியாசம் உண்டு. சென்ற வருஷம் பெயரளவில் நக்ஷத்திர கிரிக்கெட் விழாவாக இருந்தது.

இந்த வருஷமோ அசல் நக்ஷத்திர கிரிக்கெட் விழாவாகப் பரிமளித்தது. சென்ற ஆண்டு நடைபெற்ற விழாவில், வட இந்திய நக்ஷத்திரங்கள் ஒன்றிரண்டு பேர்கள் மட்டுமே பங்கெடுத்துக் கொண்டனர். இந்த வருஷம் பலர் வந்து பங்கெடுத்துக் கொண்டு பிரமாதப்படுத்தி விட்டார்கள்.

சென்ற வருஷ கிரிக்கெட் விழா நடந்து அந்தக் கோலாகலத்தைப் படித்துத் தெரிந்து கொண்ட பல வெளியூர் ரஸிகர்களுக்குப் பெரும் ஏமாற்றமாகப்போய் விட்டது. திடீரென்று ஏற்பாடு செய்தமையால் வெளியூர் ரஸிகர்கள் வரமுடியாது போயிற்று. 'மீண்டும் அப்படிப்பட்ட ஒரு விழா எப்பொழுது ஏற்படாகுமென' ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர். அவர்களது ஆவலைப் பூர்த்திசெய்யும் வகையில் அமைந்து விட்டிருந்தது சென்ற மாதம் 11ம் தேதி, சென்னை கார்ப்பரேஷன் ஸ்டேடியத்தில் நடைபெற்ற நக்ஷத்திர கிரிக்கெட் விழா. வெளியூர் ரஸிகர்களும் வந்து பார்க்க சௌகரியமாக, முன் கூட்டியே நன்றாக

8 9. 10. திருவாங்கூர் மும்மணிகள் பத்மினி. ராகினி. லலிதா. 11. சாரங்கபாணி. 12. குமாரி (பேபி) கமலா.

13. கிருஷ்ண குமாரி. 14. 'நாரதர்' ஸ்ரீநிவாஸராவ். 15. லலிதா. 16. பாலசந்தர், எஸ். வி. ரங்கராவ். 17. திலிப் குமார்.



1. ராஜ் கபூர். 2. ஆகா. 3. பிரேம்நாத். 4. பீகம் பாரா. 5. ஓம்பிரகாஷ். 6. கோப். 7. வட இந்திய கோஷ்டித் தலைவரான திவான் ஷாரர்.

விளம்பரப்படுத்தி விழாவை நடத்தினர்கள், அதை ஏற்பாடு செய்திருந்த ஸினி டெக்னீஷ்யன்கள் சங்கத்தார்.

இந்த கிரிக்கெட் விழா, சென்னை ஸினி டெக்னீஷ்யன்கள் சங்கம், பம்பாய் பிலிம் தொழிலாளிகள் சங்கம் இவைகளுக்கு நிதி திரட்டவே ஏற்பாடு செய்யபபட்டது. இந்த விழாவை முன் நின்று ஏற்பாடு செய்த ஸினி டெக்னீஷ்யன்கள் சங்கத்தார், வசூலில் "ஒரு பகுதியை" தமிழ் நாடு புயல் நிவாரண நிதிக்கு அளிப்பதாகவும் தெரிவித்தார்கள். இந்த வருஷம் மற்றொரு விசேஷமும் இருந்தது. கிரிக்கெட் விழாவுடன்கூட அவர்கள் ஒரு நக்ஷத்திர பவனியையும் ஏற்பாடு செய்திருந்தார்கள்.

இந்த விழாவில் கலந்து கொள்வதற்கென, கதாசிரியர் திவான் ஷாரர் தலைமையில் வடநாட்டு நக்ஷத்திர கோஷ்டியினர் சென்ற மாதம் 10-ம் தேதி விமானம் மூலம் சென்னைக்கு வந்து சேர்ந்தார்கள். விமான நிலையத்தில் அவர்களை ஸினி டெக்னீஷ்யன்கள் சங்கத்தினர் வரவேற்றார்கள்.

அன்று மாலை, ஜெயந்தி புரொடக்ஷன்ஸ் கட்டடத்தில், கிரிக்கெட் விழாவில் பங்கு கொண்ட தமிழ்நாட்டு நக்ஷத்திரங்களும், வடநாட்டு நக்ஷத்திரங்களும் சந்தித்தார்கள். அனைவரையும் ஹாஸ்ய நடிகர் கே. சாரங்கபாணி வரவேற்றார். பரஸ்பரம் எல்லோரையும் அறிமுகப்படுத்தும் கைங்கரியத்தை நடிகர் எஸ். பாலச்சந்தர் ஏற்றுக்கொண்டு, அந்த வேலையை தமாஷாக செய்து முடித்தார். ஒவ்வொருவரும் சிறிதுநேரம் அங்குள்ள மைதானத்தில் கிரிக்கெட் ஆடி ஒத்திகை பார்த்துக் கொண்டனர்.

மறுநாள் 11-ம் தேதி கார்ப்பரேஷன் ஸ்டேடியம் மைதானத்தில் முக்கால் பகுதிக்கு மேல் நிரம்பி விட்டிருந்தது. இம்முறை தமிழ் நாட்டு நக்ஷத்திரங்கள் ஒரு கோஷ்டியாகவும், வடநாட்டு நக்ஷத்திரங்கள் ஒரு கோஷ்டியாகவும் பிரிந்து ஆடினார்கள். எஸ். பாலசந்தரைக் காப்டனாகக் கொண்ட தமிழ் நாட்டு கோஷ்டியில், கே. சாரங்கபாணி, டி. ஆர். ராமச்சந்திரன். கணேஷ், சிவாஜி கணேசன், ஸ்ரீராம், ஸி. ஜி. விஸ்வநாதன், எஸ். வி. ரங்க ராவ், பலராமன், ஸஹஸ்ரநாமம், லலிதா, பத்மினி, ராகினி, குமாரி (பேபி) கமலா, டி. கிருஷ்ண குமாரி ஆகியோரும், திலீப்குமார் தலைமையில், ராஜ்கபூர், ஜயராஜ், பிரேம்நாத், ஓம்பிரகாஷ், கோப், பிரான், சஜன், ஆகா, ராம் கமலானி, நர்கிஸ், ஹரிஷிவ்தஸானி, குல்தீப் கௌர், நிருபராய், பீகம்பாரா, நிம்மி, அன்வர் ஹுஸைன் ஆகியோரும் வடநாட்டு நக்ஷத்திரங்களும் ஆடினார்கள்.

கிரிக்கெட் ஆட்டம் ஆரம்பிப்பதற்கு முன் நக்ஷத்திர பவனி நடைபெற்றது. ஆட்டத்தில் கலந்து கொண்ட மேற்குறிப்பிட்டவர்கள் தவிர, சூர்யகுமாரி, புஷ்பவல்லி, சூர்யப் பிரபா, சாந்தகுமாரி, ஸ்ரீரஞ்சனி, சாவித்திரி, பாலசரஸ்வதி, எஸ். ஜானகி, சந்திரபாபு ஸ்டண்ட் சோமு, குமுதினி ஆகிய நக்ஷத்திரங்களும் இந்த பவனியில் கலந்து கொண்டனர். திறந்த மோட்டார் கார்களில் இந்த நக்ஷத்திரங்கள் அமர்ந்து கொண்டனர். அந்தக் கார்கள் ஸ்டேடியத்தின் உள்ளே ரஸிகர்கள் நன்றாகப் பார்க்கும்படி இருமுறை சுற்றி வந்தன. ரஸிகர்கள் கைதட்டி ஆர்ப்பரித்துத் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டனர். வடநாட்டு ஹாஸ்ய நடிகர் ஆகா, நம் ஹாஸ்ய நக்ஷத்திரங்களான கே. சாரங்கபாணி, டி. ஆர். ராமச்சந்திரன், சிவராவ், சந்திரபாபு அனைவரும் தமது கோணங்கித்தனத்தின் மூலம் மைதானமே நகைப்பினால் எதிரொலிக்கும்படி செய்தார்கள்.

பதினொரு மணி சுமாருக்கு ஆட்டம் ஆரம்பமாகியது. அன்றைய விழாவுக்குத் தலைமை வகித்த சென்னை கவர்னர் கனம் ஸ்ரீபிரகாசா தலையா பூவா போட்டு தமிழ் நாட்டவர் பந்தடிக்கும் சந்தர்ப்பத்தை அளித்தார். ரஸிகர்களின் கைதட்டல் ஆரவாரத்துடன் ஆட்டம் ஆரம்பமாயிற்று.

ஆட்டம் சுவாரஸ்யமாக நடந்து கொண்டிருந்தபோது சூர்யகுமாரி, புஷ்பவல்லி, சாவித்திரி, குமுதினி ஆகியோர் ரஸிகர்களிடை பெப்பர்மிண்ட் விற்று உண்டியலில் பணம் சேர்த்தார்கள். இதன் மூலம் அன்று வசூலான தொகை பூராவும் புயல் நிவாரண நிதிக்கு அளிக்கப்பட்டுவிட்டது.

நமது கோஷ்டியில் ஆடியவர்களுள் ஜெமினி கணேசன் அபாரமாக ஆடினார். ஸி. ஜி. விஸ்வநாதன் அதிகமான ஓட்டங்கள் எடுத்தார். பத்மினி கடைசிவரை

1. நிருபா ராய்.
2. நிம்மி.
3, 4. பிரேம்நாத்.
5. திலிப் குமார்.
6, 7. தோற்றதற்காக அழுவதாய் நடிக்கும் சாரங்கபாணிக்கு ஓம் பிரகாஷ் தேறுதல் கூறுகிறார்.

அவுட் ஆகாமலே ஆடிக் கொண்டிருந்தார். நமது நடிகைகளில் அதிக ஒட்டம் எடுத்த பெருமை பத்மினிக்கு கிடைத்தது. கே. சாரங்கபாணி நடனம் ஆடிய படியே ஆட்டம் ஆடியது ஒரு கலகலப்பை உண்டு பண்ணியது. நமது கோஷ்டியினர் ஆட்ட முடிவில் மொத்தம் 85 ஒட்டங்கள் எடுத்தனர்.

பிறகு வட இந்திய நக்ஷத்திர கோஷ்டியினர் மட்டை பிடித்து ஆட ஆரம்பித்தார்கள். அவர்கள் கோஷ்டியில் அனைவருமே நன்ருக ஆடினுர்கள். அன்வர் ஹுஸைன், ராஜ்கபூர், ஆகா சிறப்பாக ஆடினுர்கள். ஹாஸ்ய நடிகர் ஆகாதான் அவர்களில் நிறைய ஒட்டங்கள் எடுத்தவர். அவர்களது நடிகைகளுக்குள் நர்கிஸே அதிக ரன்கள் எடுத்தார். மொத்தம் 154 ஒட்டங்கள் அவர்கள் எடுத்தார்கள்.

ஆட்டத்தைப் பற்றி அவ்வப்பொழுது வட நாட்டு ஹாஸ்ய நடிகர் டேவிட், வர்ணனை செய்தார், கிண்டலாகவும் குத்தலாகவும், அதே சமயத்தில் யார் மனமும் புண்படாதபடியும் அவரது விளக்கம் இருந்தது. கையெழுத்து வேட்டைக்காரர்களும், போட்டொ கிராபர்களும் நக்ஷத்திரங்களைச் சூழ்ந்து தங்கள் காரியத்தில் முனைந்திருந்தார்கள். தமது போட்டோ கிராபர் வி. கோபாலகிருஷ்

"கிரிகெட் ஆடினர்"

கிரிகெட் ஆடினார்—வெகு ஸ்டயிலாகவே ஸ்டேடியம்
மைதானத்தில் வட—தென் நடிகர் (கி)

சினி கலைஞர்க்கு முன்னாள்
வாக்குச் செய்தபடி தவறாமல்
சென்னைப் பதியில் வந்து
ஜனவரி மாதத்தில் நடுவாரத்தில்
பகல் நேரத்தில் (கி)

எட்டுத் திசையும் கைகொட்டி முழக்க
ஸ்டம்பின் தலைசிதற, கமலா ஆட
திலீப் பௌல் பண்ண, எல்லோரும் கொண்டாட

இட்ட முடனே இருந்தவர் புகழ் பாட
நடிகர் உடலாட, நடிகை சடையாட
ரசிகர் மனமாட, ஸ்கோரர் கையாட (கி)

காலினில் அட்டையோடு கை கிளௌஸு
போட்டுக் கொண்டு
கட்டை யொன்று கையில் கொண்டு கணேசன் வந்தான்
கண்டவரெல்லாம் மகிழ பந்தடித்த ஜோரை எந்தன்
காது குளிரக் கேட்டேன் காமெடியன் டேவிட் புகழ (கி)

சாரங்க பாணி மிக சதிராடி பந்தெறிய
சலியாமல் எதிராளி எடுத்தாரே ஸ்கோரே
வேறெங்கு நிகரில்லா பத்மினியும் ஆடியாடி
வேண்டிய ஸ்கோர் எடுத்தாளே, நர்கீஸும்தானே (கி)

வீகம் பாரா குல்தீபும் நிரூபா ப்ரேம்நாத்தும்
மோகமூட்டும் நிம்மியோடு ஸஜ்ஜன் கோபுவும்
வேகமாக பந்தெறிந்த ராஜ்கபூர் ஜெயராஜும்
வேடிக்கை விக்கெட்-கீப்பர் ஆகாவும் ஜெயித்தாரே. (கி)

—ஏ. ஆர். பாலசுப்ரமண்யம்

ணன் அசகாய சூரர். சமயம் கிடைத்த பொழுதெல்லாம் இடையில் புகுந்து, நக்ஷத்திரங்களிடம் பக்குவமாகப் பேசி, அவர்களைப் பிடித்துப் போட்டார். அவரது உதவியினால்தான் இந்த விழா சம்பந்தமான பல நேர்த்தியான படங்களை உங்களுக்கு அளிக்க முடிந்தது.

ஆட்டத்தின் இடையில், கவர்னர் ஸ்ரீபிரகாசாவிடம், ஸினி டெக்னீஷ்யன்கள் சங்கத்தார். தாங்கள் புயல் நிவாரணத்திற்கு அளிக்க நினைத்திருக்கும் தொகையிலிருந்து அட்வான்ஸாக ஆயிரத்தோரு ரூபாயை அளித்தார்கள். ஸ்ரீபிரகாசா அவர்களை மிகப் பாராட்டிப் பேசினார். வடநாட்டு கோஷ்டியின் தலைவர் திவான் ஷாரர் தமது காணிக்கையாக தமிழ் நாட்டின் புயல் நிவாரண நிதிக்கு நூத்தியோரு ரூபாய் அளித்தார்.

காலையில் இந்த கோலாகல விழா ஆரம்பம் ஆவதற்கு முன், மைதானத்துக்கு வெளியே 'இந்த விழாவுக்குப் போக வேண்டாமெ'ன மறியல் விழா ஒன்று நடந்தது. இந்த மறியல் விழாவை நடத்தி வைத்தவர் ஹாஸ்ய நடிகர் என், எஸ். கிருஷ்ணன். அதில் டி. ஏ. மதுரம், ஜி. வரலக்ஷ்மி, ஜி. கே, சேஷகிரி, எம். ஜி. ராமச்சந்திரன். டி. கே. ஷண்முகம், டி. கே. பகவதி, கெம்ப்ராஜ் இவர்களுடன் டைரெக்டர்களான கே. சுப்ரமண்யம், ஏ. ராமய்யா ஆகியோரும் பங்கெடுத்துக் கொண்டனர். ஆனால், இந்த மறியல் விழாவுக்கு பலன் தான் எதுவும் ஏற்படவில்லை.

விழாவன்று இரவில், ஸினி டெக்னீஷ்யன்கள் சங்கத்தார் வுட்லண்ட்ஸில் எஸ்.எஸ். வாஸன் தலைமையில் ஒரு விருந்து ஏற்பாடு செய்திருந்தார்கள். தென்னிந்திய அயிட்டங்களைக் கொண்ட விருந்தை வடநாட்டு நக்ஷத்திரங்கள் பெரிதும் விரும்பி ருசித்தனர். பிறகு எஸ். எஸ். வாஸன், பல ஸ்தாபனங்களால் அளிக்கப்பட்ட பரிசுகளை சம்பந்தப்பட்டவர்களுக்கு வழங்கி நீண்ட பிரசங்கம் செய்தார். பிறகு திலீப் குமாருக்குத் தெரிந்தது போல சில வார்த்தைகளில் பேசி முடித்தார். கவிஞர் திவான் ஷாரர் ரத்தினச் சுருக்கமாகவும், வடநாட்டு பிரபல ஹாஸ்ய நடிகர் டேவிட் தமாஷாகவும் பேசினார்கள்.



8. வுட்லண்ட்ஸில் நடந்த நக்ஷத்திர விருந்தில் போது எடுத்த படம். நர்கீஸ், ராஜ்கபூர், நிருபா ராய், நிம்மீ, ஜெயராஜ் இவர்களைக் காணலாம்.

9. பீகம் பாரா

10. நர்கீஸ்

11. கிருஷ்ண குமாரி

12. லலிதா

13. பாலசந்தர்

1. நாகேஸ்வர ராவ், 2. "பராசக்தி" கணேசன், 3. காமெடியன் டி. ஆர் ராமச்சந்திரன், 4. ஜஜ்ஜன், 5. எஸ். வி. சகஸ்ரநாமம், 6. பத்மினி, 7. காமெடியன் சந்திரபாபு ஆகியோர்.

8. நக்ஷத்திர கிரிக்கெட் விழா நன்கு சோபிக்கும்படியாக நிகழ்ச்சி விமர்சனம் செய்தார் பிரபல வட இந்திய காமெடியன் டேவிட். அவர் ஹாஸ்யமாகப் பேசி எல்லோரையும் சதா சிரிக்கச் செய்து வந்தார்.

9. வட இந்திய அழகி நிருபாராய்.

10. உத்ஸாகத்துடன் விளையாடச் சென்ற ஸ்ரீராம் எதிர்பாராத ஏமாற்றத்துடன் திரும்பினர்.

11. சிவ ராவ், குமாரி கமலா, பாலசந்தர், கிருஷ்ண குமாரி முதலியோர் நகைச்சுவையில் ஈடுபட்டிருக்கின்றனர்.

போட்டோக்கள்:
வி. கோபாலகிருஷ்ணன்



1. 'வுட்லண்ட்ஸ்' விருந்தில் நர்கீஸ்,
2. நம் ஆசிரியர். நண்பர்களுடன் கணே
சன், டி. ஆர். ராமச்சந்திரன், கே. சார
ங்கபாணி, 3. நடிகை குல்திப் கௌர்,
4. விருந்திற்குப் பின் கே.ராம்னாத் பேசு
கிறார். 5. நடிகர் பிரான், 6, 7, கிரிக்
கெட் விழாவை ஏற்பாடு செய்தவர்கள்:
என். கிருஷ்ணசாமி, ரஜனிகாந்த ராவ்

நுனிப்புல்

'வெட்டுக்கிளி'

"இந்த ஊசி" மூலம் ரஸிகர்களுக்கு எதைப் பற்றிக் கூறுவது" என்று ஆழ்ந்த யோசனையில் இருந்தேன். அப்பொழுது, மூன்று மாதங்களுக்கு முன்னர் ஒரு பட முதலாளியுடன் நான் பேசிக்கொண்டிருந்த விஷயம் சட்டென்று என் நினைவுக்கு வந்தது. எங்களது சம்பாஷணை நினைவுக்கு வந்ததுமே இந்த ஊசிக்கான விஷயமும் எனக்கு அகப்பட்டுவிட்டது. படங்கள் ஒன்றன்பின் ஒன்றாகத் தோல்வியடைந்து வந்த சமயம் அது. அவர் என்னிடம், "பொதுஜன ரஸனைதான் படங்களின் தோல்விக்குக் காரணம்" என்று ரஸிகர்களைக் குற்றம் சாட்டினார். அது விவாதத்துக்கு உரிய விஷயம். அவர் சொன்ன ஒரே ஒரு கருத்தை மட்டும்நான்ஒப்புக்கொள்ளவேண்டியதாயிருந்தது. "இப்பொழுதெல்லாம் படத்தொழில் ஒரு 'ஸ்பெகுலேஷ'னாகி மாறிவிட்டது" என்பதுதான் அவர் சொன்னது. அவர் சொன்னதன் கருத்து என்னவென்றால், 'நிச்சயம் ஒரு குறிப்பிட்ட படம் வெற்றி பெறும் என்றோ, அல்லது அந்தப் படம் தோல்வி அடைந்துவிடுமென்றோ முன் கூட்டியே தெரிந்து கொள்ள முடியாது. வெற்றியுடன் தோல்வியையும் ஓரளவு எதிர்பார்த்தே தான் படத் தயாரிப்பில் இறங்கவேண்டியிருக்கிறது' என்பதுதான்.

• • •

படத் தயாரிப்புத் தொழில் 'ஸ்பெகுலேஷ'னாகி இருக்கிறதோ இல்லையோ, அதில் ஈடுபட்டுள்ள பலரும் 'ஸ்பெகுலேஷ'னில் திடநம்பிக்கை உள்ளவர்களாக, கவனம் செலுத்துகிறவர்களாகவே இருக்கிறார்கள். விதவிதமான 'ஸ்பெகுலேஷன்'களில் அவர்கள் ஈடுபடுகிறார்கள். அவைகளில் குதிரைப் பந்தயம் இப்பொழுது பிரதானமாக இருக்கிறது. ஏனெனில் இது ரேஸ் ஸீஸன் ஆயிற்றே! கடவுள் மீது நம்பிக்கை இல்லாதவர்கள்கூட அதிர்ஷ்டத்தில் நம்பிக்கை கொண்டு அங்கே வருகிறார்கள். இப்படியாக ஞாயிறு தோறும் கிண்டி குதிரைப் பந்தய மைதானத்திலே ஆஜராகும் சிலரையும், அவர்கள் நடந்துகொள்ளும் முறைகளையும் இந்த ஊசியில் உங்களுக்குக் கூறப் போகிறேன்.

• • •

"ஸ்டன்ட் நடிகை, ஆர். பி. லக்ஷ்மி தேவி எங்கே!" என்று நேயர்கள் பலருக்கு சந்தேகம் உண்டு என்பது எனக்குத் தெரியும். அவர்களுக்கு, 'ரேஸ் நடைபெறும் தினங்களில் கிண்டி குதிரைப் பந்தய மைதானத்திற்குப் போங்கள், பார்க்கலாம்' என்று பதில் கூறுகிறேன். பருப்பு இல்லாமல் கல்யாணம் கூட நட

ஸர்விஸான போலீஸ்காரன் போல் 'சல்யூட்' அடித்து சாரங்கபாணி மைனாவதியின் மனதைக் கவர முயலுகிறார் ஜயந்தியின் "பொன் வயல்" தமிழ்ப்படத்தில்.

சென்ற மாதம் தமிழ் நாடெங்கும் வெளிவந்துள்ள "என் வீடு" படத்தில் பாங்காக நடிக்கிருர் பிரபல தெலுங்கு-தமிழ் நடிகர் துரைசாமி.

ந்து விடலாம். ஆனல், ஆர். பி. லக்ஷ்மி தேவி வராமல் ஒரு நாள்கூட ரேஸ் நடந்தது இல்லை என்று சொல்லுவேன். அவர் சென்னை ரேஸ் கோர்ஸில் ஒரு அங்கத்தினர். அன்று அங்கே வரும் யார் கண்ணிலுமே அவர் படாமல் இருக்க முடியாது. அவர்கள் ஆழ்ந்த கவனத்தையும் கவரும்படி 'டிப்டாப்'பாக 'இனவசீகர'த்துடன் டிரஸ் பண்ணிக் கொண்டு, இங்கிலீஷ் வார்த்தைகளை வர்ஷித்துக்கொண்டு எங்கும் வியாபித்திருப்பார். அவர், சென்னையில் மட்டுமின்றி இந்தியாவில் ரேஸ் நடக்கும் பங்களூர், கல்கத்தா, பம்பாய், ஹைதராபாத் போன்ற நகரங்களுக்கும் போவது உண்டு.

• • •

டிஸம்பர் மாதத்தில் ஒரு ரேஸ் தினம். உண்டியலும் கையுமாக மைதானத்துக்கு வெளியே நின்ற டி எஸ். பாலய்யாவைப் பார்த்ததும் நான் திகைத்துப் போனேன். திகைப்பு, அவர் உண்டியலும் கையுமாக நின்றதனல் அல்ல. 'உள்ளே யிருக்க வேண்டியவர் வெளியே இருக்கிருரே' என்பதை நினைத்துத்தான் திகைப்படைந்தேன். டி. எஸ். பாலய்யா தீவிர ரேஸ் அபிமானி என்பதுடன் அவர் ரேஸ் குதிரை ஒன்றுக்கு சொந்தக்காரரும்கூட ஆவர். "வில்லோஸ்டிரீம்" என்ற அவரது குதிரை, இந்த வருஷம் இதுவரை பந்தயத்தில் ஓடவில்லையென்ருலும், சென்ற வருஷம் பல ரேஸ்களில் ஓடியிருக்கிறது. ஆனல், வெற்றிதான் பெற்றதில்லை. முதல்தர நடிகரின் குதிரை இப்படி அசமிஞ்சமாக இருக்கிறதே என்று எனக்கு வருத்தம் தான்!

• • •

இவருடைய குதிரையைப் பற்றி, ஹாஸ்ய நடிகர் டி. எஸ். துரைராஜ் வேடிக்கையாகச் சொல்லுவார். அவர் பாலய்யாவுக்கு நேரே கூட இதைச் சொல்லியிருக்கக் கூடும். "குதிரைங்களா அது! கழுதைக்கும் குதிரைக்கும் பிறந்ததுங்க. குதிரைகள் ஓடி வரும்போது அண்ணுச்சி குதிரை எங்கேடான்னு பார்த்தா, லொடுக்கு லொடுக்குன்னு கடைசியிலே வருது" என்று அவர் சொல்லும் பொழுது ரொம்பத் தமாஷாகவேதான் இருக்கும். இதிலிருந்தே டி. எஸ். துரைராஜும் ஒரு ரேஸ் அபிமானி என்று விளங்கியிருக்கும். வெளியூர்களில் படப் பிடிப்பு இருந்தால் கூட, ரேஸ் தினம் சென்னைக்கு வந்துவிட்டு அன்று இரவே கிளம்பிவிடுவார் அவர். துரைராஜ் குதிரை மீது பணம் கட்டுவதே விசித்திரமாக இருக்கும். அபிமானக் குதிரைகள் மீது எல்லோரும் டிக்கெட் வாங்கிக் கொண்டிருப்பார்கள். இவர் அதையெல்லாம் கவனிக்கவேமாட்டார். குருட்டாம் போக்கில் ஜயிக்கும் "ப்ளுக்" குதிரைகள் மீதுதான் டிக்கெட் வாங்குவார். ஏனெனில் அது ஜயித்தால் தான் நிறையப் பணம் கொடுக்கும்.

• • •

இவருடன் கூட இணைபிரியாது வரும் ஒரு ரேஸ் அபிமானி டைரெக்டர் எல். எஸ். ராமச்சந்திரன் ஆவர். இவர் அதிகமாக மைதானத்தில் அங்குமிங்கும் அலையமாட்டார். ஒரு மரத்தடியில் நின்றபடி தமது அஸிஸ்டெண்டுகளை விட்டு டிக்கெட்டுகள் வாங்கி வரச் சொல்லுவார்.

ஆனால், இந்த வருஷம் இவரை நான் அங்கு பார்க்கவே முடியவில்லை. காரணம், அவர் அதிர்ஷ்ட உலகத்தை மறந்து—தவறு, அது பற்றி நினைக்கக் கூட அவகாசமில்லாது—பட "உலகத்"தில் மூழ்கியிருப்பதாகத்தான் இருக்க வேண்டும் என்று நினைக்கிறேன்.

• • •

"மூன்று பிள்ளைகள்" படத்தில் அண்ணன் ரேஸில் பணத்தை விரயம் பண்ண, சினிமாவில் நடித்து பணம் சேர்த்து அனுப்பிய கதாபாத்திரமாக நடித்த ஸ்ரீராம், இந்த வருஷம் ரேஸ் அபிமானிகளின் லிஸ்டில் புதிதாகச் சேர்ந்திருக்கிறார். அதிகம் யார் கண்ணிலும் படக்கூடாது என்பதனாலோ என்னவோ, அவர் ஒதுப்புறமாக ஒரு இடத்தில் நின்று அதிருஷ்ட வேலையில் கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறார். அவரும், அவர் நடித்து வரும் ஒரு பட டைரெக்டரான ராமண்ணாவும் கூட்டாக ஓடும் குதிரைகளை ஆராய்வதிலும், அதேபோல டிக்கெட் வாங்குவதிலும் மும்முரமாக இருந்தார்கள்.

• • •

ரோஹிணியின் உரிமையாளர் டைரெக்டர் எச். எம். ரெட்டி கூட ரேஸ் கிளப்பில் ஒரு மெம்பர்தான். அவர் வெளியே அதிகமாக வருவதில்லை. மெம்பர்களுக்கான மாடி வாயிற்படியில் நின்று, தமது வலது கையை இடுப்பில் ஊன்றி இடது கையில் ரேஸ் புஸ்தகத்தைப் பிடித்தபடி, குதிரைகளின் தரத்தை ஆராய்வதில் ஈடுபட்டிருப்பார். அவர் எப்பொழுதுமே மூன்றாம் நம்பர் குதிரைக்குத்தான் அதிகச் சலுகை கொடுத்து கவனிப்பார். ஏனெனில், அதுதான் அவருடைய அதிர்ஷ்ட எண் என்று என்னிடமே கூறியிருக்கிறார்.

சங்கீத டைரெக்டர்களான கே. வி. மஹாதேவன், டி. ஏ. கல்யாணம் இருவரையும் கூட அங்கே காணலாம். டி. ஏ. கல்யாணம், 'கணக்குப் பார்த்தால் தமக்கு ஆதாயமே அதிகம்' என்று சொல்லிக் கொள்கிறார். கே. வி. மஹாதேவன் விஷயமே வேறு. அவருக்கு விரயம்தான் அதிகமாக இருந்து வருகிறது. ஆனால், ஒரு விஷயம், அவர் 'நஷ்டம் வந்து விட்டதே' என்று பலர் மாதிரி இடிந்து போய் உட்கார்ந்து விடுவதில்லை.

• • •

பல ஸ்தாபனங்களுக்கு விளம்பர ஆலோசகர்களாக இருக்கும் எபிஷென்ட் பப்ளிஸிடீஸ் ஸ்தாபனத்தில் சகோதரர்களையும் அங்கு நான் சந்தித்தேன். இருவரும் தனித் தனியாக தங்கள் யோசனைப்படிதான் டிக்கெட் வாங்குவதில் ஈடுபட்டிருந்தார்கள். பலருக்கு விளம்பர விஷயமாக ஆலோசனை கூறும் சகோதரர்கள், 'எந்தக் குதிரை ஜயிக்கும்' என்று வேறு பலரிடம் ஆலோசனை கேட்டுக் கொண்டிருந்ததுதான் விசித்திரம்!

• • •

நாஷனல் பிக்சர்லைச் சேர்ந்த பெருமாள், "தாம் அதிருஷ்டத்தில் நம்பிக்கை உள்ளவர்தான்" என்பதைப்

"மதன மோஹினி" வி. ஆர். ராஜகுமாரியிடம் பி. எஸ். வீரப்பா ஏன் அவ்வளவு கடுமையாய் நடந்து கொள்ளுகிறார் என்பதுதான் நமக்குத் தெரியவில்லை.

பறைசாற்றுவதைப் போல அங்கு பிரசன்னமாகியிருந்தார். அவர் அவ்வப்பொழுது தம் கூட வந்திருந்த சைத்ரீகர் ஜி. எச். ராவிடம் மட்டும் ஆலோசனை கேட்கிறார் என்றாலும், மற்றபடி யாரையும் கேட்டு மனதைக் குழப்பிக் கொள்வது கிடையாது. இவர்களுடன் சேர்ந்து கொண்டும் பிரிந்தும் தம் அதிர்ஷ்டத்தைப் பரிசோதிப்பதில் ஈடுபட்டிருந்தார் டைரெக்டர் கிருஷ்ணன். அவரது ஜோடியான பஞ்சுவுக்கு இதிலெல்லாம் நம்பிக்கை கிடையாது என்றும் தெரிந்து கொண்டேன்.

• • •

'கோடக் ஸ்ரீனிவாஸன்' என்று பெயர் பெற்றிருக்கும், தற்பொழுது பெல் பிக்சர்ஸைச் சேர்ந்த ஸ்ரீனிவாஸன் பெல் பிக்சர்ஸ் முதலாளியுடன் கூட அங்கே வந்திருந்தார். அவர் யாருடனும் கூட்டாகச் சேராமல் ஆனால் பலரையும் யோசனை கேட்டுவிட்டு தம் போக்கில் போய்க் கொண்டிருந்தார். இவரைப் போன்ற வேறு ஒரு பேர்வழி ஜெமினியைச் சேர்ந்த எம். பி. சுந்தரராஜன் என்பவர்.

• •

பட உலகில், இப்பொழுது இருக்கும் இடம் தெரியாமல் இருந்து வரும் நடிகர் சிறுகளத்தூர் சாமா ரேஸ் கோர்ஸிலும் தாம் இருக்கும் இடம் தெரியாமல் இருக்கிறார். பக்கத்தில் யாராவது வந்து கூப்பிட்டால் கூட, அது காதில் விழாத அளவுக்கு ரேஸ் புஸ்தகத்தை ஆராய்வதில் கவனமாக இருக்கிறார் அவர். இப்பொழுதெல்லாம் துணிந்து அவர் இத் துறையில் அதிகமாகப் பணம் போடுவதும் இல்லை. இவரைப் போலவேதான் "கன்னிகா" கதாநாயகன் டி. இ. வரதனும்.

"இந்த வருஷத்திய சிறந்த படம்" என்ற பெருமையை "மனிதன்" தட்டிக் கொண்டுபோய்விடும் என்று நான் இப்பொழுதே சொல்லி வைக்கிறேன். அதற்குப் பல காரணங்கள் உள்ளன. நான் குறிப்பிடும் காரணமே வேறு. அப்படத்தின் கூட்டுத் தயாரிப்பாளரான லாவண்யா பிக்சர்ஸின் உரிமையாளர் எஸ். கே. சுந்தரராமய்யருக்கு புது வருஷம் *(1953)* ரொம்பப் பிரமாதமாக இருக்கும். அதற்குச் சான்று வருஷப் பிறப்பன்றே தெரிந்து விட்டது. ஒரு அருமையான ரேஸ் குதிரையை லெப்டினென்ட்-கர்னல் டபிள் யூ. எச். கெர் என்ற ஒரு ஆங்கிலேயருடன் அவர் கூட்டாக வைத்து சம்ரக்ஷித்து வருகிறார். "மாளினஸ்" என்ற அக்குதிரை ஜனவரி முதல் தேதி 'கவர்னர்ஸ் கப்' ரேஸில் ஓடி வெற்றி பெற்றுவிட்டது. சென்னை கவர்னர் ஸ்ரீ ஸ்ரீபிரகாசா கையினால் அன்று ஆயிரம் ரூபாய் பெருமானமுள்ள 'கப்'பையும், பெரும் தொகையையும் பெற்றுக்கொண்டார் அவர். அமோகமான வெற்றியுடன் ஆரம்பமாகியிருக்கும் இந்த வருஷம் பூராவும் அவர் அமோகமாக இருக்கப்போகிறார் என்பதில் ஐயமில்லை!

• •

இரட்டைக் குதிரைகளைச் சின்னமாகக் கொண்ட ஜூபிடர் பிக்சர்ஸின் பாகஸ்தர்களான சோமுவும், மொஹிதீனும் கூட இந்தத் துறையில் ஆர்வமுள்ளவர்கள்தான். எல்லாவற்றிலும் அவர்கள் ஒற்றுமையாயிருப்பது போல இங்கும் இரண்டு பேர்களும் சேர்ந்தேதான் வருகிறார்கள்; சேர்ந்தேதான் முயற்சி செய்கிறார்கள். பேச்சோடு பேச்சாக "உங்களுக்கு இதற்கெல்லாம் கூட

குமாரி செல்லத்தின் பரத நாட்டியம், சமீபத்தில், சென்னையில் சில இடங்களில் நடைபெற்றது.

ஏவி. எம். மின் "பெண்" தமிழ், தெலுங்கு, ஹிந்திப் படங்களில் நாகய்யா பிரமாதமாய் நடித்துக்கொண்டு வருகிறார்.

நேரம் கிடைக்கிறதோ !" என்று அவர்களிடம் நான் கேட்டு வைத்தேன்.

• • •

"மிஸ் மாலினி" படத்தில், மிஸ் மாலினி சம்பத்துடன் சேர்ந்து, ரேஸ் ரேஸ் என்று அலைவதைக் கண்டித்த டைரெக்டராக நடித்த ஜாவர் சீதாராமனும் ஒரு அஸ்வப் பிரியர்தான். ஆனால், அவர் ஒவ்வொரு வாரமும் போகிறவர் இல்லை. "எப்பொழுதாவது" போகிறவர். தமது பல வேலைகளுக்கிடையே அவர் இதை ஒரு பொழுது போக்காக நினைத்துப் போகிற கெட்டிக்காரப் பேர்வழி.

இதைத் தொடர்ந்து அடுத்த ஊசியிலும் பல ரஸமான விஷயங்களைக் கூறப் போகிறேன்.

பராசக்தி பேசுகிறாள்

டி. எஸ். பாலய்யா

"அகிலாண்டேஸ்வரி, நமோ நமஹ! தாயே! எல்லா உயிர்களுக்கும் நீ தாயல்லவோ! தமிழ்த் தாயே! காலப் போக்கிலே உலகம் மாறுவது போல், உன் குணத்தையும், உன் பாஷையையும் மாற்றுகின்றனையா! இம் மாறுதலுக்குக் காரணம்தான் என்னவென்று அடியேனுக்குச் சொல்லலாகாதா? நம் நாட்டுச் சினிமா முதலாளிகளில் சிலர், இக் கலையைக் கொலை செய்வது காரணமா? நடிகை நடிகர்களின் மேலுள்ள ஆத்திரமா! தொழில் தெரியாத கற்றுக்குட்டி டைரெக்டர்களின் மேலுள்ள விரோதமா? இன்னதென்று தெரியாது அடியேன் தத்தளிக்கிறேன்! அம்மா, சொல்லு. உடனடியாகச் சொல்லு. இல்லையேல் இதோ உன் பாதங்களிலேயே விழுந்து நான் உயிர் துறப்பேன். சீக்கிரமாய் சொல்லு!

"வாலு போய் கத்தி வந்தது டும்டும்! கத்தி போய் மாங்காய் வந்தது டும்டும்!" என்ற கதையைப் போல், புராணம் போய் 'போக்லோர்' வந்தது. 'போக்லோர்' போய் சமூகம் வந்தது. அதுவும் போய் புராணமும் 'போக்லோரும்' சமூகமுமாக இம்மூன்றும் கலந்த கதம்பம் வந்தது. இதுபோய், இனி எது வருமென்பதே தெரியவில்லை. இம்மாதிரியான கலப்புள்ள கதைகளை ஒன்றாகச் சேர்த்து ஒரு கதையாக்கி அர்த்தமற்ற முறையில் வசனமும், பாட்டும் எழுதி பணம், ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு, அநாகரிகமான படங்களைத் தயாரித்து மக்களுக்குக் காட்டிவருவதினாலுள்ள எரிச்சலா! அல்லது நல்ல படங்களை மக்கள் விரும்பிப் பார்த்து ரஸிக்க முடியாத நிலைக்கு, மக்களின் மனோபாவத்தை மாற்றிவிட்டதால் ஏற்பட்ட கோபமா! என்பதை எனக்குச் சொன்னால், என்னால் கூடுமான வரையில் அவர்களுக்குச் சொல்லி திருத்தப் பார்க்கிறேன், கேளாவிடில் சினிமா உலகை விட்டு கம்பி நீட்டிவிடுகிறேன்.

"ஏன் மௌனமாக இருக்கிறாய்! வெள்ளை உள்ளத்துடனும், வெள்ளை உடையுடனும்]வேண்டினால் உனக்குப் பேசத்தான் முடியாது. அடுக்கு மொழியுடனும், கடுகடுத்த பார்வையுடனும், கறுத்த உடையுடனும், உண்மைக்கு மாறுதலாய் வேண்டினால்தான் நீ வாய் திறப்பாயோ! இதோ பார், இட்டேன் கறுப்புச் சட்டை! தொட்டேன் உண்மைக்கு எதிர். உதிர்க்கிறேன் அடுக்கு மொழிகள்! இனிமேல்தான் நீ பேசப் போகிறாய்! ஏ 'வஞ்சகி', ஏனடி வாய் திறக்காது கல்லாய் நிற்கிறாய்? என் கேள்விக்குப் பதில் சொல். ஏன் தமிழ் சினிமாக் கலை தாழ்வுற்றுத் தவித்துத் 'திரிசங்கு சொர்க்கமாக' இருக்கிறது! இதற்கு விமோசனத்தைச் சொல். சொல். உம் சீக்கிரம்!"

கிற்ற்ற்—புற்ற்ற்—டிப்!
காளி பிரஸன்னமாகிறாள்.

"பக்தா! பதட்டம் கொள்ளாதே. சினிமா அழியும் காலம் நெருங்கி விட்டது. நான் பூலோகத்தில் அவதரித்து, சினிமாக் கலையை ஒழித்து, உன் குறையைத் தீர்த்து வைக்கிறேன்."

"தாயே! உன்னை ஏதோ வாய் தவறி ஏசிப் பேசினேன். என்னை மன்னிப்பாயாக. ஆனால், ஒரு விண்ணப்பம். ஏற்கனவே பூலோகத்தில் சிலர் இருக்கிறார்கள். 'சினிமாவைப் பார்க்கக் கூடாது' என்று மக்களுக்கு உபதேசிப்பதுடன்,

அதை ஒழித்திவிட வேண்டுமென்று வற்புறுத்தியும் வருகிறார்கள் அவர்கள். நான் உன்னிடம் சினிமாக் கலையை அழிக்க வரம் கேட்கவில்லை, தாயே! நீ வேறு எங்கேயாவது மனித ரூபத்தில் அவதரித்து சினிமாக் கலையை சீர்திருத்த வேணுமாய் உன்னைக் கேட்டுக்கொள்கிறேன். வேண்டாம், தாயே! சினிமாக் கலையை அழித்து விடாதே. அதன் மூலம் பல்லாயிரக் கணக்கான தொழிலாளிகளுக்கு அறை வயிற்றுக் கஞ்சிக்காவது வழி கிடைத்து வருகிறது. அதையும் நீ ஒழித்து விட்டால் அவர்கள் தற்போது நம் நாட்டிலுள்ள கைத்தறி நெசவாளிகளுடனும், மரமேரிகளுடனும் சேர்ந்துவிட வேண்டியதாகும். இதனால் அவர்களிடும் சாபம் உன்னைச் சுட்டெரித்து விடும். ஆகையால் இவ்வளவிற்கும் காரணம் நீதானே! இனியாவது நீ இதற்கெல்லாம் இடம் கொடாது முன்போலிருக்க அருள் புரிய வேண்டும், தாயே! நான் உன்னை வேண்டுவதெல்லாம் தற்போது காப்பியடித்துச் சீர்கெட்டுக் குலைந்து வரும் தமிழ் நாட்டு சினிமாக் கலை சீர்பட்டுச் சிறந்து விளங்க வேண்டுமென்பதுதான்.''

"பக்தா! உன்னை மெச்சுகிறேன். இருந்தாலும் சினிமாப் படம் தயாரிக்கும் சிற்சில முதலாளிகள் எதேச்சாதிகாரமாக அட்டகாசம் புரிவதை அடக்கவேண்டும் என்றுதான் இருந்தேன். அதற்கு முன் நீயே என்னிடம் முறையிட்டு என்னைப் பிரஸன்னமாகும்படி செய்துவிட்டாய். உம்...உன் அபிப்பிராயம்தான் என்ன?''

"இதோ சொல்லுகிறேன்:

அன்று திருமால் "திருச்சங்கை" ஊதி முழக்கினார் பாரதப் போர் தணிவதற்கு. இன்று நம் நாட்டுக் கலை வியாபார மன்னர்களோ, 'சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்தான் தாதன்' என்பதைப் போல கலைச் சங்கை ஊதி முழக்குகிறார்கள், கலை கரைய! இது எதற்கோ! இது உனக்குத் தெரியாததல்ல. ஆரம்பத்தில் மௌனப் படம் வந்தது. அதைக் கெடுத்தார்கள் வியாபாரத் தமிழர்கள். பிறகு வந்தது பேசும் படம். அதையும் கெடுத்தார்கள் மேற்படியார்களே. இன்னும் எதைத்தான் கெடுப்பார்களோ எனக்குத் தெரியாது. தற்போது வாய்ப்பந்தல் போடும் தன்மையாளர்கள் ஏட்டுச் சுரைக்காய் கரிக்கு உதவாது என்பதைப் போல படித்தும் பதராகிறார்கள். கடவுள் எப்படி எல்லோருக்கும் பொதுவோ அதைப் போல எந்த ஒரு மொழியும் எல்லோருக்கும் பொதுவானதுதான். இதைக்கூட புரிந்து கொள்ளாமல் ஊருக்குள் 'சவுடால்' அடித்துக் கொண்டு திரிகிறார்களே ஒரு ஊதாரிக் கூட்டத்தினர், அவர்களை நீ அழிக்க வேண்டும் அன்னையே! உன்னால் சிருஷ்டிக்கப்பட்ட அந்த செம்மறி ஆட்டு மந்தையை-நிந்தனை செய்வதாக நினைக்க வேண்டாம். தரகு வாங்கும் கும்பலின் மேல் எனக்குள்ள கடும் கோபத்தால் கூறுகிறேன். மாபெரும் அறிவாளிகளைப் படைத்த நீதானே இம்மாதிரியான கும்பலையும் படைத்திருக்கிறாய். இதற்கு நானல்லவோ உன்னைக் குறை கூறவேண்டும். இதை நீ உணர்ந்தால் என் மீது நிச்சயமாக கோபம் கொள்ளமாட்டாய்.''

"பக்தா! போதும் நிறுத்து. உன் சொல்லம்புகளால் என்னைத் திணறவைக்காதே. உனக்கு வேண்டியதை ஒவ்வொன்றாகச் சொல். என்னால் இயன்ற வரையில், கொடுக்கக் கூடியதைக் கேள், தருகிறேன்.''

''தாயே, சக்தி! நான் உன்னிடம் மணிமுடி தரிக்கும் மன்னனாக வேண்டும் என்று மன்றாடவில்லை. நம் தமிழ் நாட்டுச் சினிமாக் கலை எல்லா நாட்டு மக்களும் பார்த்து பயனடையக் கூடிய முறையில் இருக்கவேண்டும். 'தமிழன் ரத்தம்' 'தமிழன் ரத்தம்' என்று வெறி பிடித்த வேங்கையைப் போல கைக் கூலியை வாங்கிக் கொண்டு, வருங்காலத்தில் அறிஞர்களாகத் திகழவேண்டிய வாலிபர்களின் அறிவைக் கெடுக்கும் ஊதாரிக் கூட்டத்தை இருந்த இடம் தெரியாமல் மாய்க்கவேண்டும். முன்னிருந்த நிலையை அறியாத, 'முதலாள்' என்று சொல்லும் முடிச்சவிழ்க்கும் முட்டாள் கூட்

டத்தைச் சேரும் ஒரு சில படமெடுத்தாடும் பக்கிப் பாம்புகளைப் படு குழியில் தள்ளவேண்டும். என்னை ஈன்ற தாயே! இது மட்டும் செய்யவேண்டுமென்று உன்னை இரவும் பகலும் இடைவிடாது பூஜிக்கும் இச் சிறியேன் வேண்டுகிறேன். இதற்கு மேல் சொல்ல எனக்கொன்றும் தெரியாது. இந்த வசையைக் கண்டும், கேட்டும், அடியேன் பேரில் குறை கூறும் கசடர்களுக்குப் புத்தி புகட்டி, கலையைக் கண்ணியமாகக் கருதி பூஜிக்கும் கலைஞர்களைக் காத்து அருள வேண்டுகிறேன்.''

''...பட முதலாளி ஒருவர் எதிரே நின்ருர்...''

"மைந்தா! வேலை கேட்ட வேதாளத்திடம் ஒரு ரோமத்தைக் கொடுத்து அதை நிமிர்க்கச் சொன்னவன் கதையைப் போல இருக்கிறது, நீ எனக்குக் கொடுக்கும் வேலை. கலையின் பேரில் உனக்குள்ள தீவிர பற்றுதலால் கட கட வென வரங்களைக் கேட்டுவிட்டாய்! தமிழ் சினிமா உலகுக்கு ஒரு வழி காட்டியாக விளங்கவேண்டும் என்ற உன் ஆசை மெச்சத் தகுந்ததுதான். ஆனால், அதற்கு உண்மையிலேயே கலையார்வம் கொண்ட கண்ணியவான்களின் பெருமை பன்மடங்கு பெருக வேண்டும். அன்றுதான் உன் ஆசை நிறைவேற வழியுண்டு. 'அந்த நாள் என்று வரும்!' என்று மட்டும் கேட்டுவிடாதே. இன்று தமிழ் சினிமா உலகம் இருக்கிற நிலையில் என்னால் கூட அந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல முடியாது. கலையைக் கரைக்கும் கசடர்களைப் பற்றிக் குறிப்பிட்டாய். இருட்டு என்பது இந்த உலகத்தில் இருப்பதால் தானே வெளிச்சத்தின் பெருமையை உலகத்தார் உணர முடிகிறது. கெட்டவர்களைக் கண்டுதானே நல்லவர்களின் மகிமை பிரகாசிக்கிறது. ஆகவே, அந்தப் புல்லுருவிகளைக் கண்டு ஆயாசப்பட வேண்டாம். அவர்களைத் திருத்தவேண்டும் என்று கூறுகிருயே! உண்மையிலே தூங்குபவனைத் தட்டியெழுப்பலாம். தூங்குவதாக எண்ணிக் கொண்டிருப்பவனை எப்படியப்பா எழுப்புவது? இவர்கள் எல்லாம் இந்தக் கலை உலகத்தில் இன்னும் சிறிது காலம் இருப்பார்கள். 'எது வரையில்?' என்று கேட்கிருயா? பொதுமக்கள் இவர்களுக்கெல்லாம் சரியான முறையில் பாடம் கற்பிக்கும் வரையில்தான். சரி, பக்தா. நான் இன்னும் பல இடங்களுக்குப் போக வேண்டியிருக்கிறது. ஆகவே, நான் போகிறேன்.''

''தேவி! தேவி''! என்று ஆனந்தப் பரவசத்தோடு, கண்களை மூடியபடி பராசக்தி தேவியாருக்கு என்னுடைய வணக்கத்தைச் செலுத்தினேன்.

''என்ன ஸார், இன்றைக்கு ஷூட்டிங் இல்லையா''...என்ற சத்தத்தைக் கேட்டு நான் கண் விழித்து நிமிர்ந்து பார்த்தபோது, அங்கு 'வெறுங் கையால் முழம் போடும்' பட முதலாளிகளில் ஒருவர் நிற்பதைக் கண்டு, ''தேவியைக் கண்ட கண்களால் இவனையா காண்பது!'' என்று வெறுப்படைந்தவனாய் மறுபடியும் கண்களை மூடிக்கொண்டு, ''எனக்கு வேலை இருக்கிறது. போய்வாரும்'' என்று அவரை வெளியே அனுப்பிவிட்டேன்.

அமெரிக்க விளம்பர கண்காட்சி

அமெரிக்க விளம்பரக் கலைக் கண்காட்சி ஒன்று மவுண்டு ரோடு, அமெரிக்க சர்க்கார் விளம்பர இலாகா புத்தகசாலையில் சென்ற மாதம் 5ந் தேதி முதல் ஒரு வாரம் நடந்தது. அமெரிக்காவின் பிரபல சித்திரக்காரர்களால் வரையப்பட்ட விளம்பரச் சித்திரங்கள் அதில் வைக்கப்பட்டிருந்தன. அவற்றில் கலை மதிப்பும், விளம்பர முக்கியத்துவமும் சிறப்புடன் காணப்பட்டன.

“இது மெய்...

...நீங்களும் லக்ஸ் டாய்லட் சோப் உபயோகித்து அதிக அழகைப்பெறலாம்”

என்று கூறுகிறார் சுசீலா

நிச்சய பலனைத்தரும் ஒரு ஒழுங்கான அழகுப் பராமரிப்பு இதோ! சுசீலா கூறுவதாவது; “நான் லக்ஸ் டாய்லட் சோப்பின் நறுமணம் கொண்ட வெண்மையான நுரையை சருமத்தின் மேல் நன்றாகத் தேய்க்கிறேன். பிறகு கழுவி, மிருதுவான துண்டினால் துடைக்கிறேன். சருமம் புது அழகைப்பெறுகிறது.”

லக்ஸ் டாய்லட் சோப்

சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்

LTS. 367-50 TM

புஸ்தகப் பொழுது

அறப்போர்

[ஆசிரியர்: கி. வா. ஜகந்நாதன்; கிடைக்குமிடம்: அமுத நிலையம் லிமிடெட், தேனாம்பேட்டை, சென்னை-18; விலை: ரூ. 3; பரிசுப் பதிப்பு ரூ. 5.]

கடைச் சங்க நூல்களில் எட்டுத் தொகை வரிசையில் புறநானூறில் உள்ள ஏழு பாடல்களுக்கு இப் புத்தகத்தில் ஆசிரியர் விளக்கம் எழுதி யிருக்கிறார். பெருந்தேவனார் பாடிய கடவுள் வாழ்த்து முதலாவதாக இடம் பெற்றிருக்கிறது. கொன்றையைக் கண்ணியாகவும், தாரையாகவும் கொண்டு, விடைக் கொடியோடு விடையேறி ஊர்ந்து வரும் சிவபெருமானின் வேதியர் புகழும் நீலக் கழுத்தையும், அர்த்தநாரீ அம்சத்தையும், பதினெண் கணத்தினர் போற்றும் பிறை சூடிய அப்பெருமானின் திருக்கோலத்தையும் இப் பாடல் விளக்கத்தில் நம் கண்முன்னே கொணர்ந்து நிறுத்துகிறார்.

இரண்டாவதாக பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி மன்னன் அறம் வழுவாது போர் செய்யப் புகும் கொள்கையைப் பாடும் நெட்டிமையாரின் பாடல் விளக்கத்தில் பழங்காலப் போர் முறைச் சிறப்பும், போரில் கடைப் பிடிக்கப்பட்ட அறமும் அழகாக எடுத்துக் காட்டப்படுகின்றன.

மூன்றாவதாக, பேய்மகள் இளஎயினியின் பாடல் ஒன்று விளக்கம் செய்யப் பட்டிருக்கிறது. போரில் வெற்றி பெற்று எதிரியின் புறத்தைப் பெற்ற சேரமான், பிறருக்கு அளித்தவைகளைச் சொல்லி நிறுத்துகிறாள். 'பாடினி இழையும், பாணன் பொற்றாமரையும் பெற்றார்' என்று சொல்லி நிறுத்தும் போது 'நான் ஒன்றும் பெறவில்லையே!' என்பதையும் மறைமுகமாகக் குறிக்கிறாள் இளஎயினி. நாட்டு மக்களின் தேவைகளை முன்கூட்டியே அறிந்து சேமித்து வைத்து அமைதியைப் பாதுகாக்கும் சேரமானுடைய நாட்டு வளப்பத்தை விளக்கும் குறுங்கோழியூர் கிழாரின் பாடல் நான்காவதாக விளக்கப்பட்டிருக்கிறது.

ஐந்தாவதாக, அலூர் மூலங் கிழாரின் பாடலில் அக்கால புலவர் பெருமக்களிடம் மன்னர்கள் கொண்டிருந்த மட்டற்ற அன்பையும், 'புலவர்களுக்கு யாதும் ஊர்: யாவரும் உறவினர்' என்ற பரந்த கொள்கையையும் புலப்படுத்துகிறது. ஆறாவதாக அதிகமான் என்னும் சிற்றரசனின் கொடையைக் குறிப்பாகப் பாடும் ஔவையாரின் பாடலில் புலவர்களை மன்னர்கள் போற்றிய விதத்தை நுகரலாம். ஏழாவதாக கொடை வள்ளல் குமணனைப் பற்றிய பெருஞ்சித்திரனாரின் பாடலின் விளக்கம் இடம் பெற்றிருக்கிறது.

இந்நூலின் முகவுரையில் கூறப்பட்டுள்ள பண்டை தமிழ் இலக்கியங்களைப் பற்றிய செய்திகளும், பாட்டுகளின் விளக்கங்களும், ஆராய்ச்சியாளர்களுக்கும், மாணவர்களுக்கும் இன்றியமையாத பொக்கிஷமாகும்.

ஸ்தோத்திர மாலை
பஜகோவிந்தம்
சாஸ்வதி பூஜை
ஆதித்ய ஹ்ருதயம்

[பிரசுரகர்த்தர்: ஆக்கூர் கா. சு. ஸ்ரீநிவாஸன்; கிடைக்குமிடம்: சுகுணா பப்ளிஷிங் ஹவுஸ், 60, ஈஸ்வரன் கோயில் தெரு, மாம்பலம், மதராஸ்—17; விலைகள்; முதல் புத்தகம் 0-2-6; மற்ற மூன்று புத்தகங்களும் ஒவ்வொன்றும் 4 அணா.]

பலவகையிலும் நாஸ்திகப் பிரசாரம் அதிகரித்துவிட்ட இந்தக் காலத்தில் மக்களிடை தெய்வ நம்பிக்கை குறைந்து விடாது இருக்க வேண்டுமானால் அதற்கும் பிரசாரம் தேவைதான். புஸ்தகங்கள் வாயிலாகப் பிரசாரம் செய்வது ஒரு முறை. இந்த முயற்சியை சுகுணா பப்ளிஷிங் ஹவுஸ் உரிமையாளர் ஆக்கூர் கா. சு. ஸ்ரீநிவாஸன் திறம்படச் செய்து வருகிறார். அதை ஊர்ஜிதப்படுத்துவது போன்ற புஸ்தகங்கள் தாம் மேலே குறிப்பிட்டுள்ள அவர் வெளியிட்டுள்ள நான்கு புஸ்தகங்களும்.

"ஸ்தோத்திர மாலை": ஸ்ரீ சங்கர பகவத்பாதாள் அருளியது. தினசரி பாராயணம் செய்வதற்கு மிகவும் ஏற்றது இப்புத்தகம்.

"பஜகோவிந்தம்": இதுவும் ஸ்ரீ சங்கர பகவத் பாதாள் அருளியது. ஸ்லோகங்களுக்கு தமிழில் கருத்துறையுடன் வெளியிடப்பட்டுள்ளது.

"சரஸ்வதி பூஜை": பூஜா முறையும், மந்திரங்களும் அடங்கியுள்ள புஸ்தகம். புனர்பூஜை மந்திரங்களும் இறுதியில் சேர்க்கப் பட்டுள்ளன.

"ஆதித்ய ஹ்ருதயம்": சூரியனைக் குறித்து பிரார்த்தனை செய்யப்படும் ஸ்லோகங்களே இப் புஸ்தகம். ஸர்வ ஸ்ரேயஸையும், அஷ்ட ஐஸ்வரியங்களையும் அளிக்கவல்ல இந்த ஸ்லோகங்கள் தமிழில் கருத்துரையுடன் வெளியிடப்பட்டுள்ளது.

புஸ்தகங்கள் நான்குமே நன்ருகவும், குறைந்த விலையிலும் அச்சிடப் பட்டுள்ளன.

பத்ஹூல் இஸ்லாம்

இது ஒரு மாதப் பத்திரிகை. பெயரிலேயே பத்திரிகை முஸ்லிம்களுக்கானது என்பது தெரிகிறது. முதல் இதழில் 'ஆரிய குலத்தில் பிறந்த முஸ்லீம்' என்ற கட்டுரை ஆரம்பமாகியுள்ளது. தனிப் பிரதி விலை இரண்டணு. கிடைக்குமிடம்: 20, ஹைரோட், சென்னை-5.

நான்?

[ஆசிரியர்: 'இளம் சிற்பி'; விலை: ரூ. 1-0-0; கிடைக்குமிடம்: பாசுமணி பதிப்பகம், பொன்னாச்சி.]

இதிலுள்ள பல சிறு கதைகளிலும், விஷயம் கிட்டத்தட்ட ஒன்ருகத் தான் இருக்கிறது. "பணக்காரன் அக்கிரமக்காரன்; ஏழை அவனது பணத்திமிரினல் அடக்கி ஒடுக்கப் படுகிருன்"—இது தான் அநேகம் கதைகளின் சாராம்சம். மொத்தத்தில் அர்த்தமற்ற கருத்துகள் கொண்ட அவலக்ஷணக் கதைகள் என்றுதான் கூற வேண்டும்.

உதயபானு

[ஆசிரியர்: "சாண்டில்யன்"; விலை: ரூ. 1-10-0; கிடைக்குமிடம்: அமுத நிலையம் லிமிடெட், சென்னை-18.]

ஆசிரியரால் எழுதப்பட்ட, "உதய பானு" "இளையராணி" என்ற இரண்டு குட்டி நாவல்கள் இப் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளன. இரண்டுமே ராஜபுத்திரர்கள் பற்றிய சரித்திர சம்பந்தமானவை. சரித்திரத்திலே காணப்படும் ஒரு நிகழ்ச்சியை ஆதாரமாகக் கொண்டு கதைகளைப் பின்னியிருக்கிருர் ஆசிரியர். கதை இரண்டுமே

மனதிற்கு மகிழ்ச்சி அளிப்பது!

காரம், மணத்தில் நிகரற்றது!

எங்கும் கிடைக்கும்

சுவாரஸ்யமாக விறுவிறுப்பான நடையில் இருக்கின்றன. கவர்ச்சிகரமான அட்டைப் படத்துடன் புத்தகத்தை நல்ல முறையில் பிரசுரகர்த்தர்கள் வெளியிட்டுள்ளனர்.

அன்பும் அறிவும்

[ஆசிரியர்: வித்துவான் இரா. இளங்குமரன்; விலை: 2 அணா; கிடைக்குமிடம்: தமிழாசிரியன், பு. மூ. மா. உயர் நிலைப் பள்ளி, தளவாய்புரம்.]

ஆத்திசூடி, கொன்றை வேந்தன் போன்ற நூல்களைப் போல, அன்பையும், அறிவையும் பற்றி ஆசிரியர் எழுதியுள்ள நன்மொழிகள் பல அடங்கியுள்ளன இப் புத்தகத்தில்.

கதேயின் பாஸ்ட்

[மூலக் கதை: கதே; தமிழாக்கம்: பி. ஐயாசாமி எம். ஏ., விலை: ரூ. 1-4-0; கிடைக்குமிடம்: அமுத நிலையம் லிமிடெட், சென்னை-18.]

கதே என்ற மேனாட்டு ஆசிரியரால் எழுதப்பட்ட சிறு நாவலாகும் இது. மனிதனுக்கு மாய மந்திரங்களில் உள்ள நம்பிக்கையை ஆதாரமாகக் கொண்டு நாவலை எழுதியிருக்கிறார் மூல ஆசிரியர்.

முத்து மாலை

[ஆசிரியர்கள்: அ. வெ. சுப்பிரமணியன், வெ. சுந்தரராஜன்; விலை: ரூ. 1-0-0; அல்லயன்ஸ் கம்பெனி, த. பெ. நிர். 617, மயிலாப்பூர், சென்னை-4.]

இந்தப் புத்தகத்தில் 'முத்து மாலை'யும் வேறு நான்கு கதைகளும் இருக்கின்றன. கதைகள் அனைத்தும் சிறுவர்களுக்கு மிகவும் ஏற்றவை. பெரிய எழுத்துக்களில் பளிச்சென்று அச்சிடப் பட்டுள்ளன.

சரத் சந்திரர் கதைகள்

[மொழி பெயர்த்தவர்: சு. குமாரசாமி, பி. ஏ., விலை: ரூ. 1-8-0; கிடைக்குமிடம்: அல்லயன்ஸ் கம்பெனி, த. பெ. நிர். 617, மயிலாப்பூர், சென்னை-4.]

பிரபல வங்காள கதாசிரியர் சரத் சந்திரரின் ஐந்து மணியான சிறு கதைகளின் தொகுப்பே இப் புஸ்தகம். கதைகள் அனைத்துமே உள்ளத்தைத் தொடக் கூடியனவாக இருக்கின்றன. கதைகளை சிறப்பாக மொழி பெயர்த்திருக்கிறார் சு. குருசாமி.

ரமா

[ஆசிரியர்: "குங்குமம்"; விலை: ரூ. 1-8-0; கிடைக்குமிடம்: அமுத நிலையம் லிமிடெட், சென்னை-18.]

புதிதாகப் புக்ககம் சென்ற ரமா, தன் சிநேகிதி கீதாவுக்குப் பல கடிதங்கள் எழுதுகிறாள். அந்தக் கடிதங்களினிடையே ரஸமான கதை ஒன்றும் ஓடுகிறது. 'புதுமையை நாடி பழமையை வெறுத்து ஒதுக்கிவிடக் கூடாது; ஆனால், அதற்காக பழமையையே பின்பற்றவும் கூடாது. பழமையும் புதுமையும் கலந்த புது வாழ்வு வேண்டும்' என்ற கருத்தை அடிப்படையாக வைத்து கதையை—கடிதங்களை—எழுதியிருக்கிறார் ஆசிரியர்.

தேசிய ஜய கீதம்

[இயற்றியது: டி. ஆர். விஸ்வநாத சாஸ்திரி; விலை: அணா 8; கிடைக்குமிடம்: அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை-4.]

'பாரதத் தாய் வணக்கம்', 'காந்தி திருப்புகழ்', 'கதரின் புகழ்' இப்படிப் பல கீர்த்தனைகள் ஆசிரியரால் இயற்றப்பட்டவை இப் புத்தகத்தில் உள்ளன.

இன்பத் தேன்

[ஆசிரியை: "அநுத்தமா"; விலை: ரூ. 1-4-0; கிடைக்குமிடம்: அமுத நிலையம் லிமிடெட், சென்னை-18.]

ஒரு மாற்றாந்தாயை பிரதான பாத்திரமாகக் கொண்ட ரஸமான நாவல் இது. அன்பான தாயாக இருந்தும், கொடுமைப் படுத்தும் மாற்றாந் தாய் என்ற பேச்சுக்கு ஆளாகி பல கஷ்டங்களையும் அனுபவிக்கிறாள் பத்மாவதி என்ற அந்தப் பெண். ஆனால் கடைசியில் அவள் இன்பத் தேன் என்பதை அனைவரும் உணர்கிறார்கள். படித்து மகிழ வேண்டிய நல்ல நாவல் இது.

வேதாளக் கதைகள்

[ஆசிரியர்: த. நா. சேனாபதி; விலை: ரூ. 2-0-0; அல்லயன்ஸ் கம்பெனி, த. பெ. நிர். 617, மயிலாப்பூர், சென்னை-4.]

விக்கிரமாதித்ய மகாராஜா பற்றிய கதைகள் பல இதில் அடங்கியுள்ளன. வேதாளத்தை மன்னன் வெற்றி கொள்ளு முன், வேதாளம் கூறிய ரஸமான கதைகள் இதில் அடங்கி உள்ளன.

நமக்கு மதிப்புரைக்குப் புஸ்தகங்கள் அனுப்புவோர் இரண்டு பிரதிகள் அனுப்பி வைக்க வேண்டும்.

—ஆசிரியர்.

பொதுஜனம் பேசுகிறார்

★ இப் பகுதியில் வெளியான 'பெண்மைக்கு அவமானம்' என்ற கடிதத்தையும் அதற்கு மறுப்பான 'ஏன் யோசிக்கவில்லை' என்ற கடிதத்தையும் சீர் தூக்கிப் பார்த்தேன். நண்பர் எண்ணியிருப்பது போல் தமிழகப் பெண்கள் ஒரு காலத்தில் பெருமை யுள்ளவர்களாக இருந்தார்கள் — ஏன் இன்றளவும் அப்படித்தான் இருக்கிறார்கள்! இருப்பினும், ஒரு சில ஊதாரிகள் நாளுக்கு நாள் நாகரீகத்தின் பெயராலும், புதுமையின் பெயராலும் எத்தகைய கீழான நிலைமையினை நோக்கிச் செல்கிறார்கள் என்பதை அன்பரும் அறிந்திருப்பார். இக்கால நவ நாரீமணிகளில் ஒரு சிலர்—புத்துணர்ச்சி பெற்ற புதுமைப் பெண்களில் ஒரு சிலர்—தங்களின் பண்டையப் பெருமைகளை மறந்து ஆண்மைக்கு எதிராக எக்காள மிடுவதை எடுத்துக் காட்டுவதில் என்ன தவறு இருக்கிறது? இதில் வெட்கப் படவேண்டிய விஷயம் என்ன இருக்கிறது? உண்மையில் மாதர் சங்கங்களில் பங்கு கொள்ளும் தமிழகப் பெண்களில் சிலர்—தாங்கள் கற்றவர்கள், நாகரீகம் முற்றும் அறிந்தவர்கள் என்ற மமதையில் பல பல வெறுக்கத் தக்க நிகழ்ச்சிகளை நிகழ்த்தி—தாங்கள் 'கண்ணகி மரபினர்கள்' என்ற பண்டையப் பெருமையையே மறந்து, மாசற்ற மற்ற பெண்களையும் தவறான வழிக்கு இழுத்துச் செல்கின்றனர்! எனக்குத் தெரிந்த, கண்களால் கண்ட சம்பவங்கள் பலவற்றை நான் குறிப்பிட முடியும். ஆகவே, புதுமைக் கதைகளிலே —புரட்சிக் கதைகளிலே—படிப்பின் மிகுதியால் பண்டைய பண்பை மறந்து, நாகரீக நங்கையர் தாம் என்ற எண்ண எழுச்சியினால் செய்யும் தவறுகளைச் சுட்டிக் காண்பித்தே தீரவேண்டும்! கதாசிரியர்களின் கற்பனைகளிலே நடமாடும் நங்கையர் அனைவரும் நல்லவர்களாகவே தென்பட வேண்டும் என்று எண்ணுவது குறுகிய மனப்பான்மையைத் தான் காட்டும். படித்த பெண்களை பண்புடையவர்களாக சித்தரிக்க வேண்டும் என்பதற்காக, அவர்களிடையில் காணப்படும் குறைபாடுகளை ஏன் மறைக்கவேண்டும்? சீர் திருத்தத்தின் பெயரால் எல்லாம் தெரிந்தவர்கள் போல் 'பாவலா' செய்து கண்டனத்துக்குரிய கட்டங்களை யெல்லாம் 'சவலாடித்தனமாக' சித்தரித்து, பொதுவாக பலரது மனதைப் புண்படுத்தும் அளவுக்கு சினிமாக் கதாசிரியர்கள் பெருகிவிட்ட இக் காலத்தில், இளமங்கையர்களது தவறான வழிகளை எடுத்துக் காண்பித்து திருத்துவதற்கான கற்பனை செய்வது வரவேற்கத் தக்கதே!

எம். எம். பொன்னுசாமி, கரூர்.

குறை நீங்குமா?

பல படங்கள் எல்லா அம்சங்களும் பொருந்தியிருந்தும், வசனங்கள் சரிவர அமையாமையால் தோல்வியடைகின்றன. பொது ஜனங்களின் நன்மதிப்பைப் பெற வசனம் முக்கியமாகும். வசனத்தின் உணர்ச்சியும், அதிலுள்ள பிரதிபலிப்புமே படத்தின் முக்ய அங்கமாகும். வெற்றி பெற்ற படங்களைப் பாருங்கள். வசனத்தின் மேன்மையாலேயே அவற்றின் வெற்றி கிட்டியது என்று தைரியமாய்க் கூறலாம். "சம்சாரம்" "ஏழை படும்பாடு" "காஞ்சனா" இவற்றின் வசனம் பொதுஜன மதிப்பைப் பெற்றதால் சிறப்புற்றன. நடிப்பும், பேசுபவரின் உணர்ச்சியும் மட்டுமிருந்தால் போதாது. வசன நடை நன்றாயிருந்தால் தான் நாம் கதையையும், நடிப்பவரின் உணர்ச்சிகளையும் ரஸிக்க முடிகிறது. நம் நாட்டில் எழுத்தாளர்களுக்குப் பஞ்சமில்லை. நல்ல வசனங்களை அமைத்துக் கொடுப்போருக்கும் பஞ்சமில்லை. எத்தனையோ எழுத்தாளர்கள், எளிய நடையில், பொதுஜனங்கள் விரும்பி, அநுபவித்துப் புரிந்து கொள்ளும்படி, எழுதும் ஆற்றல் படைத்தவர்கள் இருக்கிறார்கள். அவர்களைத் தேடிப் பிடித்து, வசனம் அமைக்கச் சொல்வது நல்லது. ஆபாஸ வசனம், பல்லை உடைக்

★ பரிசு பெற்ற கடிதம்

எழுதியவர்:

எம். எம். பொன்னுசாமி,

6/55, ஆலமரம் தெரு,

கரூர்.

கும் இலக்கண வசனம், ஆரம்பித்த எழுத்திலேயே அரை மணி பேசி அதிலேயே முடிக்கும் சர்க்கஸ் வசனம், பிராஸம் இவைகளை ஜனங்கள் ரஸிக்கும் காலம் மலையேறிவிட்டது. கையில் வெண்ணெயிருந்தும் நெய்க்கு அழுவதுபோல், தலைசிறந்த எழுத்தாளர்கள் மலிந்துள்ள நம் நாட்டில் நல்ல வசனம் இல்லாக் குறை நீங்குமா?

ராஜேஸ்வரி மாத்ருபூதம்,
மயிலாப்பூர்.

செய்வார்களா?

படமானது காலத்திற்கு ஏற்றபடி கருத்துடன் எடுக்கப்பட வேண்டும். பாரத தேசத்திலேயே முதன் முதலாக 'மதுவிலக்கை' அமுலுக்குக் கொண்டு வந்து பரிபூரண வெற்றியை அடைந்த பெருமை நம் சென்னை மாகாணத்திற்கே உரியதாகும். அப்படிப்பட்ட சென்னை மாகாணத்தில் "என் தங்கை" தமிழ்ப் படம் மதுப் பிரியர்களுக்கு பழைய போதையைக் கிளறி விடுகிறது. கதாநாயகன் மதுவை அருந்திவிட்டு ஆனந்தமாயிருக்கும் காட்சிகளைக் காணும்போது, 'நமது அரசாங்கமும் மதுவிலக்கை அமுலுக்குக் கொண்டு வந்திருக்கா விட்டால் நாமும் கதாநாயகனைப்போல மதுவை அருந்திக்கொண்டு மன மகிழ்ச்சியுடன் இருந்திருக்கலாமே. இந்த அரசாங்கத்தினால் தானே நம் கதி இப்படி ஆகிவிட்டது' என்ற கெட்ட எண்ணத்தை எழுப்பி, அவர்களுக்கு அரசாங்கத்தின் மீது தீரா வெறுப்பையும் உண்டுபண்ணச் செய்கிறது. கதாநாயகனை ஆரம்பத்தில் மதுப் பிரியனைக் காண்பித்து, கடைசியில் அவன் மதுவை அறவே விடுவதைப் போலக் காண்பித்திருந்தால் படம் மிகவும் சோபித்திருக்கும். இனியேனும் படத் தணிக்கை அதிகாரிகள் தங்கள் பொறுப்பை உணர்ந்து கடமையைச் சரிவரச் செய்வார்களா?

எம். எம். கிருஷ்ணன், பம்பாய்.

வரவேற்கிறேன்!

வெட்டுக்கிளியார் நட்சத்திரங்களின் 'மரியாதை வாரத்'தைப் பற்றி சில மாதங்கள் முன் 'குண்டூசி'யில் எழுதியிருந்தார். அதற்கு ஆதரவாக சமீபத்தில் சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சி பெரிதும் பரவசத்திற்குரிய, பாராட்டும் விதத்தில் உள்ளது. தென்னாட்டில் வீசிய கடும் புயலால் பெரிதும் பாதிக்கப்பட்ட திருச்சி, தஞ்சை ஜில்லா மக்களுக்கு நிவாரணமளிக்க சென்னை சினிமா நக்ஷத்திரங்கள் நகரிலுள்ள கடைகளுக்கு நடந்து, நிதி வசூல் செய்ததை நேரில் கண்டு களித்த சென்னை வாசிகளுக்கும், செய்தித் தாள்களின் மூலம் விஷயமறிந்த மற்ற ஊர்களின் சினிமா ரஸிகர்களுக்கும் இந்நிகழ்ச்சி மிகவும் மனமகிழ்ச்சி அளித்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. 'வெட்டுக்கிளி'யார் கூறியதுபோல "மரியாதை வாரமோ, வருஷமோ" கொண்டாடுவதைவிட இவ்வாறு நம் நக்ஷத்திரங்கள் மக்கள் மத்தியிலே பழக்கங் கொண்டு, அவர்களின் நன்மையில் விருப்பம் கொள்வது வரவேற்கக்கூடியதே! இவ்வித நல்ல காரியங்களில் தமிழ்ப் பட நட்சத்திரங்கள் அனைவரும் பங்கு கொள்ள வேண்டியது மிகவும் அத்தியாவசியமானது! வாய்ப் பேச்சுகளால் மரியாதை தெரிந்து கொள்ளதாகப் பேசும் நட்சத்திரங்களும், "நமக்கேன் இந்த 'லாபமற்ற' தொழில்கள்" என்று எண்ணிக் கொண்டு, மக்கள் மத்தியிலே நடமாடப் பயப்படும் நட்சத்திரங்களும் இனி இவ்வித காரியங்களில் தாங்கள் பெருமளவு பங்குகொண்டு, சேவை செய்ய முன் வருவார்கள் என்று நம்பலாம் அல்லவா?

ஆர். தங்கவேலன், திருச்சி.

முன்வர வேண்டும்!

கடவுள் நம்பிக்கை என்பது எல்லா நாட்டிலும் இருக்கிறது. இருந்தபோதிலும் நமது இந்தியாவின் பண்டைய பண்பாடுகளையும், கலாசாரத்தையும் கண்டு பல நாடுகளும் ஆச்சரியப்படுகின்றன. படித்தறிந்து பகுத்துணர முடியாத பாமர மக்கள் பலருக்கும் உலகியலறிவை உணர்த்த மிக்க உதவியாக இருக்கிறது சினிமா. இப்படிப்பட்ட சினிமாவை (வசனம், நடிப்பு, பாடல்முதலியவைகளினால்) நாஸ்திகத்தையும் புராதன கலாசாரத்திற்கு அழிவையும் உண்டாக்கச் சிலர் பயன்படுத்துகிறார்கள். சினிமாவினால் ஆஸ்திகத்திற்கு அழிவும், ஆபாசத்திற்கு ஆதரவுந்தான் வளர்ந்து வருகிறது, இப்படிப்பட்ட படங்களினால் படிப்பில்லாத பாமர மக்களின் அறிவுதான் அதிகமாய் பாதிக்கப்படுகிறது. மக்களின் ஒழுக்கமும், சமூகமும் கெட்டுப் போகாமலிருக்க, இனிமேலாவது கலாசாரம், பண்பாடு, சமூக உயர்வு, தேசப்பற்று, வீரம்

பெல் பிக்சர்ஸார் பொங்கலன்று வெளியிட்டுள்ள "வேலைக்காரி மகள்" தமிழ்ப் படத்தில் என். டி. ராமராவும், லக்ஷ்மி ராஜ்யமும் தோன்றும் ஒரு காட்சி இது.

முதலியவைகள் கொண்ட படங்களாக எடுக்க சினிமா உலகம் முன் வரவேண்டும். நல்லது செய்ய முடியாவிட்டாலும் தீமையைச் செய்யாமலாவது இருக்க வேண்டும்!

எஸ். வி. வரததேசிகன், புதுச்சேரி.

ரஸிகர்கள் கவனிக்க!

தமிழ்ப் பட உலகம் மட்டுமல்ல, கடந்த சில ஆண்டுகளில் ரஸிகர்களின் எண்ணிக்கையும், அவர்களின் ரஸிகத் தன்மையும்கூட முன்னேறியிருக்கிறது. எல்லாப் படங்களையும் பாகுபாடு இல்லாமல் பார்த்த மக்களின் மனோபாவம், புரட்சிகரமான மாறுதலை நாடுகிறது. இன்றைய ரஸிகர்கள் 'சிறந்த அம்சங்களுள்ள படம் எது!' என சீர்தூக்கிப் பார்த்து நல்ல படங்களை மட்டும் பார்க்கின்றனர். ரஸிகர் உலகம் முன்னேறியிருப்பினும் கூட ரஸிகர்களில் சிலர் கண்ணியக் குறைவான நடவடிக்கைகளில் ஈடுபடுவதையும் கண்டிக்காமலிருக்கமுடியாது. அண்மையில் திரைக்கு வந்த புதியதொரு தமிழ்ப் படம் பார்க்கச் சென்றிருந்தேன். பிரமாதமாக இருக்குமென பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட அப்படம் பெருத்த ஏமாற்றமாய் இருந்தது. எனவே, தியேட்டரிலுள்ள சிலர் இடை இடையே (படம் நடந்துகொண்டிருக்கும்போதே) எழுந்து நிற்கவும், கூச்சலிட்டுக் கத்தவும் ஆரம்பித்துவிட்டனர். படம் படுமோசமாக இருக்கலாம். ஆனால், அதற்காக தியேட்டரில் இருந்துகொண்டு பிறருக்கு இடையூறாக படம் நடக்கும்போது வீண் அரட்டையடித்து ஆர்ப்பாட்டம் செய்வதின் பயன் என்ன? இப்படிச் செய்வதாலேயே படத்தின் தரம் உயர்ந்து விடுமா? இவ்வித கௌரவக் குறைவான செயல்களில் ரஸிகர்கள் ஈடுபடுவது ரஸிகர் உலகத்திற்குப் பெரும் இழுக்கை ஏற்படுத்துவதாகும். "பார்க்கத் தகுதியற்றவை; படுமோசம்" என்று தெரிந்தால் அனைவரும் கட்டுப்பாடாய் அமைதியாக தியேட்டரை விட்டு வெளியேறுவதன் மூலம் படத்தை பகிஷ்கரிக்கலாம். இப்படிச் செய்வது மட்டரக படத்தைத் திரையிடுவோருக்கும், தயாரிப்பவருக்கும் நல்லதொரு சவுக்கடி கொடுப்பது போலாகும். அதைவிட்டு,

பணம் கொடுத்து படத்தையும் பார்க்காமல், அமைதியைக் குலைக்கும் வகையில் தியேட்டரில் கூச்சலிடுவதால் யாருக்கு என்ன பயன் !

மு. புரட்சிப்பித்தன், மதுரை.

வருந்துகிறேன்....?

பழமையிலிருந்து தொன்று தொட்டு நாட்டியக் கலையில் சிறந்து விளங்கியது நம் தமிழ் நாடு. அதை யாரும் மறுக்க முடியாது ! வாழையடி வாழையாக நடனக் கலை நாடெங்கும் பரவி சிறப்புப் பெற்று வந்தது. எத்தனையோ பத்திரிகைகள் நடனக் கலை நசுக்கப்பட்டு விடாமல் இருப்பதற்காக அல்லும் பகலும் உழைத்து வரும் இந் நாளிலே—வெளிவரும் படங்களைப் பார்த்தால் மிகவும் வெட்கப்படவேண்டிய விஷயம்! ஏதோ பெயரளவிற்கு ஒரு நடனம்தான் இருக்கிறது. மற்றவையெல்லாம் வெறும் 'டப்பா சங்கீதத்திற்கு ஏற்ற ஆபாசக் கூத்துதான் ! இன்னும் சிறிது நாட்களில் நாட்டியக் கலை நசுக்கப்பட்டு விடுமோ என்று நடுங்குகிறேன்—அஞ்சுகின்றேன்; இந்த நிலையை கலா ரசிகர்களாகிய நாம் வளரவிடக் கூடாது' என்று வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

வ. ச. சுந்தரேசன், மதுரை.

பாராட்டுகிறேன் !

"ஆஸ்திகர்கள் பார்க்க வேண்டிய படம்" என்ற தலைப்பில் "பராசக்தி" என்ற படத்தைப் பற்றிய தங்களின் அழகான விமர்சனத்தைக் கண்டு பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன். நாஸ்திகம் பரவியிருக்கும் தற்போதை தமிழ் நாட்டில் தமிழர்கள் என்று சொல்லித் திரியும் போலித் தமிழ் வகையினர்க்கும், இவர்களைப் பின்பற்றும் அறிவிலிகளுக்கும் சரியான சாட்டையடி கொடுத்து, கண் திறந்து வைக்க ஒரு உணர்ச்சி மிக்க உண்மைத் தமிழரான ஒரு ஆசிரியர் இருக்கிறார் என்பதை அறிந்து, மிகவும் பெருமையும் மகிழ்வும் எய்துகிறேன். எத்தனையோ நாட்கள் என் மனப்பூர்வமான மகிழ்ச்சியையும், வந்தனத்தையும், நன்றியையும் ஆஸ்திகர்களின் சார்பாகத் தெரிவிக்கக் கருதினேன். ஆனால், கல்லூரி மாணவியாகிய எனக்கு இப்போதுதான் ஓய்வு கிடைத்தது. எம்மதமும் சம்மதம், எவ்வினமும் தம் இனம், எம்மொழியும் தம்மொழி, எவ்வுயிரும் தம் உயிர், யாதும் ஊரே. யாவரும் கேளிரே" என்ற உயர்ந்த உன்னதமான இந்து மதத்திற்கு எதிரிடையாக ("பராசக்தி" என்ற படம் எழுந்தாலும், தொன்று தொட்டு வந்த பழம் பெரு இந்து மதத்தை அழிக்க, இம்மாதிரியான, நாஸ்திகக் கட்சியின் பிரசங்கங்களை அடிப்படையாகக் கொண்ட இவ்வகைப் படங்களால் ஒருக்காலும் முடியாது என்பது உறுதி. தஞ்சையில் மாபெரும் கலைக் கோயில் கண்ட தமிழன் வாழ்ந்த தமிழ் நாட்டில் இத்தகைய கூட்டத்தினரின் பிரசாரம் ஒரு அவக்கேடு என்றால், இதை கவனியாது இருக்கும் அரசாங்கத்தின் அசிரத்தை மற்றொரு வருந்தவேண்டிய விஷயமாகும். இதனால் நாட்டின் எதிர்கால பொக்கிஷங்களான பள்ளிச் சிறுவர்கள், எதற்கெடுத்தாலும் வாதம் செய்யக் கற்றுக் கொண்டு, கடமை, மதிப்பு, மரியாதை அனைத்தையும் மறக்கின்றனர். இத்தகைய படங்கள், தமிழ் நாட்டிற்கே ஒரு பெரும் அவமானம். இந்து மதத்தின் கோட்பாடுகளை இழிவு செய்யும் இத்தகைய படங்களை இனியாவது அனுமதிக்காமல் இருந்தால்தான் நம் நாடும் மேல் நாடுகள் போல் முன்னேற வழியுண்டு.

கே. கீதா, வேலூர்.

சினிமாவே வேண்டாம் !

கடந்த நவம்பர் மாதம் வெளியிடப்பட்ட "ஜகன் மோஹினி" படத்தைப் பார்த்த பிறகு என்னைப் போன்ற சினிமாப் பித்தர்கள்கூட "சினிமாவே வேண்டாம்" என்று சொல்லத் துணிந்தால் ஆச்சரியப் படுவதற்கில்லை. அதை ஒரு சாரமற்ற ஆபாசக் குப்பை என்று கூறலாம். ஜனங்களுக்கு அவசியமற்ற—பயனற்ற ஒரு கதையிலே ஆபாசத்தின் எல்லையை அடைந்து விட்டார்கள். எனக்கு ஏற்படும் ஆத்திரத்திலே, "இனிமேலும் அந்த மாதிரிப் படங்களை எடுக்கத் தயாரிப்பாளர்கள் எண்ணுவதானால், சென்ஸார் போர்டும் இதேமுறையில் தூங்கிக் கொண்டிருக்குமேயானால், சினிமாவுக்கே கடை விதித்துவிடலாம்" என்று கூறத் தோன்றுகிறது. ஆபாசத்தை, அர்த்தமற்றதைப் படமாக எடுப்பதை விட சம்பந்தப்பட்டவர்கள் இந்தத் தொழிலையே விட்டு விடுவது கலைக்கு அவர்கள் செய்யும் பெரிய தொண்டாயிருக்கும்.

வி. ராஜம், மஞ்சக்குடி.

வீரத்தேவன் கோட்டை

நீங்கள் முன்பு படித்தது: டைரெக்டர் ரவிசந்தரின் ஸினிமாப் படக் கோஷ்டியினர் வெளிப்புறக் காட்சிகளைத் தயாரிப்பதற்காக இயற்கை வளம் மிகுந்த ஓர் இடத்தில் முகாமிட்டிருக்கின்றனர். இடைவேளை போஜனத்திற்குப் பிறகு, சிறிது தூரத்தில் பாழடைந்து தோற்றமளித்த (வீரத்தேவன்) கோட்டையைப்பற்றி அவர்களிடையே பேச்சு ஆரம்பமாகிறது. படக் கதாசிரியர் வீரத்தேவன் கதையைச் சொல்ல ஆரம்பிக்கிறார்; கதாநாயகி காமினி ஸ்வாரஸ்யமாய் கதை கேட்கிறாள்.

"சோழநாட்டுப் பெரிய மிராசுதாரர் குடும்பத்தைச் சேர்ந்த வீரத்தேவன், பாண்டிய நாட்டிலிருந்து பிழைப்பிற்காக சோழ நாடு வந்திருந்த நண்பன் இருளப்பனுடன், ஒரு பெட்டி வண்டியில் கொள்ளிடக் கரையை அடைகிறான். அப்பொழுது திருவிழா சமயமாதலால் அங்கு ஏராளமான கடைகளும், ஜனத்திறளும் காணப்படுகிறது. வண்டியை விட்டிறங்கியதும், சிறிது தூரத்தில் ஒரு மரத்தடியில் ஒரு கிழவியினிடம் குறி கேட்டிருந்த இரு பெண்கள் இவர்களது கவனத்தைக் கவருகின்றனர். அவர்களில் ஒருத்தியான 'கருப்பழகி'யிடம் வீரத்தேவன் மனதைப் பறிகொடுக்கிறான். அந்தப் பாண்டிய நாட்டு அழகியும் கடைக்கண்ணால் இவனைப் பார்க்கிறாள்.

கதாசிரியர் இத்துடன் கதையை நிறுத்துகிறார்; மீண்டும் ஷூட்டிங் ஆரம்பமாகிறது. இனி நீங்கள் மேலே படியுங்கள்.

இரண்டாம் அத்தியாயம்

134142

லக்ஷ்மி

மறு நாள் படப்பிடிப்பின் இடைவேளை எப்பொழுது வரும் என்று காமினி துடித்துக்கொண்டு காத்திருப்பவள் போல், மரத்தடியில் விரிக்கப்பட்டிருந்த ஜமக்காளத்தில் ஓடி வந்து உட்கார்ந்து கொண்டாள். அன்றைய தினம் உணவுப் பங்கீடு செய்யும் கைங்கர்யத்தை டைரெக்டர் ரவிசந்தர் ஏற்றுக்கொண்டிருந்தார். அமெரிக்காவிற்குச் சென்று ஸினிமா உலகத்தைச் சுற்றிப் பார்த்து வரும் ஒரு வாய்ப்பு சமீபத்தில் அவருக்கு ஏற்பட்டிருந்தது. மேல் நாட்டு நாகரீகத்திலே ஏற்கெனவே கொஞ்சம் பற்றுக் கொண்டிருந்த அவருக்கு, அங்கிருந்து திரும்பி வந்ததும் அது இரட்டிப்பாக அதிகரித்திருந்தது. ஆகவே, அன்றைய தினம் படத்தின் வெளிக் காட்சிக்காக டைரெக்டர் வீட்டிலிருந்து வந்த உணவிலே மேல்நாட்டு சமையற் கலையின் மணம் வீசியது. தயிர் சாதம், தேங்காய் சாதம், இட்டலி சாம்பார் என்று நாக்கைத் தமிழர்களின் உணவிற்கே பழக்கப்படுத்தியிருந்த கங்காதரத்துக்கு, 'விஜிட்டபிள் ஸாண்ட் விச்சு'களும், 'கேக்'குகளும் அவ்வளவாகப் பிடிக்கவில்லை. ரொட்டிகளின் இடையே திணிக்கப் பெற்றிருந்த பாலேட்டுக் கட்டியின் புளிப்பு வாசனை வயிற்றைப் புறட்டவே, போஜனத்தின்போது அடிக்கடி அவர் முகத்தைச் சுளுக்கினார்.

உணவு விஷயத்திலே காமினி சமநோக்குடையவள். மேல் நாடு, கீழ் நாடு என்றெல்லாம் உணவிலே பாரபட்சம் அவளுக்குக் கிடையாது. ஆகவே, அவள் சாக்லெட்டும், வெண்ணெயும் தடவியிருந்த பெரிய கேக் துண்டு ஒன்றைக் கையில் எடுத்துக்கொண்டு, சாப்பிட்டுக் கொண்டிருந்தாள்.



“முருகலான மசாலா தோசை கிடைத்திருந்தால் ஒரு கை பார்த்திருக்கலாம். உப்புச் சப்பில்லாத இந்த ரொட்டியும் வெண்ணெயும் அவ்வளவாகத் திருப்தி கொடுக்கவில்லை. இருந்தாலும் நல்ல சூடான மணம் வீசும் காப்பி இருக்கிறது, ஒன்றுக்கு இரண்டு கப்பாக எடுத்துத் தாராளமாகச் சாப்பிட்டு அந்தக் குறையை நிவர்த்தி செய்து கொள்வோம்'' என்று தமக்குள்ளே எண்ணிய கதாசிரியர், சூடான காப்பியை மெல்ல ருசி பார்த்துப் பருகிக் கொண்டிருந்தார். இரண்டு வாய் காப்பி உள்ளே சென்றதும், அவரது மூளை விறுவிறுக்கத் தொடங்கியது.

‘கேக்’குத் துண்டத்தைக் கடித்து விழுங்கியவுடன், ‘‘அந்த மகிழ மரத்து மோஹினி திரும்பிப் பார்த்த பிறகு என்ன நடந்தது? கதையை மேலே சொல்லுங்கள், கேட்கலாம்'' என்று தூண்டினாள் காமினி.

பிரசித்திபெற்ற

நீபா

- ஹேர் ஆயில்
- டாய்லட் சோப்
- பிரில்லியண்டைன்
- ஸ்னோ
- ஊதுபத்திகள்

நறுமணத்திற்கு மறுபெயர்

கங்கா ஒர்க்ஸ், அடையார், மதராஸ்-20.

EP

தொண்டையைப் பலமாக இருமிச் சரிப்படுத்திக் கொண்ட கதாசிரியர், காமினியை நோக்கி, "என்ன நடக்கும் ? உங்களால் ஊகிக்க முடியவில்லையா ? அழகான இளம் பெண் ஒருத்தி, ஆண்மையும், அழகும் ஒருங்கே நிறைந்த ஒரு ஆண் மகனைக் காண நேரிட்டால் என்ன நேரும்?" என்று பரிகாசமாக வினவினுர்.

"சரி ஐயா ! 'கண்டதும் காதல்' மின்சாரத்தைப் போலக் கதாநாயகியை ஒரு தாக்குத் தாக்கியது என்று வைத்துக் கொள்வோம். கதையை மேலே சொல்லுங்கள், கேட்கலாம்" என்று பட முதலாளி குறுக்கிட்டு கேலியாகப் பேசினுர்.

"நன்ருக இருக்கிறது ! கண்டவுடனே காதல் கொள்வதெல்லாம் சினிமாக் காட்சிகளில் தான். ஒரு ஆண் பிள்ளை தன்னை ஏற இறங்க விறைத்துப் பார்த்து ஏதோ பேசி உரத்து சிரிப்பதைக் கண்டால் ஒரு பெண்ணுக்கு அவன் மீது கோபமும், அருவருப்பும் தான் ஏற்படும், காதல் ஒண்ணும் ஏற்படாது!" என்று சிறிது சினத்துடன் மொழிந்தாள் காமினி.

"அம்மா சொல்வது ஓரளவு உண்மை தான். பெண்கள் மனதைப் பெண்களால் தான் ஓரளவு அறிய முடியும் என்பது உண்மை, ஆனல், என்னைப் போன்ற கதாசிரியர்கள்தான் அவர்கள் மனதை முழுவதும் அறிவார்கள். காமினிஅம்மாள் அவர்கள் கூறுவதுபோல் பவளவல்லிக்கு ...ஒகோ! சொல்ல மறந்து விட்டேனே ! அது தான் அந்த பாண்டிய நாட்டு மோஹினியின் பெயர். அவளுக்கு முதலில் அவர்களைப் பார்த்ததும் கடுங்கோபம் ஏற்பட்டது. ஆனுல், இங்கே ஒரு உண்மையைக் கவனிக்கவேண்டும். பவளவல்லிக்குக் கோபம் ஏற்பட்டது இருளப்பன் மேல்தான். வீரத்தேவன் மேல் அல்ல. முப்பத்திரண்டு பற்களும் தெரிய, வாயைத் திறந்துகொண்டு உரத்த குரலில் கட, கடவென்று சிரித்த அவனது சிரிப்பு ஒலியைக் கேட்கக்கூட அவளுக்குப் பிடிக்கவில்லை. தென்றலைப் போல குளுமையான இளநகை புரிந்த வண்ணம், அன்பு மிதந்த கண்களால் ஆர்வமாகப் பார்த்து நின்ற வீரத்தேவனின் கம்பீர உருவம், அவள் உள்ளத்தை ஒரே பார்வையிலேயே கொள்ளை கொண்டு போய் விட்டது. ஆனுல், பெண்கள் இருக்கிருர்களே ! அவர்களிடம் இந்த மாதிரி விஷயங்களில் நேரிடையாக ஒப்

"நமஸ்தே! எங்களுடைய சங்கீதக் கச்சேரி பிரமாதமாய் இருக்கும்— 'என் வீடு' தமிழ்ப் படத்தில்" என்று கூறுகிருர்களோ ராம சர்மாவும், கிரிஜாவும்.

புக் கொள்ளும் சுபாவமே கிடையாது" என்று கூறிவிட்டு, கதாசிரியர் காமினியை நோக்கி, "ஏனம்மா, நான் சொல்வது சரிதானே! கருத்து வேற்றுமை இருந்தால் தாராளமாய் வெளியிடலாம்" என்ருர்.

"கதை மேலே தொடரட்டும். நமது கருத்து வேற்றுமையை இன்னொரு படப் பிடிப்பின்போது வைத்துக் கொள்ளலாம்" என்று சிரித்தாள் காமினி.

"சரி, அப்படியே ஆகட்டும்" என்று மேலே பேசலுற்ருர் கதாசிரியர்.

• • •

பவளவல்லி தன் மன வெழுச்சிகளை, வெளியே காட்டாது வீரத்தேவனைக் கவனிக்காதது போல், முகத்தை மறுபுறம் திருப்பிக்கொண்டு, வேண்டுமென்றே அந்தக் கிழவியிடம் பேச்சுக் கொடுப்பதில் ஈடுபட்டாள். இவ்வாருன ஒரு அலட்சியமான மனப்பான்மையை ஆண்மகனல் சகிக்க முடியாது, தானே வலுவில் பேச முற்படுவான் என்பதை அறியாமலே அறிந்திருந்தது அவளது பெண் உள்ளம். வீரத் தேவனுல் வெகு நேரம், தொலைவிலிருந்து அந்த அழகிய காட்சியை ரஸித்துக் கொண்டு நிற்க முடியவில்லை. நண்பனுக்குக் கண்களால் ஜாடை காட்டவே இருவரும் மகிழ மரத் தடியை நோக்கி நடந்தனர்.

அப்பொழுது பவளவல்லியின் அருகிலிருந்த அவள் தோழி வசந்தமாலை, கிழவியிடம் "அதெல்லாம் சரி பாட்டி, என் தோழிக்கு எவ்வளவு குழந்தைகள் என்று முதலில் சொல்" என்று குறும்புத்தனமாகக் கேட்டுவிட்டுச் சிரித்தாள்.

"ஒன்று, இரண்டு, மூன்று" என்று முணு முணுத்த கிழவி, "அடியம்மா! நீ பத்தும் பெற்றுப் பெரு வாழ்வு வாழப் போகிருய்" என்று பவளவல்லியைப் பார்த்து ஆசீர்வதித்தாள்.

"பவளம்! அந்தப் பத்து குழந்தைகளும் உன்னைச் சுற்றிலும் வந்து ஆளுக்

கொருவராக உன் சேலைத் தலைப்பைப் பிடித்து இழுப்பதை நான் பார்க்க வேணுமடீ!'' என்று கூறிவிட்டு தோழி கை கொட்டி நகைத்தாள்.

அதைக் கேட்டு நாணி, முகத்தைச் சிணுக்கிய பவளவல்லி, தன் பின்னல் வந்து நின்ற இரு வாலிபர்களும் அதைக் கேட்டு விட்டு உரத்துச் சிரிப்பதை உணர்ந்து வெட்கத்துடன் கையை உதறிக் கொண்டு எழுந்தாள்.

இதற்குள். இருளப்பன் கிழவி பக்கம் நெருங்கி "ஏ பாட்டி! நீ ஆண்களுக்கும் குறி சொல்வாய் அல்லவா!'' என்று வினவினன்.

"சொல்லாமல் என்ன? ஏனப்பா தம்பி அப்படிக் கேட்கிறாய்!'' என்று வினவிய அந்தக் கிழவி, தன் முன் நின்ற அந்த இரு வாலிபர்களையும் விழுங்கி விடுகிறவள்போல் உற்றுப் பார்த்தாள்.

''அப்படியானல் என் தோழனின் கையைப் பார்த்துக் குறி சொல்.'' என்று பரிகாசமாக உத்தரவிட்ட இருளப்பன், "நண்பா! உனது கரத்தை நீட்டு, இந்த மூதாட்டி என்ன சொல்கிறாள் எனக் கேட்போம்'' என்றான்.

"ஆமாம் பாட்டி! உண்மையை மறைக்காமல் சொல்ல வேண்டும். 'எப்பொழுது திருமணம் ஆகும்! எவ்வளவு குழந்தைகள்' என்ற எல்லாவற்றையும் அந்த அம்மாவுக்குச் சொன்னது போல் ஒன்றும் விடாது எனக்கும் கூறவேண்டும்'' என்று சொல்லிவிட்டுப் பவளவல்லியின் பக்கம் திரும்பிப் புன்னகை செய்தான் வீரத்தேவன். தனக்குள் வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டு அதைக் கவனியாதவள் போல் பவளவல்லி தன் தலையைக் குனிந்து கொண்டாள்.

தன் முன் நீட்டிய கரத்தை வெறித்துப் பார்த்த கிழவி மிகவும் ஏளனமான குரலில் ''உனக்குத் தருமகள் பார்வை மட்டும் கிட்டாதிருந்தால், நீ இப்போது பிச்சை எடுத்துக் கொண்டு திரியவேண்டியவன். இடையே வந்து புயல்போல் வீசிய அதிர்ஷ்டத்தால் நீ இப்படித் துள்ளித் திரிகிறாய்'' என்று கூற சூள் கொட்டினாள்.

அதைக் கேட்ட பவளவல்லி 'களுக்' கென்று சிரித்து விட்டாள். வீரத்தேவன் முகம் அவமானத்தினால் சிவந்தது. ஆத்திரத்துடன் பற்களை நறநறவென்று கடித்தான். முகத்திற்கு அலங்காரமாக வைத்திருந்த அரும்பு மீசை சினத்தினாலே துடித்தது. ''என்ன சொன்னாய் கிழவி? யாரிடம் இந்த எள்ளல் பேச்செல்லாம்? நாவைத் துண்டித்து விடுவேன்'' என்று கோபத்துடன் அதட்டிய அவன் கரத்தை ஓங்கினான். அதைக் கண்ட இருளப்பன் அவனது கரத்தைக் கெட்டியாகப் பிடித்து இடைமறித்து, ''வா, நண்பா! கோபம் வேண்டாம். மட்டுமரியாதை தெரியாத இந்தக் கிழட்டுப் பிணத்துடன் பேச முற்பட்டது நம்போன்றவர்களின் கௌரவத்திற்குத் தகாது. வீர வாள் பிடிக்க வேண்டிய இந்தக் கரத்தினால், இந்தக் கீழ்மகளைத் தொட்டால் கூட பாவம் வந்து சேரும்'' என்று சமாதானப்படுத்தி, இந்தச் சிறு கலகத்தைக் கண்டு அங்கு பலர் வேடிக்கை பார்க்கக் கூடு முன், அப்பால் அழைத்துச் சென்று விட்டான்.

''உண்மையைச் சொன்னால் என் ராசா மகனுக்கு உடம்பு எரியுதே!'' என்று கூறிவிட்டுப் பைத்தியக்காரி போல் அந்தக் கிழவி தலையை மேலும் கீழும் ஆட்டிக் கொண்டு தானே சிரித்துக் கொண்டாள். அவளது பொக்கை வாயினின்றும் எட்டிப் பார்த்த ஒற்றைப் பல்லையும், அவள் வாயைத் திறந்து சிரிக்கும் பொழுது அவள் முகத்திலே தோன்றிய விகாரங்களையும் பார்த்த பவளவல்லி பயத்தினால் உடலைச் சிலிர்த்துக் கொண்டாள். சற்றுத் தொலைவில் நின்றிருந்த பெட்டி வண்டியை நோக்கிச் சென்ற வீரத்தேவனின் களை பொருந்திய முகம் கோபத்தினால் எவ்வளவு விரைவாக மாறியது என்று தனக்குள்ளே எண்ணி விவரிக்க முடியாத ஒருவகை உணர்ச்சிக்கு உட்பட்டு, பெட்டி வண்டி நின்ற திக்கையே ஏக்கத்துடன் பார்த்துக்கொண்டு செயலற்று நின்றுவிட்டாள் பவளவல்லி.

''பவளம்! உன்னை எங்கே யெல்லாம் இந்தக் கூட்டத்தில் தேடுவது? இருட்டப் போகிறது. உன் பாட்டனார் பரிசலுக்கு நேரமாகிறது என்று தவிக்கிறார்'' என்று வயதான பெண்மணி ஒருத்தி கூவி யழைத்தபடி அங்கு வந்தாள். திடுக்கிட்டு உணர்வு பெற்ற பவளவல்லி, ''இதோ வருகிறேன்'' என்று குரல் கொடுத்துவிட்டு, அங்கிருந்து போக கொஞ்சமும் மனமில்லாதவள் போல் பிரிந்து சென்றாள்.

வீரத் தேவனின் உள்ளம் கோபத்தினுல் கொந்தளித்துக் கொண்டிருந்தாலும் பெட்டி வண்டிக்குள் ஏறி உட்காரு முன்னர், அவனை யறியாது அவனது கண்கள் பவளவல்லி இருந்த பக்கம் துழாவின. கரையோரம் நின்ற இரட்டை மாட்டு வண்டியொன்றில் கோழிகள் கூண்டில் அடைவதைப் போன்று ஒன்றன் பின் ஒன்ருகப் பல பெண்கள் ஏறி அடைந்து கொண்டனர். அதற்குள் தானும் கடைசியாக ஏறி அடைந்து கொள்ளு முன், பவளவல்லி கள்ளத்தனமாக வீரத்தேவனின் பெட்டி வண்டியிருந்த திக்கை நோக்கிப் புன்முறுவலித்தாள்.

கொள்ளிடக் கரைக்கு வருமுன் இருந்த உற்சாகமும், துள்ளலும் வீரத்தேவனிடம் அதைவிட்டுத் திரும்பும் பொழுது இருக்கவில்லை. அவன் மௌனமாக வண்டிக்குள் திண்டின் மீது சாய்ந்து கிடந்தான்: அவனது உணர்ச்சிகளை மதிப்பவன் போன்று இருளப்பனும், சாளரத்தின் வழியே இருளில் மூழ்கிக் கிடந்த சாலையை வேடிக்கை பார்த்த வண்ணம் வாளாயிருந்தான்.

இரவு சாப்பாட்டிற்குப் பின்பு அந்தப்புரத்தில் தன் அறைக்குள்ளே சென்று அமர்ந்து கொண்ட மங்களாம்பிகை அம்மையார் நீண்ட நேரம் தமது மகனது வரவை எதிர்பார்த்து ஆவலுடன் காத்திருந்தாள். இரவின் முற்பகுதி கழிந்ததும் மகனைக் காணுததினுல், ஒரு பணிப் பெண்ணை அழைத்து, மகனது வரவு காலந் தாழ்ந்ததற்கு உரிய காரணத்தை அறிந்து வரும்படி ஏவினுள். காரணமற்ற தொருவிதக் கவலையில் அவளது தாயுள்ளம் கலங்கித் தவித்தது.

அந்தப்புரத்தின் வாயிலருகே ஒலித்த பாதக் குறடுகளின் ஓசை மகனின் வரவை அறிவுறுத்தவே, கவலை நீத்த மங்களாம்பிகை ஆவலுடன் அவனை வரவேற்க எழுந்திருந்தாள்.

"என்னம்மா ? கூப்பிட்டு அனுப்பினீர்களா ?" என்று வினவிய மைந்தனது கோபாவேசமான முகத்தைக் கண்டதும் தாயின் உள்ளம் துணுக்குற்றது.

அரண்மனை வெளிவிவகாரங்கள் அனைத்தையும் தாயிடம் நாள் தவருது கூறிவிட்டுத்தான் வீரத்தேவன் உறங்கச் செல்வான். வழக்கமில்லாத வழக்கமாக அவன் நடந்து கொண்ட முறையும், அவனது முகத் தோற்றமும் மங்களாம்பிகையின் கலக்கத்தை அதிகப்படுத்தின.

"வீரத்தேவா ! ஏன் முகம் வாடியிருக்கிறது ! என்ன நடந்தது மகனே ! எனக்குச் சொல்லக் கூடாதா!" என்று அன்புடன் வினவினுள்.

தாயின் வேதனை தோய்ந்தகுரல் வீரத்தேவனின் கோபத்தைச் சிறிது தணிய வைத்தது. "ஒன்றுமில்லை அம்மா. சிறு நிகழ்ச்சிதான் என்ருலும் அதனுல் ஏற்பட்ட ஆத்திரத்தை என்னுல் அடக்கவே முடியவில்லை !" என்று மகன் கூறிவிட்டு வரட்சியாகச் சிரித்தான்.

"சிறு சிறு நிகழ்ச்சிகளுக் கெல்லாம் ஆத்திரப்படுவது ஆண்களுக்கு அழகா ! குழந்தாய்! குணத்திலே நீ அப்படியே உன் தந்தையை ஒத்திருக்கிருய். படபடப்பினுலும், அந்த முன்கோபத்தாலும்தானே

கும்பகோணம் வாணி விலாஸ சபையில் நடனம் ஆடியபோது, அந்த சபைத் தலைவர் டி. சம்பத், குமாரி சாருபாலாவை மிகப் பாராட்டிப் பேசினுர்.

மானேஜர் :—ஏனப்பா. கூட்டத்தையே காணுமே! நீ போஸ்டர்களை எல்லா இடத்திலேயும் ஒட்டினுயா ?

வேலைக்காரன் :—என்னங்க அப்படிக் கேக்கிறீங்களே ? நான் ஒட்டினதைப் படிச்சதும்தான் எல்லாரும் ஒட்டமாய் ஓடினுங்களே ? ''இராசு''

அவர் வீணுக பொல்லாதவர் என்ற பட்டத்தைப் பெற்றுர். உனக்கும் அந்தப் பாழுங் குணங்கள்தான் பொல்லாதவன் என்ற பெயரை வீணே சூட்டுகின்றன. என் கவலையெல்லாம் உனது சுகத்தைப் பற்றித்தான். உன் தந்தைக்கு ஏற்பட்ட அந்த பயங்கர முடிவிற்குப் பிறகு நான் பெரும் கோழையாகிவிட்டேன். சிறிது நேரம் நீ காலந் தாழ்த்தி அரண்மனைக்கு வந்தாலும், வழியில் என்ன நடந்துவிட்டதோ என்று என் உள்ளமும் உடலும் துடித்துப் போகின்றன'' என்று நாத்தடுமாற உணர்ச்சி வசத்தில் கண்களில் நீர் கசியக் கூறினுள்.

''இன்று நடந்த ஒரு சின்னஞ் சிறு சம்பவத்தினுல் என் மனம் மிகவும் புண்பட்டிருக்கிறது. நானும், இருளப்பனும், புதுப்புனலாட்டை வேடிக்கை பார்க்கக் கொள்ளிடக் கரைக்குச் சென்றிருந்தோம். அங்கே ஒரு குறிகாரக் கிழவியிடம் விளையாட்டிற்குக் குறி கேட்கக் கையை நீட்டினேன். அவள் உள்ளங்கையை வெறித்துப் பார்த்து விட்டு, 'உனக்கு அதிர்ஷ்டம் கிட்டியிராவிட்டால் நீ தெருவிலே பிச்சை எடுத்துத் திரிய வேண்டியவன்' என்று வேண்டுமென்றே என்னைத் துச்சமாகப் பேசிவிட்டாள். இருளப்பன் மட்டும் தடுத்திராவிடில் அவள் கழுத்தைப் பிடித்துத் திருகியிருப்பேன். அவ்வளவு கோபம் ஏற்பட்டது. என்னை யார் என்றெண்ணி அவள் அவ்வாறு பேசினுள் ?'' என்று ஆத்திரத்துடன் உரத்த குரலில் கத்திய வீரத்தேவன் திடுக்கிட்டு, ''என்னம்மா! உங்களுக்கு என்ன நேர்ந்தது? ஏன் அப்படிப் பார்க்கிறீர்கள் ?'' என்று அதிசயத்துடன் வினவினுன்.

கீழே விழுந்துவிடா வண்ணம் கட்டிலின் ஓரத்தைக் கைகளால் பிடித்துக் கொண்ட மங்களாம்பிகையின் கரங்கள் நடுங்கின.

''ஒன்றுமில்லை குழந்தாய். நீ கூறியதைக் கேட்டதும் எனக்கும் உன்னைப் போல் அடக்கமாட்டாத கோபம் பொங்கி வருகிறது. குறி சொல்லித் திரியும் ஒரு கிழட்டுப் பிணம் என் மகனை இழிவாகப் பேசுவதா என்ற ஆத்திரத்தில் என் உள்ளம் குமுறுகிறது. நான் அருகில் இருந்தால் அவளது கூந்தலையும், நாவையும் ஒரே இழுப்பில் சிதைத்திருப்பேன்'' என்று கூறி பெருமூச்சு விட்டாள் உக்கிரமாக.

''இன்னெரு சமயம் அந்தக் கிழவியை எங்கேயாவது பார்த்தால்......'' என்று வீரத் தேவன் முடிக்கு முன் மங்களாம்பிகை ''வேண்டாம் மகனே! அவள் இருக்கும் திக்கை நோக்குவதுகூட உன் போன்றவர்களுக்குத் தகாது. ஊர், முன் போல் இல்லை. இப்பொழுது வெகுவாகக் கெட்டுக் கிடக்கிறது. யாரோ உன

க்கு வேண்டாதவர்கள் பில்லி, சூன்யம் முதலியவைகளை ஏவிவிட இந்தக் கிழவியைத் தூண்டி விட்டிருக்கிறார்கள். மந்திரம், தந்திரம் இவைகளின் உதவி பலமாக இல்லாவிடில், உன்னை அவள் அவ்வளவு இழிவாகப் பேசி இருப்பாளா?'' என்று கேட்டாள்.

வீரத்தேவன் அதற்கு பதில் ஏதும் பேசாது இருப்பதைக் கண்ட மங்களாம்பிகை, "குழந்தாய்! நீ எனக்காக ஒரு காரியம் செய்யவேண்டும். செய்வாயா?'' என்று கேட்டாள்.

"என்ன அந்தக் காரியம்?'' என்று வியப்புடன் கேட்டான் மைந்தன்.

"மீண்டும் ஒரு முறை எங்கேயேனும் அந்தக் கிழவியைக் கண்டால் நீ காணாதது போல் இருக்க வேண்டும். அது தான் என்றாள் தாயார்.

"பில்லி சூனியம் இவைகளில் எனக்கு நம்பிக்கையில்லை அம்மா! அந்தக் கிழட்டுப் பிணத்தை மீண்டும் ஒரு நாள் முறை கண்டால் என் கைச் சவுக்கினால், உடல் தோலைப் பிய்த்துவிடத் திட்டமிட்டிருக்கிறேன்'' என்றான் அவன் சினத்துடன்.

"அதுதான் வேண்டாம் என்று நான் உன்னைக் கேட்டுக் கொள்கிறேன். வீரத்தேவா! என் கண்ணே! இவ்வளவு நாட்கள் உனக்குச் சொல்லாத ஒரு ரகசியத்தைச் சொல்கிறேன், கேள். உன் தந்தையின் துர்மரணத்திற்கு சில தினங்களுக்கு முன்பு இவ்வாறு ஒரு கிழவி அவர் ஏறிச்சென்ற வண்டி போன பாதையிலே வலுவிலே வந்து குறுக்கிட்டு வேண்டுமென்று கோபத்தைத் தூண்டினாள். அவளைக் கைச் சவுக்கினால் நையப் புடைத்த பதினைந்தாவது நாள் உன் தந்தை கோர மரணத்திற்குள்ளானார். 'சவுக்கினால் அடிப்பேன்' என்று நீ கூறும் அந்த வார்த்தையைக் கேட்டதுமே என் மேனி எப்படி நடுங்குகிறது பார்! குழந்தாய்! உனக்கு ஏதேனும் ஆபத்து ஏற்பட்டு விட்டால் இந்தப் புவியில் நான் எப்படி உயிருடன் வாழ்வேன்?'' என்று அரற்றிய மங்களாம்பிகை தன் கரங்களால் முகத்தை மூடிக் கொண்டு விம்மி அழுதாள்.

கட்டிலின் அருகே தரைமீது மண்டியிட்டு அமர்ந்த வீரத் தேவன், தாயின் காதருகே குனிந்து, "அம்மா! வருத்தப் படாதீர்கள். உங்கள் மனதிற்குத் துன்பத்தைக் கொடுக்கும் இந்தச் செயலை நான் இன்றுடன் சிந்திக்காது விட்டு விடுகிறேன்!'' என்றான். மங்களாம்பிகையின் விம்மிய குரல் நின்றது. அடுத்த கணம் உயிரற்ற மரம்போல் அவள் கட்டிலின் மீது நினைவிழந்து விழுந்து விட்டாள்.

கதையின் இந்தக் கட்டத்திலே டைரெக்டர், "பையா! இங்கே கொஞ்சம் காப்பி கொண்டு வா'' என்று உத்திரவிட்டார்.

"யாருக்கய்யா! மூர்ச்சித்துவிட்ட மங்களாம்பிகை அம்மாளுக்கா?'' என்று கேட்டு விட்டுச் சிரித்த பட முதலாளி எழுந்திருந்தார். (தொடரும்)

பி. எஸ். கந்தசாமி சா சன்ஸ்

ஸ்தாபிதம் 1904

(டெலிபோன்: 86135)

சேலைகள், வேஷ்டிகள் முதலிய எல்லா விதமான ஜவுளிகளும் நூதன தினுசுகளில், நயமான விலைக்கு எம்மிடம் கிடைக்கும்.

கரூர் விலை! மெத்தைக் கடை!

13, அய்யா முதலி தெரு, சிந்தாதிரிப் பேட்டை, சென்னை—2.

தலைமை ஆபீஸ்: செக்குப் பேட்டை, காஞ்சீவரம்.

இது செய்தி

சென்ற மாதம் 10ம் தேதி, சினிமா தணிக்கை விதிகளில் சர்க்கார் பல திருத்தங்கள் செய்துள்ளனர்.

அனுமதி வழங்கப்படும் விதத்தில் ஒரு படத்தின் நகல் பிரதி ஒன்று 35 மில்லி மீட்டர் அல்லது 16 மில்லி மீட்டர் பில்மில் மத்திய தணிக்கை போர்டு வசம் 'டெப்பாசிட்' செய்யப்பட வேண்டும். அல்லது "ஷூட்டிங் ஸ்கிரிப்ட்" நகல் ஒன்று அவ்வாறு 'டெப்பாசிட்' செய்யப்பட வேண்டுமென்பது ஒரு முக்கியமான புது ஏற்பாடு.

அனுமதி வழங்கப்படும் ரூபத்தில் அல்லாது வேறு ரூபத்தில் காட்டப்படும் படப் பிரதிகளை ஸ்தலத்திலேயே கைப்பற்ற ஜில்லா மாஜிஸ்டிரேட்டுகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

தவிர, இனி ஒரு முறை வழங்கப்படும் அனுமதி ஐந்து வருஷ காலத்திற்குத்தான் அமுலில் இருக்கும்.

படங்களை நுணுக்கமாகப் பரிசீலனை செய்வதற்கும், அனுமதி வழங்கப்பட்டுள்ள ரூபத்திலன்றி வேறு விதமாகப் படங்கள் காட்டப் படாமல் தடுப்பதற்குமே விதிகளில் திருத்தங்கள் செய்யப்படுவதாக சர்க்கார் கூறியுள்ளனர்.

இது வரையில் பிரதேசப் பரிசீலனைக் கமிட்டிகளில் பிரதேச தணிக்கை அதிகாரி தவிர, ஆலோசனை சபையின் இரு அங்கத்தினர்களும் இருந்துவந்துள்ளனர். திருத்தத்தின்படி, பரிசீலனைக் கமிட்டியில் ஆலோசனை சபையின் நான்கு அங்கத்தினர்கள் இருப்பார்கள்.

மறு பரிசீலனைக் கமிட்டிகளில் போர்டுத் தலைவரும், போர்டின் அங்கத்தினரும், பிரதேச அதிகாரியும், ஆலோசனை சபையின் இரு அங்கத்தினர்களும் இதுவரை இருந்தனர். புதிய விதிகளின்படி, மறு பரிசீலனைக் கமிட்டியில் ஆலோசனை சபையின் ஸ்தல வாசிகளான எல்லா அங்கத்தினர்களும், (ஏற்கெனவே பரிசீலனைக் கமிட்டியில் அபிப்பிராயம் தெரிவித்த நான்கு பேர் நீங்கலாக மற்றவர்கள்) இருப்பார்கள். மறு பரிசீலனைக் கமிட்டி நடவடிக்கைகளில் பிரதேச அதிகாரி கலந்து கொள்ள மாட்டார். செய்திப் படங்களையும், டாகுமெண்டரி படங்களையும் துரிதமாக பரிசீலனை செய்ய விசேஷ ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

போர்டுத் தலைவர் தம் யுக்தானுசாரப்படி, படங்களைப் பரிசீலனைக்கு அனுப்ப ஒரு விசேஷ மறு பரிசீலனைக் கமிட்டி அமைக்கவும், ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மூன்று பிரதேச ஆலோசனை சபைகளில் எதிலிருந்தும் பிரஸ்தாபக் கமிட்டிக்கு அங்கத்தினர்கள் பொறுக்கி எடுக்கப்படலாம்.

அதிக எண்ணிக்கையில் தயாராகும் ஹிந்திப் படங்களைத் தணிக்கை செய்ய விசேஷக் கமிட்டிகள் ஏற்படுத்தவும் உத்தேசிக்கப் பட்டுள்ளதாம்.

தணிக்கையின் போது நீக்கப்பட்ட அல்லது காட்டப்படாத சில காட்சிகள் படங்களில் பின்னர் சேர்க்கப்பட்டுள்ள சம்பவங்கள் பல சமீபத்தில் நிகழ்ந்துள்ளமையாலேயே தணிக்கை விதிகளைக் கடுமையாக்க வேண்டி வந்ததாக சர்க்கார் கூறுகின்றனர்

அனுமதிக்கப்பட்ட பின் படங்களில் விஷமத்தனமான மாறுதல்களைச் செய்பவர்களை தண்டிக்கப் பார்லிமெண்டில், மசோதா ஒன்று தாக்கல் ஆகியுள்ளதாக அறிவித்திருக்கிறார்கள். போர்டின் முடிவுகள் இனி கெஜட்டில் பிரசுரிக்கப்படும்.

இது வரையில் ஒரு படத்துக்கு அனுமதி வழங்கப்பட்டு விட்டால், சர்க்கார் அதை ரத்து செய்தாலொழிய எவ்வளவு காலத்துக்கும் அது செல்லும் என்ற ஏற்பாடு இருந்து வருகிறது. இனி அனுமதி ஐந்து வருஷ காலத்துக்கு மட்டுமேதான் செல்லும். பின்னர் மீண்டும் படத்தைப் பரிசீலனைக்கு அனுப்பி மறுபடியும் அனுமதி பெற வேண்டும்.

இப்போது பொருத்தமாக இருக்கும் படங்கள் சில வருஷங்களுக்குப் பின் அவ்வாறு இல்லாமல் போகலாம் என்றும், சரித்திர சம்பவங்கள் அவற்றை ஆட்சேபகரமாக்கலாம் என்றும் அல்லது சமூக அந்தஸ்துகள் மாறுதல் அடையக் கூடும் என்றும், எனவே குறிப்பிட்ட காலக்கிரமப் பரிசீலனை அவசியம் என்றும் சர்க்கார் கருதுகின்றனர். இதுவே அனுமதியின்

ஆயுள் குறைப்புக்குக் காரணம் எனத் தெரிகிறது.

நாடகங்கள்

சென்னை சுதேசி பொருட் காட்சியின் ஆதரவில் பல நாடகங்கள் சென்ற மாதம் திருவல்லிக்கேணி கலா மண்டபத்தில் நடைபெற்றன. அவைகளில் 'நன்றாக இருந்தவை' என்று குறிப்பிடக்கூடியவை சில தான். அப்படிப்பட்ட நாடகங்களில் சென்ற மாதம் 2ம் தேதி அங்கு நடைபெற்ற "நான் யார்?" ஒன்று என்று சொல்லலாம். இந்த நாடகத்தின் கதை, வசனம், பாட்டுகள் எல்லாவற்றையும் எழுதியுள்ள திருவனந்தபுரம் பி. ஏ. கிருஷ்ணனே நாடகத்தையும் தயாரித்திருந்தார். அத்துடன் நாடகத்தில் வஸந்தன் என்ற பிரதம பாத்திரமாகவும் நன்கு நடித்தார். சௌகார், அமீனா, செட்டியார் மூன்று வேஷங்களிலும் தோன்றிய [illegible] தேசிகன் தாம் ஒரு சிறந்த ஹாஸ்ய நடிகர் என்பதை அன்று வெளிப்படுத்தினார். நாடகத்தில் நாட்டியமாடிய டி. எஸ். காந்தா, ஆர். காந்தி இருவரது ஆட்டமும் கவர்ச்சியாக இருந்தது.

சென்ற மாதம் 4ம் தேதி, சென்னை ரஸிக ரஞ்சனி சபா ஹாலில் "கள்வனின் காதலி" நாடகம் நடைபெற்றது. "கல்கி"யின் இந்த நாடகத்தை அன்று டி. கே. எஸ். சகோதரர்கள் நடித்தார்கள்.

அன்னதான சிவன் பஞ்ச [illegible] நிதிக்காக நடைபெற்ற அன்றைய நாடகத்திற்கு ரெவின்யூ மந்திரி கனம் எம். ஏ. மாணிக்கவேலு நாயக்கர் அவர்கள் தலைமை வகித்தார்.

"பெண் மனம்" என்ற நாடகம் சென்னை சௌந்தர்ய மஹாலில், சென்ற மாதம் 15ம் தேதி நடைபெற்றது. நாடகத்தை ஸ்ரீ கந்தன் கலா நிலையத்தினர் நடித்தனர். நாடகத்தில் எம். சந்திரசேகர் வேலாயுதமாகவும், எம். கோபால் ராம் ரவீந்திரனாகவும், ஏ. வசந்தா லக்ஷ்மியாகவும், ஏ. ரதிதேவி சீதாவாகவும் திறம்பட நடித்தார்களாம்.

படஉலகில் பழுத்த அநுபவம் பெற்றவரான டி. என். மீனாக்ஷி அஸோஸியேட்டட் புரொடக்ஷன்ஸின் இரண்டாவது தமிழ்ப் படத்தில் தையல் வேலை செய்கிறார்.

சைதாப்பேட்டை, கட்ட பொம்மன் கலை வளர் நாடக சபையினர் தங்கள் சபைக்கு நிதி திரட்டுவதற்கு "தளபதி" என்ற சரித்திர நாடகத்தை, சென்ற மாதம் 16ம் தேதி, பறங்கிமலை, மதி தியேட்டரில் நடித்தார்கள்.

ரஸிக ரஞ்சனி சபாவின் ஆதரவில், "மனோஹரா" நாடகம் சென்ற மாதம் 10, 11ம் தேதிகளில் நடைபெற்றது. இந்த நாடகத்தில், டி. கே. எஸ். சகோதரர்கள் நடித்தனர்.

சென்னையில் நடைபெற்று வரும் அகில இந்திய சுதேசி பொருள் கண்காட்சியில் நவாப் ராஜமாணிக்கம் கம்பெனியின் நாடகங்கள் நடைபெற்று வருகின்றன. முதலில் "பக்த ராமதாஸ"ும், அதைத் தொடர்ந்து "ஏசுநாதரும்" பிறகு "கிருஷ்ண லீலா"வும் நடைபெற்றன.

ஸ்டேஷனரி ஆபீஸ் இலக்கிய சங்கத்தின் அங்கத்தினர்கள், குடியரசு தினத்தைக் கொண்டாடினர்- அன்று "பூந்தோட்டம்" என்ற நாடகத்தை அவர்கள் நடித்தார்கள்.

ஜா[illegible]ன் நாடக ஸொஸைடியினர், குடியரசு தி[illegible]த்தன்று "பக்த நந்தனர்" நாடகத்தை நடித்தார்கள். அத்துடன் கூட அன்று குமாரி சந்திரிகாவின் நாட்டியமும் நடைபெற்றது.

உபசரிப்பு வைபவங்கள்

நமது உப ஜனாதிபதியான டாக்டர் எஸ். ராதாகருஷ்ணனுக்கு, சென்ற மாதம் 3ம் தேதி சென்னை வுட்லண்ட்ஸ் ஹோட்டலில் ஒரு உபசரிப்பும் தேநீர் விருந்தும் அளிக்கப்பட்டன. இதை எச். டி. ராஜா, என். சஞ்சீவி ரெட்டி ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர். அது சமயம் குமாரி பத்மஜாவின் நடனம் நடந்தது.

கவுன்ஸில் ஆப் ஸ்டேட்ஸின் உதவி சேர்மன் எஸ். வி. கிருஷ்ணமூர்த்தி ராவுக்கு, சென்ற மாதம் 22ம் தேதி வுட்லண்ட்ஸ் ஹோட்டலில் ஒரு தேநீர் விருந்தும், உபசரிப்பும் அளிக்கப்பட்டன. இந்த உபசரிப்பை ஏற்பாடு செய்தவர் இந்திய பார்லிமென்ட் மெம்பரான எச். டி. ராஜா அவர்.

வாழ்த்துகிறோம்

குண்டூசி பத்திரிகையில் வெளிவரும் கண்ணைப் பறிக்கும் ஆர்ட் படங்களைப் பார்க்கும் நேயர்கள் அடிக்கடி பாராட்டி எழுதுவது உண்டு. அந்தப் பாராட்டுதலுக்கு உரியவர் கமர்ஷியல் அச்சகத்தில் அந்த இலாக்காவைச் சேர்ந்த வி. கே. பாஸ்கரன்தான். அந்த சிரஞ்சீவி வி. கே.பாஸ்கரன் சென்ற மாதம் 25ம் தேதி கிருஹஸ்தராகி யிருக்கிறார். சௌ. விஜயலக்ஷ்மியை வாழ்க்கைத் துணைவியாகப் பெற்றார் அவர். சென்னையில், கமர்ஷியல் அச்சகத்தார் அனைவரும் விஜயம் செய்து பரிசுகளை வழங்கினார்கள்.

கே. எஸ். பிக்சர்ஸ் உரிமையாளர் கே. எஸ். சோமசுந்தரம் செட்டியார் தமது சகோதரி சௌ. நாச்சம்மையின் திருமணத்தை சென்ற மாதம் 26ம் தேதி கல்லலில் சிறப்பாக நடத்தினர். மணமகன்—சிரஞ்சீவி சாத்தப்பன்.

ஆலப்புழையைச் சேர்ந்த பிரபல வியாபாரியான எஸ். குமாரசாமி ரெட்டியார் தமது மகன், (ராதாகிருஷ்ணா பிலிம்ஸின் மானேஜிங் டைரெக்டர்)சிரஞ்சீவி ராதாகிருஷ்ணனின் திருமணத்தை வெகு சிறப்பாக, சென்ற மாதம் 26ம் தேதி நடத்தினர். மறு நாள் தமது இல்லத்தில் வெகு சிறப்பாக கிரஹப் பிரவேச விழாவையும் யூ.ஆர்.ஜீவரத்தினம் இன்னிசைக் கச்சேரியுடன் நடத்தினர். ஏராளமான பட உலகப் பிரமுகர்கள் நேரில் வந்து தம்பதிகளை ஆசீர்வதித்து பரிசுகள் வழங்கினர்.

பிரபல நாட்டியக்காரியும், சினிமா நடிகையுமான ஸி. ஆர். ராஜகுமாரியின் வீடு, சென்ற மாதம் 28ம் தேதி அமளிப்பட்டது. பி.டி. ரத்னம்மாள் தனது பேத்தியை (ஸி.ஆர்.ராஜகுமாரியின் குழந்தை) தொட்டிலிட்டு, நாமகரணம் செய்யும் விழாவை அன்று விமரிசையாகக் கொண்டாடினர். பட உலகப் பிரமுகர்கள் பலரும், பத்திரிகாசிரியர்களும் விஜயம் செய்து குழந்தை 'மதனமாலா' என்ற 'டாலி'யை வாழ்த்திச் சென்றனர்.

இரு புது டைரெக்டர்கள்

பிரபல ஆர்ட் டைரெக்டரான ஏ. கே. சேகர் பட டைரெக்டராகவும் மாறிவிட்டார். பெல் பிக்சர்ஸார் அடுத்துத் தயாரிக்கப் போகும் தமிழ்ப் படத்தை ஏ. கே. சேகர் தான் டைரெக்ட் செய்யப் போகிறார். மற்றொரு புது டைரெக்டர் எம். கே. தியாகராஜ பாகவதர். அவர் "புது வாழ்வு" என்ற தம் படத்தைத் தாமே டைரெக்ட் செய்யப் போகிறார் என்று தெரிகிறது.

படமும் - விருந்தும்

சென்ற மாதம் 18ம் தேதி, அவர் இந்தியா பிலிம்ஸாரது "என் வீடு" பத்திரிகைக் காட்சி வாஹினி ஸ்டுடியோவில் நடைபெற்றது. பத்திரிகைக் காட்சி அன்று பத்திரிகைக் காட்சியாகவே இருந்தது ஒரு விசேஷம். காட்சி முடிந்த பிறகு வந்திருந்தோர் அனைவருக்கும் அரியதொரு விருந்து அளித்து, அவரவர்கள் போகவேண்டிய இடங்களுக்கு காரிலும் அனுப்பி வைத்தார் வி. நாகய்யா.

ஹாலிவுட் கிருஷ்ண பகவான்

பிரபல ஹாலிவுட் படத் தயாரிப்பாளரான ஸெஸில் டி. மில்லி, கிருஷ்ண பகவானின் வாழ்க்கையை சினிமாப் படமாக எடுக்க உத்தேசித்து வருவதாகத் தெரிகிறது. இந்தியாவில் மேற்படி படத்தைத் தயாரிப்பதில் டி. மில்லி சிரத்தை கொண்டிருப்பதாகத் தெரிகிறது. இவ் வருஷம் எகிப்துக்குப் போகும்பொழுது ஸெஸில் பி. டி. மில்லி பம்பாய்க்கு வரக்கூடும்.

ஏதோ பெரிய விபத்தினால் மண்டையில் பலத்த காயம், கையும் முறிந்திருக்கிறது. இருந்தபோதிலும், என். டி. ராம ராவ் பரவசத்துடன் காணப்படுவது பத்மினி பக்கத்தில் இருப்பதனால்தான். இவர்களை ஸ்ரீ கிருஷ்ணா பிக்சர்ஸார் துரிதமாகத் தயாரித்துவரும் "மருமகள்" தமிழ்ப் படத்தில் சந்திக்கலாம்.

'பெற்ற தாய்' தமிழ் படத்தில் டி.டி.வஸந்தா

படத்தில் இல்லாத நக்ஷத்திரம்

உங்களுக்குத் தெரியும் நக்ஷத்திரங்கள் படங்களில் நீங்கள் காணும் நடிக, நடிகைகள் தான். உங்களைச் சிரிக்கவோ அழவோ செய்பவர்கள் அவர்கள் தான். ஆயினும் அவர்கள், டைரக்டர் ஆட்டி வைக்கும் பொம்மைகளே. இவர் தான் நக்ஷத்திரங்களுக்கு அவசியமும், அர்த்தமும் கொடுப்பவர், நாம் படத்தில் பார்க்காமலும் பாடாமலும் இருக்கும் இவர் தான் உண்மையான நக்ஷத்திரம்.

தேனீரின் குணங்களும் இதுபோன்றதுதான் அதைப்பற்றி யாரும் பாடாவிட்டாலும் உலகிலுள்ள லக்ஷக்கணக்கான மக்கள், புத்துயிரளிப்பதும் எப்பொழுதும் விரும்பி ஏற்றுக் கொள்ளக்கூடியதுமான தேனீரை அருந்தி ஊக்கமும் இன்பமும் பெறுகின்றனர்.

உங்களுக்கு அதிக இன்பத்தை கொடுக்கிறது

சென்ட்ரல் 'டீ' போர்டாரால் வெளியிடப்பட்டது

CTB—137

காற்றினிலே நக்ஷத்திரப் பேட்டி

"ரசிகர்களுக்கு, ஏற்கெனவே நிம்மி, நஸிம் பானு, நளினி ஜயவந்த், அசோக் குமார், காமினி கௌஸல், கீதா பலி, போன்ற பல நக்ஷத்திரங்களை அறிமுகப் படுத்தி வைத்தோம். இதோ, இன்று பிரபல நக்ஷத்திரமான மீனு குமாரியை அறிமுகப் படுத்துகிறோம். இந்தப் பேட்டியை ஏற்பாடு செய்ய அவரை சந்திப்பதற்கு நான் அலைச்சலாக அலைய வேண்டியிருந்தது. என்றாலும், சந்தித்து விஷயத்தைச் சொன்னதும், அவர் சம்மதித்து விட்டார். இவருக்கு மற்ற நக்ஷத்திரங்களைப் போல் சதா படப்பிடிப்பு வேலை இருந்து கொண்டுதான் இருக்கிறது. நான் அவருக்கு 'போன்' பண்ணின சமயமெல்லாம் அவரது வேலையாள், அவர் இல்லையென்றும், ஷூட்டிங்கிற்குப் போயிருப்பதாகவும் தெரிவித்தான். 'எந்த ஸ்டுடியோவிற்குப் போயிருக்கிறார்?' என்று நான் கேட்டால், 'தெரியாது' என்று சொல்லி டக்கென்று 'போனை' கீழே வைத்து விடுவான், நானும் விடாமல் அவரைத் தேடிப் போனேன். அவர் பம்பாய் டாக்கீஸ் ஸ்டுடியோவிலாவது, அல்லது ரஞ்சித் ஸ்டுடியோவில் "நடைபாதை" ("புட் பாத்") படத்தில் நடிப்பதிலாவது மூழ்கியிருந்தார். கடைசியாக அவர் ஷூட்டிங்கில் இருந்த போதே இடையில் சந்தித்து விஷயத்தைத் தெரிவித்தேன். எப்படியோ அவரை சந்தித்து சம்மதிக்க வைத்து, இதோ அவரை பேட்டிக்கு அழைத்து வந்து விட்டேன்."

பேட்டியாளர் பால்ராஜ் இந்தப் பூர்வ பீடிகையுடன் பேட்டியை ஆரம்பித்தார்.

பால் :—ஹலோ, மீனு! நமஸ்தே!

மீனு :—நமஸ்தே!

பால் :—நீங்கள் எப்போது வந்தீர்கள்?

மீனு :—நான் வந்து மூன்று நிமிஷங்கள் ஆகின்றன. நீங்கள் புகழ்ச்சியாகப் பேசியதையெல்லாம் கேட்டுக் கொண்டுதான் இருந்தேன்.

பால் :—நான் அப்படி ஒன்றும் மிகைப்படுத்திச் சொல்லவில்லையே. உண்மையை நான் உங்களிடம் சொல்லித்தானே ஆகவேண்டும்.

மீனு :—பேசும் கலையில் நீங்கள் மிகத் தேர்ந்தவர். சரி, உங்களுக்கு என்ன தெரியவேண்டும்?

பால் :—ரஸிகர்களே உங்களைப் பற்றி முன்பே ஓரளவு அறிவார்கள்.

மீனு :—நிஜமாகவா? அதெப்படி?

பால் :—உங்கள் படத்தின் மூலம் என்று சொல்லுகிறேன். இருந்தாலும், ரஸிகர்கள், நடிகர் நடிகைகள் வாயிலாக அவர்களது வாழ்க்கையைப் பற்றி நன்றாக அறிய விரும்புகிறார்கள். அதனால்தான் ஆயிரக் கணக்கான ரஸிகர்கள், நீங்கள் சொல்லப் போவதைக் கேட்க ஆவலாய் காத்திருக்கிறார்கள். சரி, நீங்கள் முதன் முதலாக காமிராவுக்கு முன் நின்றது எப்பொழுது?

மீனு :—நான் சிறுமியாக இருந்த சமயம் அது. ஒரு போட்டோகிராப்பர் எங்கள் வீட்டிற்கு வந்து என்னை போட்டோ எடுத்தார். அந்தப் படத்தை சமயம் வரும் போது உங்களுக்குக் காட்டுகிறேன். குதிர் போல் பருத்த, கரிய, பெரிய கண்களைக் கொண்ட ஒரு சிறுமியைத் தான் நீங்கள் அதில் காணமுடியும்!

மீ

பால் :—நான் அந்த காமிராவைச் சொல்லவில்லை! நீங்கள் தவறாகப் புரிந்து கொண்டுவிட்டீர்கள். நான் சினிமா காமிராவைப் பற்றிக் கேட்கிறேன்.

மீனு :—"பர்ஸண்டே வதன்" என்ற படத்தில் நான் நடிக்கும்போது எனக்கு நாலே வயதுதான். ஆனால், அதற்கு முன்னமேயே நான் ஸ்டுடியோ, காமிரா, விளக்குகள் இவைகளைப் பார்த்திருக்கிறேன்.

பால் :—அதெப்படி சாத்தியம்?

மீனு :—என் தாயார் அந்தக் காலத்தில் ஒரு பிரபல நக்ஷத்திரம் என்பது உங்களுக்குத் தெரியாதோ! அப்பொழுதெல்லாம் நான் எப்பொழுதும் அவருடன் கூடவேதான் இருப்பேன்.

பால் :—உங்களுக்கு ஆட்சேபனை

இல்லை யென்றால், உங்கள் தாயாரின் பெயரைத் தெரிவியுங்கள்.

மீனு :—பேஷாகச் சொல்லுகிறேன். என் தாயார் பெயர் இக்பால் பீகம். அவர் அந்தக் காலத்தில் சிறந்த ஒரு நாட்டியக் காரியாகக் கூட இருந்தார்.

பால் :—அவர் நடித்த சில சிறந்த படங்களைக் குறிப்பிடுங்கள்.

மீனு :—எனக்கு எல்லாப் படங்களின் பெயர்களும் ஞாபகமில்லை.

''ருப்பஸந்த்'' என்ற ஒரு படம்தான் ஞாபகமிருக்கிறது. அந்தப் படத்தைச் சேர்ந்த என் தாயாரின் ஒரு படம் இன்னும் ஞாபகார்த்தமாக எங்கள் வீட்டில் இருக்கிறது.

பால் :—உங்கள் தாயார் உயிருடன் இருக்கிறார்களா ?

மீனு :—இல்லை. அவர் வெகு காலத்திற்கு முன்பே காலமாகிவிட்டார்.

பால் :—கேட்க மிகவும் வருத்தமாக இருக்கிறது. நீங்கள் சிறுமியாக இருந்த போது நடித்த படங்கள் எதையும் நான் பார்த்தது கிடையாது. மீனு ! உங்களுடன்கூட வீட்டிலுள்ளவர்கள் யார் யார் ?

மீனு :—என் தந்தை, நாங்கள் 'மது' என்ற செல்லப் பெயரால் அழைக்கும் என் தங்கை மாதுரி.

பால் :—உங்களை சிறு வயதில் என்ன செல்லப் பெயரால் கூப்பிடுவார்கள் ?

மீனு :—சொந்தக்காரர்களும், சிநேகிதர்களும் என்னை 'முன்னா' என்ற செல்லப் பெயரால் அழைப்பார்கள். ஆனால் அதை நான் வெறுக்கவே செய்தேன்.

பால் :—அந்த அழகிய பெயரைக் கண்டு நீங்கள் வெறுப்படைய என்ன இருக்கிறது ! உங்கள் சொந்தப் பெயரே மீனு குமாரிதானா, அல்லது இது உங்கள் சினிமா உலகப் பெயரா ?

மீனு :—என் உண்மைப் பெயர் மஹ் ஜஹூர். என் சினிமா பெயர் தான் மீனு.

பால் :—இந்த சினிமாப் பெயரை உங்களுக்குக் கொடுத்தது யார் ?

மீனு :—''ஏக் ஹிபூல்'' என்ற படத்தில் நான் நடித்து வந்த போது, அதன் டைரெக்டர் விஜய பட் என் உண்மைப் பெயர் பிடிக்காதவராக, மீனு குமாரி என்று பெயர் கொடுத்தார். அது முதல் அந்தப் பெயரே எனக்கு நிலைத்து விட்டது.

பால் :—இதுவரையில் நீங்கள் எவ்வளவு படங்களில் நடித்திருக்கிறீர்கள் ! நீங்கள் நடித்த முதல் படம் என்ன !

மீனு :—நான் வெகு காலம் பால நக்ஷத்திரமாகவே இருந்திருக்கிறேன்.

பால் :—நீங்கள் எதுவரை பால நக்ஷத்திரமாக நடித்து வந்தீர்கள் ! நீங்கள் பால நக்ஷத்திரமாக நடித்த படங்களின் பெயரைக் குறிப்பிடுங்கள்.

மீனு :—''பர்லண்டே வதன்'' தவிர, ''அதோ ஸ்ரீ கஹனி'', ''பூஜா'', ''பச்சன் க கேல்', ''நை ரோஷ்னி,'' ''விஜய்'', ''கஸன்ஜி'', ''கரீப்'' ''பிரதிக்யா'' ஆகிய படங்கள்.

பால் :—சரிதான், நீங்கள் பிறவிக் கதாநாயகிதான். பிறகு என்ன !

மீனு :—1947ம் வருஷம் என் தாயார் இறந்துபோய், குடும்பம் ஒரு கலவர நிலைமையை அடையவே, நான் இரண்டு வருஷங்களுக்கு எந்தப் படத்திலும் நடிக்கவில்லை. அந்த இடைக் காலத்தில் என்

ஜரிகைத் தலைப்பாகை, கோட்டு, அங்கவஸ்திரம் முதலிய அலங்காரத்துடன் ஸி. வி. வி. பந்துலு பெரிய ''மனிதன்''மாதிரி காட்சியளிக்கிறார் ''மனிதன்'' படத்தில்.

தமக்கை குர்ஷித் ஜூனியருக்கு திருமணம் ஆகியது. 'வீர் கடோத்கஜா'' என்ற புராணப் படத்தில் முதன் முறையாக நான் கதாநாயகியாக அறிமுகம் செய்யப்பட்டேன். அதிலேயே எனக்குப் பெயர் கிடைத்தது. ஒரே சமயத்தில் புராணம், சமூகம் இப்படிப் பல படங்களில் நடிக்க சந்தர்ப்பங்கள் கிடைத்தன. அவைகள்: ''மஹ்ரூர்'', ''ஹமரா கர்'', ''ஸ்ரீசா ஹரன்'', ''கணேஷ் மகிமா'' ''லக்ஷ்மி நாராயண்'', ''பதல் விஜய்'' ''மதோஷ்'', ''அலாடின் கசிராக்'' ஆகியவை. இவை தவிர மற்றும் பல படங்கள் தயாரிப்பில் இருக்கின்றன.

பால் :—நீங்கள் சமூகப் படங்களைவிட புராணப் படங்களை விரும்புகிறீர்களா!

மீனா :—நடிகை என்ற முறையில் நான் எந்தக் கதாபாத்திரத்தையும்சிரமப் பட்டு சிரத்தையாக நடிக்கிறேன். ஆனால் சமூகப் படங்களையே நான் விரும்புகிறேன். உங்களுக்குத் தெரியும், புராணப் படங்கள் என்றால் ஒரே மாதிரியான பாத்திரத்தில் நான் நடிக்கவேண்டியிருக்கிறது. சமூகப் படங்கள் என்றால்தான் பல தரப்பட்ட பாத்திரங்களில் நடிக்க எனக்குச் சந்தர்ப்பம் கிட்டுகிறது.

பால் :—ஆகவே, பால கதாபாத்திரத்திலிருந்து கதாநாயகியாக மாறியிருக்கிறீர்கள். அது சரி; உங்கள் கல்வி விஷயம் என்ன? ஒவ்வொருவருக்கும் மிகவும் அவசியமான கல்வியை நீங்கள் எங்கே,எந்த அளவு, கற்றுக் கொண்டீர்கள் ?

மீனா :—நான் முதலில் என் தாயாரிடமும், பிறகு 'பிரைவேட்' உபாத்தியாயர் மூலமும் கல்வி கற்றேன். நான் பள்ளிக்கூடத்திலோ கல்லூரியிலோ படிக்கவேயில்லை.

பால் :—நீங்கள் பாடுவீர்களா ?

மீனா :—சிறு வயதில்—காலஞ் சென்ற, உஸ்தாத் ஜண்டேகானிடம் சங்கீத சிக்ஷை பெரும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. ஆனால் இப்பொழுது படங்களில் நான் பாடுவது இல்லை. என் தகப்பனாரும் ஒரு சங்கீத டைரெக்டராக இருந்தார். இப்பொழுது கூட பட உலகில் அலி பக்ஷ் என்றால் யாருக்கும் அவரைத் தெரியும்.

பால் :-உங்கள் தகப்பனார் என்னென்ன படங்களின் சங்கீத டைரெக்டராக இருந்திருக்கிறார் ?

மீனா :—எல்லாப் படங்களின் பெயர்களும் எனக்கு ஞாபகம் இல்லை. பல படங்களில் ''டஸ்தி'' ஒன்று.

பால் :—நீங்கள் கலைஞர்கள் நிறைந்த குடும்பத்தைச் சேர்ந்தவர் என்று சொல்லுங்கள்! உங்கள் தாய் ஒரு நக்ஷத்திரம்; உங்கள் தந்தை ஒரு சங்கீத டைரெக்டர்; நீங்களும் ஒரு நக்ஷத்திரம். உங்களுக்கு நடனத்திலும் பிரியம் உண்டா?

மீனு :—உண்டு. நான் என் குழந்தைப் பருவத்திலேயே நடனம் கற்க ஆரம்பித்தேன். மணிபுரி, கதகளி நடனங்களை பூராவாகத் தெரிந்து கொள்ள ஆரம்பம் முதலே முயற்சி செய்தேன் இப்பொழு தும்கூட அடிக்கடி அவைகளைக் கற்று வருகிறேன். படத்தில் நாள் ஆடவேண்டி வரும் நடனங்கள் எல்லாம் நாகரீகமான வைகளாகவே இருக்கின்றன. ஆனால். எனக்குப் பிடித்தது சாஸ்திரீய நடனங்கள்தாம்.

பால் :—சில மாதங்களுக்கு முன் உங்களுக்கு மோட்டார் விபத்து ஒன்று ஏற்பட்டதாகக் கேள்விப்பட்டேனே!

மீனு :—ஆமாம். அது, நான் "மகோஷ்" என்ற படத்தில் நடித்துக்கொண்டிருந்த சமயத்தில்தான் ஏற்பட்டது.

பால் :—கார் ஓட்டுவதில் உங்களுக்கு ரொம்பவும் விருப்பம் உண்டு என்று தெரிகிறது.

மீனு :—விபத்து ஏற்பட்ட போது அந்தக் காரில் நான் இருந்தது வாஸ்தவம். ஆனால், நான் காரை ஓட்டிச்செல்லவில்லை. அதற்கு முன், கார் ஓட்டுவது எனக்கு மிகவும் விருப்பமாக இருந்தது. அதன் பிறகு அந்த எண்ணத்தையே விட்டுவிட்டேன். இப்பொழுதெல்லாம் டிரைவர்தான் என் காரை ஓட்டுகிறுன்,

பால் :—உங்களுக்கு ரொம்ப காயம் பட்டிருக்க வேண்டுமே!

மீனு :—ஆம்; என் கைகளைப் பாருங்களேன்.

பால் :—வாஸ்தவமாகவே ரொம்பவும் அடிபட்டிருக்கிறது.

மீனு :—இப்பொழுது எவ்வளவோ தேவலை; கொஞ்ச நாள் முன்னல் பார்த்திருந்தால் திகைத் திருப்பீர்கள்.

பால் :—நல்ல காலம், கடவுள் தான் காப்பாற்றினர்; இல்லாவிட்டால் இன்

இந்த வீரர்களிடம் சாவித்திரி எக்கச்சக்கமாக அகப்பட்டு விழிக்கும் இந்தக் காட்சி ரோஹிணியின "வஞ்சம்" படத்திலுள்ளது.



"அம்மா"வை வெளியிட்ட அஸோஸியேடட் புரொடக்ஷன்ஸின் இரண்டாவதான (பெயரிடப்படாத) தமிழ்ப் படத்தில்—கே. ராமசாமி, சத்யம், கிரிஜா, டி. என். மீனாக்ஷி சம்பந்தப்பட்ட ஒரு காட்சி இது.

னும் மோசமாகி யிருக்குமே. ஏன், ஜாக்கிரதையாக கார் ஓட்டக்கூடாதா?

மீனா :—வருவது வந்தே தீரும். சிறிது காலத்திற்கு முன் கீதா பலிக்கு நேரிட்ட விபத்து உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டுமே. அதிருஷ்டவசமாக அவரது முகம் ஒன்றும் அகோரமாகி விடவில்லை.

பால் :—இன்றும் அவரது நெற்றியில் ஒரு தழும்பு இருக்கிறது. வேறு என்னென்ன பொழுது போக்குகளில் நீங்கள் ஈடுபடுகிறீர்கள்?

மீனா :—காலையில் 'வாக்' போவதை நான் பெரிதும் விரும்புகிறேன். அவ்வப்பொழுது பாட்மின்டன் ஆட்டம் ஆடுவதுண்டு.

பால் :—உங்களுக்கு நேரம் கிடைக்கும் பொழுதுதானே!

மீனா :—ஆம்.

பால் :—'புட் பாத்', பம்பாய் டாக்கீஸ் படம். இது தவிர வேறு என்னென்ன படங்களில் நடித்து வருகிறீர்கள்! அவைகளில் உங்களுடன் பிரதம பாகங்களில் நடிப்பவர்கள் யார்!

மீனா :—"புட் பாத்" படத்தில் திலீப் குமாரும், பம்பாய் டாக்கீஸாரின் "தமாஷா"வில் தேவ் ஆனந்த், அசோக் குமார் இருவரும் நடிக்கின்றனர். இவை தவிர, "அனார்க்கலி"யிலும் நான் நடித்துக் கொண்டிருந்தேன். பாதியில் அதன் வளர்ச்சி தடைப்பட்டிருக்கிறது.

பால் :—ஏன்?

மீனா :—அந்தப் படத் தயாரிப்பாளர்களைக் கேளுங்கள். அது எனக்கு எப்படித் தெரியும்?

பால் :—இப்பொழுது நான் உங்களை ஒரு முக்கியமான கேள்வி கேட்கப்போகிறேன். தவறாக நினைக்கமாட்டீர்களே!

மீனா :—முக்கிய கேள்வியா! முன்னால் கேட்ட கேள்விகளெல்லாம் முக்கியமான கேள்விகள் அல்லவோ! நீங்கள் கேட்பது புரியவில்லையே; சரி அந்த முக்கியமான கேள்வியைக் கேளுங்கள்.

பால் :—நீங்கள்......கேட்கலாமா!

மீனா :—கேளுங்கள்......கேளுங்கள்.

பால் :—நீங்கள் திருமணத்தைப் பற்றி எப்பொழுதாவது நினைத்தது உண்டா!

மீனா :—இதுவரையில் இல்லை; ஆனால் ஒரு நாள் அந்த எண்ணம் ஏற்படும்.

பால் :—நீங்கள் எத்தகைய கணவனை அடைய விரும்புகிறீர்கள்; எப்பொழுது

மணந்து கொள்ளப் போகிறீர்கள் என்பதையெல்லாம் அறிய விரும்புகிறேன்.

மீனு :—எனது வரப்போகும் கணவனைப் பற்றி அறிய நீங்கள் ஏன் இவ்வளவு ஆவலாக இருக்கிறீர்கள்? என் கணவர் எளிய முறையில், நல்ல கல்வித் திறமையுடன், கம்பீரமான புருஷராக இருக்க வேண்டும். இன்னும் என்ன?

பால்:—இதுதான் முக்கியமான கேள்வி. நீங்கள் வருத்தப் படுவீர்களோ என்று இதைக் கேட்கத் தயங்கினேன்.

மீனு :—இதில் வருத்தப்பட என்ன இருக்கிறது!

பால் :—நீங்கள் ஒரு படத் தயாரிப்பாளராகவோ, டைரெக்டராகவோ ஆக விரும்புகிறீர்களா?

மீனு :—என் தாயாரைப்போல நானும் முடிந்தவரை நடிகையாகவே இருந்துவிட விரும்புகிறேன். எனக்குப் பட முதலாளினியாகவோ, டைரெக்டராகவோ மாறும் எண்ணம் கிடையாது.

பால் :—இப்பொழுது உங்களுக்கு வயது என்ன?

மீனு :—பத்தொன்பதாகிறது. ரஸிகர்கள் என் நடிப்பை விரும்புகிற வரை நான் படங்களில் நடிக்க விரும்புகிறேன்.

பால் :—நீங்கள் நடித்த படங்களில் எந்தக் கதா பாத்திரம் உங்களுக்கு மிகவும் பிடித்தமானதாக இருந்தது?

மீனு :—நான் நடித்துள்ள இருபது படங்களில் ஹாஸ்யம், சோகம், புராணம், சமூகம் இப்படிப் பல பாத்திரங்களில் நடித்திருக்கிறேன் என்றாலும், ஒரு குறிப்பிட்ட பாத்திரம்தான் எனக்குப் பிடித்தது என்று கிடையாது. சாதாரணமாக எனக்கு சோகக் கதைகளே அதிகம் பிடிக்கும்.

பால் :—உங்கள் வாழ்க்கையில் சில சோக சம்பவங்கள் நேரிட்டனவே, அதனாலோ?

மீனு :—சோக பாத்திரங்களுக்கே ரஸிகர்களின் அனுதாபம் கிட்டுகிறது என்பதனால்தான்.

பால் :—பல நக்ஷத்திரங்கள் இப்பொழுது ஐரோப்பாவுக்குப் போய்வருகிறார்களே, உங்களுக்கும் வெளி நாடுகளுக்கு போகும் அபிப்பிராயம் உண்டா?

மீனு :—கிடையாது. நான் இந்தியாவையே பூராவாகப் பார்த்தது இல்லையே. அப்படியிருக்க நான் அயல் நாடுகளுக்குப் போவானேன்! சரி, நான் விடை பெற்றுக் கொள்ளட்டுமா?

பால் :—நமஸ்தே!

சென்ற வருஷத்தில் இந்திய சினிமாத் தொழில் நிலைமை

தென்னிந்திய பிலிம் வர்த்தக சபையினர் சென்ற வருஷத்திய சினிமாத் தொழில் நிலைபற்றி ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கின்றனர். அதில் பின் காணப்படும் புள்ளி விபரங்களைக் கொடுத்திருக்கிறார்கள :

இந்தியாவில் சென்ற வருஷத்தில் தான் முதல் தடவையாக சர்வதேச பிலிம் விழா நடைபெற்றது. இருபத்தி மூன்று நாடுகள் இவ் விழாவில் கலந்து கொண்டன. இந்திய சினிமாத் தொழிலைச் சேர்ந்தவர்கள் பிரிட்டன், அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகளுக்குச் சென்று வந்ததும் சென்ற வருஷத்தில்தான்.

தொழிலுக்கு வேண்டிய கச்சா பிலிம், இயந்திர சாதனங்கள் முதலியவைகளை பெறுவதில் சென்ற வருஷம் எவ்விதக் கஷ்டமும் இருக்கவில்லை. ஆகவே, எல்லா ஸ்டுடியோக்களும் நவீன சாதனங்களை அமைத்துக் கொண்டன. இதனால் படம் எடுக்கும் தரம் உயர வழி ஏற்பட்டது.

இவ் வருஷம் இத்தொழில் விஷயமாக அதிகாரிகளின் மனப்பான்மையில் அபிவிருத்தி எதுவுமில்லை. வரி நிவாரணம் பற்றிய பேச்சே இல்லை. பிலிம் விசாரணைக் கமிட்டி ரிப்போர்ட் வெளியாகி இருபத்திரண்டு மாதங்கள் ஆகியும்கூட அதை அமுல் படுத்துவதற்கான முயற்சி எதுவும் செய்யப்பட வில்லை. சினிமாவின் சேவை, அதனால் ஏற்படும் பயன்கள், இவைகளை எடுத்து விளக்குவதில் இத்தொழிலில் உள்ளவர்கள் பின் வாங்கவில்லை. சினிமாப் படங்களின் தரத்தை உயர்த்துவதற்காக ஏற்படுத்தப் பட்ட சர்க்கார் ஸ்தாபனமான மோஷன் பிக்சர்ஸ் அகாடெமி, அது வேலை செய்ய ஆரம்பிக்கு முன்பே ரத்து செய்யப்பட்டது வருந்தத்தக்க விஷயம்.

சென்ற வருஷம், மூலதனம் தாராளமாக வருவது கஷ்டமாகி விட்டது. படப் பிடிப்புச் செலவு ஏகமாக ஏறிவிட்டது. தொழிலிலேயே மந்த நிலை ஏற்பட்டதென்று சொல்லலாம். இதற்குக் காரணம் பல—இடங்களில் பஞ்சம், சில இடங்களில் மின்சார சப்ளை வெட்டு, ஜனங்களிடையே பணம் செலவிடும் சக்தி குறைந்தது. இதனால், சில ஸ்டுடியோக்களிலும் ஆள் குறைப்பு வேலை நடைபெற்றது. இந்த நிலைமையிலும் படஉற்பத்தி குறைந்து விடவில்லை. எழுபத்து மூன்று தென்னிந்தியப் படங்கள் சென்ஸார் செய்யப் பட்டன. இதில் தமிழ் முப்பத்தொன்று, தெலுங்கு இருபத்தி ஐந்து, மலையாளம் பதினொன்று, கன்னடம் ஒன்று, ஹிந்தி ஐந்து. சென்னை நகரத்தில் இப்போது இருபத்திநான்கு ஸ்டுடியோக்கள் இருக்கின்றன. இவ் வருஷம் இருபது நபர்கள் புதிதாகப் படப்பிடிப்பில் இறங்கியவர்கள். சென்ற வருஷம் எடுக்கப்பட்ட படங்களில் புராணப் படங்கள் இரண்டே இரண்டுதான். தாயின் அன்பு, கிராம வாழ்க்கை, குடும்ப விவகாரங்கள் இவைகளையே அடிப்படையாகக் கொண்டு, பெரும்பாலான படங்களின் கதைகள் அமைக்கப் பட்டிருந்தன.

பிலிம் பெடரேஷனின் புதுத் தலைவர்

இந்திய பிலிம் பெடரேஷனுக்கு கல்கத்தாவைச் சேர்ந்த பி. என். சர்க்கார் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சென்னையைச் சேர்ந்த ஏ. ராமய்யாவும், பம்பாய் பில்லிமோரியாவும், உபதலைவர்களாகவும், தேர்ந்தெடுக்கப் பட்டனர். சினிமாத் தொழில் சம்பந்தமான எல்லாப் பிரச்னைகளையும் ஆராய, இந்திய சர்க்கார் தனி இலாக்காவை ஏற்படுத்த வேண்டும் என்று தலைவர் பதவியிலிருந்து விலகும் சந்துலால் ஷா கூறி, சினிமாத் தொழிலுக்குக் கடுமையான வரியிலிருந்து நிவாரணம் அளிக்க வேண்டும் என்றும் கூறினார்.

எக்ஸ்ட்ரா நடிகர்கள் சங்கம்

'எக்ஸ்ட்ரா'க்கள் என்று அழைக்கப்படும் சாதாரண வேஷங்களை ஏற்று நடிக்கும் நடிக நடிகைகள் தங்கள் சங்கம் ஒன்றை கல்கத்தாவில் ஏற்படுத்தியுள்ளனர். இவர்கள் தங்கள் கோரிக்கைகளைத் தொகுத்துள்ளனர். ஸ்டுடியோ சொந்தக்காரர்கள், பிலிம் கம்பெனிகளிடம் இவை சமர்ப்பிக்கப்படுமாம்.

நாடகக் காரி

ராசு

கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தாள் சாரதா. விஸ்வநாதன் அன்றைய தபால்களைப் பார்த்துக் கொண்டிருந்தான். சாரதா எதிரில் போடப்பட்டிருந்த நாற்காலியை இழுத்து போட்டுக் கொண்டு குறிப்புகள் எடுத்துக் கொள்ளுவதற்குத் தயாராய் உட்கார்ந்தாள்.

இரண்டொரு வினாடிகள் ஆயிற்று. படித்துக் கொண்டிருந்த கடிதத்தை முடித்ததும் வைத்துவிட்டு மற்றொரு கடிதத்தை எடுக்கப் போன விஸ்வநாதன் அவளைப் பார்த்து விட்டு புன்முறுவலித்தான். டிராயரில் வைத்திருந்த ஒரு கடிதத்தை எடுத்துப் பிரித்தான். தலையைக் குனிந்தபடி நோட்டுப் புத்தகத்தில் தேதியைப் போட்டுக் கொண்டாள் சாரதா.

"சாரதா, லெட்டர் எழுத உன்னைக் கூப்பிடவில்லை. இந்தக் கடிதத்தைப் படித்துப் பார்" என்று அவளிடம் கொடுத்தான் விஸ்வநாதன்.

அந்தக் கடிதம் காஷ்மீரிலிருந்து வந்திருந்தது. மகாலிங்கம் எழுதி யிருந்தான். கடிதத்தைப் படித்துவிட்டுக் கீழே வைத்தாள் சாரதா.

"மகாலிங்கம் அவசியம் வந்து விடுவதாக எழுதியிருக்கிறான். உன்னைச் சந்தித்தால் அவன் மிகவும் மகிழ்ச்சியடைவான் சாரதா."

"ஆம்!" என்ற பாவனையில் தலையை அசைத்தாள் அவள்.

"அவன் போக்கே அலாதி. அவனைச் சீர்திருத்துவதென்பது யாராலும் முடியாத காரியம். அவன் வரவில்லையே என்ற குறை எனக்கிருந்தது. ஆனால் அந்தக் குறையும் நீங்கிவிட்டது. அவன் வருவதாக இதோ கடிதம் வந்திருக்கிறது" என்றான் விஸ்வநாதன்.

சாரதா ஒன்றுமே பதில் சொல்லவில்லை. அவள் பதில் சொல்லக் கூடிய நிலையிலில்லை. அந்தக் கடிதம் அவளைக் கலக்கி விட்டது.

"நீ போய் வா. நான் பிறகு கூப்பிடுகிறேன்" என்றான் விஸ்வநாதன்.

சாரதா எழுந்து தன் இடத்திற்குவந்து உட்கார்ந்தாள். வேலையில் மனம் செல்லவில்லை.

எப்படியும் ஒருநாள் மஹாலிங்கத்தைச் சந்திக்கவேண்டி யிருக்கும் என்பதை அவள் எதிர்பார்த்திருந்தாள். ஆனால், அந்த சந்தர்ப்பம் இவ்வளவு சீக்கிரமாகவே வந்துவிடுமென்று அவள் நினைக்கவில்லை. அவளுக்கும் விஸ்வநாதனுக்கும் அடுத்த வாரம் திருமணம் ஏற்பாடாகியிருக்கிறது. திருமணம் முடிந்த பிறகு மஹாலிங்கத்தைச் சந்திப்பதை அவள் ஆக்ஷேபிக்கவில்லை. அதற்குமுன்னதாகத்தான் அவனைச் சந்திப்பதற்கு அவள் விரும்பவில்லை.

சென்ற கால நிகழ்ச்சிகள் சாரதாவின் மனக்கோட்டையை முற்றுகையிட்டன. அந்த மனக்கோட்டை தவிடுபொடியாகி விழுவதையும் அவள் மனக் கண்ணால் கண்டாள்.

மஹாலிங்கத்தின் வருகையினால் என்னென்ன விபரீதங்கள் ஏற்படுமோ என்று சாரதா நடுங்கினாள்.

மஹாலிங்கத்தை அவள் முதன் முதலில் சந்தித்தது காசியில் நாடகம் நடத்தி வந்த தனலக்ஷ்மி நாடகக் கம்பெனியில். அப்பொழுது—அதாவது சுமார் பதினெட்டு மாதங்களுக்கு முன்—அவள் அந்த நாடகக் கம்பெனியில் செல்வாக்கு மிகுந்த ஸ்திரீ பார்ட்டாக விளங்கி வந்தாள். அவளது இயற்கை அழகும் பருவச்

செழிப்பும் ரஸிகர்களின் மனதைக் கவர்ந்திருந்தன. அவளது நடிப்பு ரஸிகர்களது உள்ளங்களைக் கொள்ளை கொண்டது. அவள் புள்ளிமான்போல் துள்ளி ஆடும்போது அவர்கள் மெய்ம்மறந்து போவது வழக்கம். அதிகம் சொல்வானேன்; தனலக்ஷ்மி நாடகக் கம்பெனிக்கு தனம் குவிக்கும் லக்ஷ்மியாக விளங்கி வந்தாள் சாரதா. காசியில் எட்டு நாடகங்களுக்கு ஏற்பாடாகி யிருந்தது. அந்த எட்டு நாடகங்களுக்கும் அமோகமான வசூல். நாடகம் பார்த்த ரஸிகர்கள் அனைவரது வாயிலும் சாரதாவைப் பற்றிய பேச்சுதான்.

அன்று நாடகத்தின் கடைசி நாள். நாடகம் முடிந்து சாரதா தன் வேஷத்தைக் கலைத்துக் கொண்டிருந்தாள். "உங்களை யாரோ பார்க்க வேண்டுமாம். வந்திருக்கிறார்" என்று பையன் அறிவித்தான்.

"உள்ளே அழைத்து வா" என்றாள்.

அடுத்த கணம் இருபத்தெட்டு வயதுடைய வாலிபன் ஒருவன் உள்ளே நுழைந்தான்.

"நமஸ்காரம்!" என்று கையைக் கூப்பி அவளை வணங்கினன்.

"நமஸ்காரம்! நீங்கள் யார்? எனக்குத் தெரியவில்லையே."

"என்னைப்பற்றிப் பிறகு சொல்லுகிறேன். நானும் கடந்த எட்டு நாட்களாக விடாமல் தங்கள் நாடகங்களைப் பார்த்து வருகிறேன். இன்றைய நடிப்புதான் எல்லாவற்றிலும் சிகரம் போன்றது. என்ன அனாயாசமாக நடித்தீர்கள்! அப்படியே சொக்கிப் போய்விட்டேன்......"

"சந்தோஷம்! அவ்வளவு நன்றாகவா இருந்ததா, நிஜமாகவா?"

"ஆமாம்! அதைச் சொல்ல வார்த்தைகள் கிடைக்கவில்லை. உங்களை நேருக்கு

நேர் புகழ்வது சரியில்லை. இருந்தாலும் சொல்லாமலிருக்கவும் முடியவில்லை.''

"உங்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்......அதிருக்கட்டும். தாங்கள் யார் என்று சொல்லவில்லையே!''

சட்டைப் பையிலிருந்து ஒரு 'விசிட்டிங் கார்டை' எடுத்து நீட்டினான்.

சாரதா வாங்கிப் பார்த்தாள்.

"ஸ்ரீ மகாலிங்கம், மங்களா மில்ஸ், மதுரை'' என்று அதில் இருந்தது.

அவள் மதுரையில் சிறு வயதில் தங்கியிருக்கிறாள். அப்போது மங்களா மில்லைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறாள். மதுரையில் பிரபல பணக்காரர்களில் அவர்களும் ஒருவர் என்பதை அவள் அறிந்திருக்கிறாள். இன்று அதன் சொந்தக்காரர்களில் ஒருவரைச் சந்தித்து, அவர் வாய்மொழி மூலம் தன் நடிப்பின் பெருமையைக் கேட்டதும் அவள் அளவில்லா மகிழ்ச்சியடைந்தாள்.

"நான் வருகிறேன். விடை கொடுக்கவேண்டும்'' என்று எழுந்தான் மகாலிங்கம்.

"இவ்வளவு சீக்கிரத்தில் புறப்பட்டு விட்டீர்களே! தங்களிடம் நிறையப் பேசவேண்டுமென்றிருக்கிறது. எங்கள் கம்பெனி இன்னும் ஒரு வாரம் இங்கு தங்குவதென்று தீர்மானம் ஆகிவிட்டது. நாளை பகலில் அவசியம் வாருங்கள். சாவதானமாகப் பேசுவோம்'' என்றாள்.

அவளைப் பார்த்து கடைக்கண் பார்வை ஒன்றை வீசிவிட்டு அவன் வெளியே சென்றான். அன்றைய இரவு முழுவதும் அவள் அவனைப் பற்றிய கனவே கண்டாள். சிரித்துச் சிரித்துப் பேசும் அழகிய முகமும், படிய வாரிவிடப்பட்ட கிராப்பும் அவள் கண்களை விட்டு அகலவேயில்லை.

மறுநாள் குறிப்பிட்ட சமயத்தில் மகாலிங்கம் அவளிடம் வந்தான். அவர்கள் எதைப்பற்றித்தான் பேசுகிறோமென் பதில்லாமல் எல்லா விஷயங்களையும் அலசினர். உலக வியவகாரங்கள்கூட அவர்களிடையே அடிபட்டன. இருவரும் ஒன்றாகக் காசி நகரம் முழுவதும் சுற்றிப் பார்த்தனர். அவளிடம் மகாலிங்கம் தன் குடும்பத்தைப் பற்றிக் கதையாகச் சொன்னான்.

"......எங்கள் குடும்பத்தில் ஒரு விதி போலிருக்கிறது. இரண்டு பேரில் ஒருவர்

பேச்சுக் குரல் கேட்டு வெளியே வந்த மஹாலிங்கம் பிரமித்துப் போனான்.

மகோன்னத
வாசனைப் பொக்கிஷம்
தயாரிப்பவர்:
டி.எஸ்.ஆர்.&co
கும்பகோணம்.

சென்னை நகரத்திற்கு டிஸ்ட்ரிபியூட்டர்கள்: சுராஜ் ஏஜன்ஸிஸ், 37, ஜானி ஜான்கான் ரோட், திருவல்லிக்கேணி, மதராஸ். கோயமுத்தூர், பாலக்காடு, நீலகிரிக்கு ஸோல் ஏஜெண்டுகள்: B. பாலபட்டாபி (1933ல் ஸ்தாபிக்கப்பட்டது) - - கோயமுத்தூர்.

வீட்டோடு இருந்துகொண்டு கம்பெனி வியவகாரங்களைக் கவனித்துக்கொள்வர். மற்றவர் ஊர் சுற்றுவர். இதில் ஊர் சுற்றும் ரகத்தைச் சேர்ந்தவன் நான். என் தம்பி விஸ்வநாதன் மதுரை மில்லின் நிர்வாகத்தை ஏற்று நடத்திவருகிறான். என் தகப்பனார் உயிரோடிருக்கையிலேயே அவனுக்கு நல்ல அனுபவமும் தேர்ச்சியும் கொடுத்து விட்டார்..." இன்னும் என்னவெல்லாமோ சொன்னான்.

இரவு திரும்பும்போது வெகு நேரமாகிவிட்டது. வரும்போது இருவரும் ஒரு ரெஸ்டாரெண்டில் சாப்பிட்டுவிட்டனர். கடைசியாக விடை பெற்றுக்கொள்ள எழுந்தான் மகாலிங்கம். இரவு அவ்வளவு நேரத்திற்கு மேல் அவன் போய் என்ன செய்யப் போகிறான்?

"மஹாலிங்கம்! ரொம்பவும் நேரமாகிவிட்டதே. நீங்கள் இன்றிரவு இங்கேயே தங்கிவிடலாமே..."

அவள் இதை உபசாரமாகத்தான் சொன்னாள். ஆனால், அது மஹாலிங்கத்திற்கு விபரீதமாகப் பட்டுவிட்டது. சிரித்துச் சிரித்துப் பேசிய அவன் முகத்தில் வெறுப்புப் படர்ந்தது. கோபத்தினால் கண்கள் கோவைப்பழம்போல் சிவந்தன.

"மஹாலிங்கம்!......"

அவன் நிலை அவளுக்குப் பயத்தைக் கொடுத்தது.

"சீ! இவ்வளவுதானா உன் சாகஸம்! நாம் சந்தித்து முழுக்க ஒரு நாள் ஆகவில்லை. அதற்குள் என்னை இரவு தங்கச் சொல்லுகிறாய்! நாடகத்தில் சேர்ந்த பெண்களே இப்படித்தான்! மானம், வெட்கமில்லாத காமப் பேய்கள்! உன் முகத்தில் விழிப்பதுகூட அவமானம்!..."

சடாரென்று திரும்பி வெளியேறினான் மஹாலிங்கம்.

"மஹாலிங்கம்......மஹாலிங்கம்....."

என்று கத்திக்கொண்டு வாசலுக்கு ஓடினாள்; அதற்குள் அவன் போய்விட்டான்.

மஹாலிங்கம் எரிமலைபோல் கக்கிவிட்டுச் சென்ற சொற்கள் சாரதாவின் அபலை உள்ளத்தை அக்னிபோல் பொசுக்க ஆரம்பித்தன.

அவள் ஒரு நாடகக்காரிதான்; தன் தாயார் யார் என்றே அறியாதவள். அவளும் தனலக்ஷ்மி நாடகக் கம்பெனியிலேயே ஒரு நடிகையாக இருந்தாளாம்.

சாரதாவைப் பெற்றுவிட்டு சில மணி நேரத்திற்குள் அவள் செத்துவிட்டாளாம். பிறகு கம்பெனி தாதிதான் இவளை வளர்த்து ஆளாக்கினளாம். தன் குலத்தைப்பற்றி பிரமாதமாய் சொல்லிக் கொள்ள முடியாதுதான்; இருந்தாலும் அவள் மஹாலிங்கம் கூறியதுபோல் சாக ஸக்காரியல்ல; மானம் வெட்கமற்ற காமப் பேயல்ல. அன்று வரை அவள் நடத்தை பிசகாத நல்முத்தாய் விளங்கினள். அதனலேயே மஹாலிங்கத்தின் வார்த்தைகள் அவளது தூய உள்ளத்தைக் கொதிக்கச் செய்தன. எப்படியாவது அவனைத் தேடிப் பிடித்துத்தான் தூய்மையானவள் என்பதை நிரூபிக்க வேண்டும் என்று அவள் தீர்மானித்தாள்.

அவள் காசியிலிருக்கும் வரையில் அவனைக் கண்டு பிடிப்பதற்காக எத்தனையோ முயற்சிகள் செய்தாள். ஆனல் ஒன்றும் பலன் தரவில்லை.

காசியிலிருந்து கம்பெனி புறப்பட்டது. மேற்சொன்ன சம்பவத்திற்குப் பிறகு சாரதாவின் மன அமைதி போய் விட்டது. முன்போல் அவளால் உத்ஸாகமாக நாடகங்களில் நடிக்க முடியவில்லை. அடிக்கடி நடிப்பில் தவறுதல்கள் நிகழ ஆரம்பித்தன. அவளால் நாடகக் கம்பெனியில் நிம்மதியாக வாழ்க்கை நடத்த முடியவில்லை. அவளுடைய அமைதியின்மை கம்பெனி அதிகாரிகளையும் பாதித்தது. அதனல் ஒரு வருஷ காலத்திற்குள் அவள் கம்பெனியிலிருந்து விலக வேண்டியதாயிற்று.

கம்பெனியில் வேலையாயிருந்த போது தன் ஓய்வு நேரங்களில் அவள் படிப்பில் கவனம் செலுத்தி வந்தாள். அவள் கொஞ்சம் ஆங்கிலம் கற்றிருந்ததோடு, பொழுது போக்காக 'டைப்' அடிக்கவும் பழகியிருந்தாள்.

கம்பெனியை விட்ட பின் வாழ்க்கை நடத்துவது அவளுக்கு ஒரு புதிராக இருந்தது. மஹாலிங்கம் சொன்ன ஒரு விஷயம் அவள் ஞாபகத்திற்கு வந்தது. அதாவது, அவனது தம்பி விஸ்வநாதன் மங்களா மில்லின் முதலாளியாக இருக்கிறன் என்பதே. எப்படியாவது மதுரைக்குப் போய் விட்டால் மஹாலிங்கத்தை நிச்சயம் கண்டு பிடித்துவிட முடியும் என்ற நம்பிக்கையுடன் அவள் மதுரையை அடைந்தாள். தம்பி விஸ்வனதனையும் சந்தித்தாள். மஹாலிங்கம் மதுரைக்கு வருவதேயில்லை என்பதையும் அவனிடமிருந்து தெரிந்து கொண்டாள்.

மேற்கொண்டு என்ன செய்வதென்று சாரதாவுக்குத் தோன்றவில்லை. விஸ்வநாதனிடம் தன் நிர்க்கதியான நிலைமையைக் கூறி உதவும்படி கெஞ்சினள். அவன் அவள் மீது பரிதாபங்கொண்டு, தன் கம்பெனியில் அவளை 'லேடி டைப்பிஸ்ட்'டாக நியமித்தான்.

அரைகுறையாயிருந்த தன் ஆங்கிலப் படிப்பை சாரதா துரிதமாய் விருத்தி செய்துகொண்டாள். ஆறே மாதத்திற்குள் அவள் விஸ்வநாதனின் நன்மதிப்பைப்பெற்று, அவனது 'பிஸினஸ் ஸெகரட்டரி'யாக ஆகிவிட்டாள். அது மட்டுமா! அவள் விஸ்வநாதனின் மனைவியே ஆகப் போகிறளே! அடுத்த வாரம் திருமணம்! நேற்றிலிருந்து அவன் வீட்டிலேயே தங்கியிருக்கிறள். இச் சமயத்தில் மஹாலிங்கம் வந்து சேர்ந்தால்.........!

பையன் வந்து 'முதலாளி கூப்பிடுகிறர்' என அழைத்தபோதுதான் தன் நினைவுக்கு வந்தாள். முடிந்த வரையில் தன் முகபாவங்களை மாற்றிக் கொண்டு சாரதா விஸ்வநாதனின் அறைக்குச் சென்றள். பிறகு இருவரும் மோட்டாரில் வீட்டிற்குப் புறப்பட்டனர்.

சாரதாவின் முகபாவங்களைக் கண்ட விஸ்வநாதன் மிகுந்த அக்கரையுடன், "என்ன விசேஷம்!" என்று கேட்டான். சாரதா, "ஒன்றுமில்லை" என்று கூறி, பலவந்தமாக புன்னகையை வரவழைத்துக் கொண்டாள். வாய்தான் அப்படிக் கூறியது; மனதிலோ மஹாலிங்கத்தின் வரவைப் பற்றிய கவலை குடிகொண்டிருந்தது.

ஏதாவது சாக்கிட்டு மஹாலிங்கம் வரும்போது இங்கில்லாமல் வெளியூருக்குப் போய்விட வேண்டும். அவன் திரும்பிச் சென்ற பிறகு வந்தால் போதும். விஸ்வநாதனுக்கு ஏதாவது சாக்குகள் சொல்லி விடலாம். மீண்டும் திருமணத்துக்கு அவனல் வரமுடியாது. ஒரு வேளை மஹாலிங்கம் ஊரிலேயே தங்கிவிட்டால்!

மஹாலிங்கம் வருவதற்குள் இதற்கு எப்படியாவது ஆர அமர ஒரு வழி காண வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டாள். ஆனல் அவளுக்கு அந்தக் கஷ்டமெல்லாம் ஏற்படவில்லை. பங்களா முன் மோட்டார் நின்றதும், மஹாலிங்கமே விஸ்வநாதனைவரவேற்றன். சாரதா

வுக்கு அவனைப் பார்த்ததும் தூக்கி வாரிப் போட்டது.

"விசு! என் லெட்டர் கிடைத்தா!... யாரு?...ம்...சாரதாவா?..."

"மாலி! இன்றைக்குத் தான் வந்தது. அதற்குள் நீயே வந்து விட்டாயே!

"ஆமாம்! நான் இன்னும் நாலு நாட்கள் சென்ற பிறகு கிளம்பலாம் என்று தான் நினைத்திருந்தேன். தற்செயலாய், என் நண்பர் ஒருவர் நேற்று மாலை ஏரோப்ளேனில் கிளம்பிச் செல்வதாகத் தெரிவித்தார். அவருடன் நானும் கிளம்பி வந்து விட்டேன்."

விஸ்வநாதன் அன்புடன் மஹாலிங்கத்தின் கைகளைப் பிடித்து அழைத்துக் கொண்டு மாடிக்கு ஓடினன்.

இரவை யோசனையிலேயே கழித்தாள் சாரதா. வந்தவுடனேயே சண்டை எதற்கென்று வாயை மூடிக் கொண்டிருப்பான் மஹாலிங்கம். மறுநாள் எப்படியும் விஷயத்தை வெளிப் படுத்தாமல் இருக்க மாட்டான். விஸ்வநாதனிடம் தன் நாடகசபை வாழ்க்கையைப்பற்றி அவள் பிரஸ்தாபிக்கவே யில்லை. இவ்வளவு ஏற்பாடுகள் முடிந்த பிறகு விஸ்வநாதன் அதைப்பற்றி அறிந்தால் என்ன நினைப்பான்!

தாயாருக்கு மஹாலிங்கத்தின் வருகை பிடிக்கவில்லை. இரவு அவள் தன் இளைய மகனிடம் சண்டை பிடித்துக் கொண்டிருந்ததை யதேச்சையாக விஸ்வநாதனின் அறைப் பக்கம் சென்றபோது சாரதா கேட்க நேர்ந்தது.

"ஏண்டா விசு, அவன் எதற்காக வந்திருக்கிறன் தெரியுமா? நீ கடிதம் போட்டதற்காகவோ, உன் கல்யாணத்திற்காகவோ வரவில்லை. உன் கடிதத்தைச் சாக்காக வைத்துக்கொண்டு வந்திருக்கிறன். கையில் தம்பிடி கிடையாது. அந்தச்சினிமாக்காரி அவனை ஏமாற்றி விரட்டிவிட்டு ஓடிவிட்டாள். என் வார்த்தையைக்கேட்டானு? முடியாதென்று சண்டையிட்டுக் கொண்டு போனனே!......"

"இதோ பாரம்மா! நீ வீணுக அவன் மீது வெறுப்புக்கொள்கிருய். அந்தச் சினிமாக்காரி ஒரு விபசாரி. அவனைத் தன் வலையில் சிக்கவைத்துப் பணம் பறித்து விட்டாள். அவன் வேறு ஒருத்தியை மணந்திருக்கலாம்; கேட்க வில்லை. போனது போகட்டுமென்று விடு. இப்போதோ அவனுக்கும் அவளுக்கும் தொடர்பே கிடையாது. மீண்டும் அவனிடம் சண்டையிட்டுக் கொள்ளாதே!"

சாரதாவுக்கு இப்போது புரிந்து விட்டது—காசியில் அவளிடம் திடீரென்று மஹாலிங்கம் வெறுப்புக் கொண்டதற்குக் காரணம்.

மறுநாள் சாரதா எதிர்பார்த்த படியே நடந்தது. ஞாயிற்றுக் கிழமையாதலால் சாரதா ஆபீசுக்குப் போகவில்லை. ஏதோ சில காரியங்களுக்காக அம்மாவும் விசுவும் டவுனுக்குப் போயிருந்தனர். வீட்டில் மஹாலிங்கம் மட்டும்தான் இருந்தான். சாரதா தன் அறையில் கவலையில் ஆழ்ந்திருந்தாள். அறைப் பக்கம் நிழல் தட்டுவது போலிருக்கவே திரும்பிப் பார்த்தாள். வாசற்படியில் நின்று கொண்டிருந்தான் மஹாலிங்கம்.

மஹாலிங்கம் எடுத்த எடுப்பிலேயே அவளைத் தாக்க ஆரம்பித்தான்:

"சாரதா! எப்போதிலிருந்து நாடக மேடையை விட்டுவிட்டு என் தம்பியைத் தலை தடவ வந்து சேர்ந்தாய்! உன் போன்ற விபசாரிகளுக்கு இந்த வீட்டில் இடமில்லை என்பது தெரியாதா?"

"போதும், நிறுத்து! நான் விபசாரியல்ல. இனிமேல் ஒரு தடவைகூட என்னைப் பற்றி அம்மாதிரி நினைக்காதே! உன் காதலி அந்தச் சினிமாக்காரி—விபசாரியா யிருந்தால் நாடகக்காரிகள் அத்தனை பேருமே விபசாரிகளா?"

மஹாலிங்கம் சிரித்தான். அவன் சிரிப்பில் நெருப்புத் தெறித்தது.

"ஓ! அதையும் தெரிந்து வைத்துக் கொண்டிருக்கிருயா...மாயமாலக் கள்ளி! என் தம்பி உன் அழகில் மயங்கி விட்டான். அவன் உன் பூர்வோத்திரத்தை அறிய முயற்சிக்க வில்லை. ஒன்று மில்லாத—ஆதரவில்லாத நாடகக்காரி ஒரு கோடீசுவரனை மணப்பதா! உன் திட்டம் ஒருக்காலும் நிறைவேருது. இரு, இரு; அவன் வந்தவுடன் சொல்லி உன் மானத்தை வாங்குகிறேன்..."

"மஹாலிங்கம்! உனக்கு நான் என்ன தீங்கு செய்தேன்? எதற்காக என் மனதை நீ புண் படுத்துகிருய்? உனக்குக் கொஞ்சங்கூட கருணையில்லையா!"

சாரதாவின் கண்களில் நீர் தாரையெடுத்துக் கொட்டியது.

"நீலி! போதும், உன் நாடக நடிப்பையெல்லாம் இங்கே அவிழ்த்து விடாதே!

எங்கள் குடும்ப நிலைக்கும், உன் நிலைக்கும் திருமணம் கூடவே கூடாது.''

சாரதா ஒரு கணம் யோசித்தாள். விஸ்வநாதன் வந்தால் நிச்சயம் மஹாலிங்கம் சொல்லிவிடுவான். அப்புறம் அவமானப் படுவதைவிட அவன் வருவதற்குள் போய்விடுவதே மேல் என்று தோன்றியது. ''மஹாலிங்கம்! உனக்கு எந்தச் சிரமமும் வைக்கவில்லை. நான் இதோ போய்விடுகிறேன்.'' என்று கூறிவிட்டு, கைப்பெட்டியை எடுத்துக் கொண்டு அறையைவிட்டு வெளியே வந்தாள்.

வாசற்படியில் இறங்கும்போது விஸ்வநாதனும் அவனது தாயாரும் வந்து விட்டனர். "எங்கே சாரதா போகிறாய்?'' என்று கேட்டான் விஸ்வநாதன்.

''ஏன், எதற்காக அழுதிருக்கிறாய்?'' என்று கேட்டாள் அவனுடைய தாய்.

''என்னை மன்னித்து விடுங்கள். நான் உங்களிடம் ஒன்றை மறைத்துவிட்டேன். என் தாய் ஒரு நாடகக்காரி. நானும் இங்கு வரும்வரை நாடகங்களில் தான் நடித்து வந்தேன். இந்த வீட்டில் நாடகக்காரிக்கு இடமில்லை என்பதை அறியேன். நான் போய் வருகிறேன்.''

''சாரதா! இதென்ன! நீ நாடகக்காரியின் மகளாயிருந்தால் எனக்கென்ன? உன்னை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. அவ்வளவுதானே வேண்டும்'' என்று கூறினான் விஸ்வநாதன்.

''பைத்தியம் மாதிரி கிளம்பிவிட்டாயே! நாங்கள் வராவிட்டால் நீ போயே யிருப்பாய்!...'' என்றாள் தாய்.

"வேண்டாம், அம்மா! இப்பேர்ப்பட்ட பாக்கியத்திற்கு நான் தகுதியற்றவள். என்னைப் போக விடுங்கள். உங்கள் குடும்பத்திற்கு இழுக்கு ஏற்படுத்த எனக்கு இஷ்டமல்லை.''

''இதோ பார், சாரதா! எப்போது நீ என்னிடம் வந்து சேர்ந்தாயோ, அப்போதே நீ பாக்கியம் செய்தவளாகி விட்டாய். மறுபேச்சு வேண்டாம், பேசாமல் திரும்பு'' என்று உத்தரவிட்டான் விஸ்வநாதன். அவள் கையைப் பிடித்து உள்ளே அழைத்துச் சென்றாள் தாய்.

வாசலில் பேச்சுக்குரல் கேட்டு வெளியேவந்த மஹாலிங்கம் இவர்கள் சம்பாஷணையைக் கேட்டதும் பிரமித்து விட்டான். சாரதா தன்னை முந்திக் கொண்டு விடுவாள் என்று அவன் துளியும் எதிர்பார்க்கவேயில்லை.

எதேச்சையாகத் திரும்பிய சாரதாவின் கண்கள் மஹாலிங்கத்தின் கண்களைச் சந்தித்தன. தலையைக் குனிந்து கொண்டான் மஹாலிங்கம்.

வாழ்த்துகிறோம்

ஸென்ட்ரல் டீ போர்டு டிப்டி டைரெக்டரான ஸ்ரீ. கே. வெங்கடாச்சாரி அவர்களின் புத்திரர் சிரஞ்சீவி வி. எஸ். ராகவனுக்கும், ரிடயர்டு விவசாய உதவி டைரெக்டர் ஸ்ரீ. கே. ராகவாச்சாரி அவர்களின் புத்திரி சௌ. வஸந்தாவுக்கும், (தஞ்சை) பாபநாசத்தில் சென்ற மாதம் 26ம் தேதியன்று சிறப்பாக திருமணம் நடந்தேறியது. இதையொட்டி, பிள்ளை வீட்டினர் அடையாறில் சென்ற மாதம் 30ந் தேதியன்று நடத்திய வரவேற்பு—எம். எஸ். கச்சேரியுடன் கோலாகலமாய் இருந்தது. சர்க்கார் அதிகாரிகளும், பத்திரிகாசிரியர்களும், நண்பர்களும் ஏராளமாய் விஜயம் செய்து மணமக்களை ஆசிர்வதித்துச் சென்றனர்.

• • •

கும்பகோணத்தில் பிரபலமான 'ஸ்ரீ' வெங்கடா லாட்ஜ் முதலாளி வி. எம். சுப்பிரமண்ய அய்யர், தமது கனிஷ்ட சகோதரன் சிரஞ்சீவி ராமமூர்த்தி, தமது ஜேஷ்ட குமாரன் சிரஞ்சீவி முத்துசாமி, இருவருக்கும் இம் மாதம் 6ம் தேதியன்று உபநயனம் செய்து வைத்தார்.

கிரஹப்பிரவேசம்

சமீபத்தில், முன்னணி நக்ஷத்திரமாகியிருக்கும் எம். பண்டரி பாய், சென்னை தியாகராயநகரில் ஒரு பங்களாவின் சொந்தக்காரி ஆயிருக்கிறார். அதன் கிரஹப்பிரவேச விழாவை அவர் சென்ற மாதம் 18ம் தேதி நடத்தினர்.

எழுத்தாளர் மகாநாடு

சென்னை, தமிழ் எழுத்தாளர்கள் மகாநாடு சென்ற மாதம் 18ம் தேதி நடைபெற்றது. காலையில் மகாநாட்டு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. மாலையில் மூன்று விஷயங்கள் குறித்து பிரசங்கமும் விவாதமும் நடைபெற்றன.

சென்ற மாதம் 11ம் தேதி, திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தசாரதி ஸ்வாமி ஸபாவின் ஆதரவில் டி. கே. பட்டம்மாளின் இன்னிசைக் கச்சேரி நடைபெற்றது. இதே சபையின் ஆதரவில் எஸ். வி. எஸ். நாராயணனின் கச்சேரி சென்ற மாதம் 18ம் தேதி நடைபெற்றது.

பிரம்ம லோகம்

பெயரிடப்படாத அஸோஸியேடட் புரொடக்ஷன் ஸாரது இரண்டாவது தயாரிப்பு வாஹினி ஸ்டுடியோவில் வெகு மும்மரமாகத் தயாராகி வருகிறது. அவர்களது இப் படம் ஒரே சமயத்தில் தமிழ்-மலையாளம் இரு பாஷைகளில் படமாகி வருகிறது. தமிழ்ப் படத்தின் வசனங்களை என்.கே. பத்மநாபனும், பாட்டுகளை "குயிலனு"ம் எழுதியுள்ளனர். பி. எஸ். சரோஜா, கிரிஜா, பங்கஜவல்லி, பொன்னம்மா, டி. என். மீனாக்ஷி, கே. எஸ். அங்கமுத்து, ஆர். கணேஷ், டி. எஸ். பாலய்யா, ஸத்யநேசன், பி. ஆர். பந்துலு, கே. ராமசாமி, இப்படியாகப் பலர் நடிக்கும் இந்த இரு பாஷைப் படத்தை ஜி. ஆர். ராவ் டைரெக்ட் செய்து வருகிறார்.

அவன்

பம்பாய் ஆர். கே. பில்ம்ஸார் தாங்கள் ஹிந்தியில் தயாரித்து வரும் "ஆ" என்ற ஹிந்திப் படத்தை "அவன்" என்ற பெயரில் தமிழில் தயாரித்து அநேகமாக முடித்து விட்டார்கள். ராஜ் கபூர் – நர்க்கிஸ் நடிக்கும் படம் இது. மற்றும் விஜயலக்ஷ்மி, பிராண் ஆகியோரும் நடித்துள்ளனர். இப்படத்தின் வசனங்களை எஸ். டி. சுந்தரமும், பாட்டுகளை "கம்பதாஸ"னும் எழுதியுள்ளனர். ஆல் இந்தியா பில்ம் கார்ப்பரேஷன் வெளியீடாக இப் படம் ஏப்ரல் மாதத்தில் தமிழ் நாடெங்கும் திரையிடப்படுமாம்.

நாம்

பிப்ரவரி மாதத்தில் வெளிவரும் படங்களில் ஒன்றாக இருக்கும், ஜுபிடர்-மேகலாவின் கூட்டுத் தயாரிப்பான "நாம்" படம். இதன் இறுதி வேலைகள் இப்பொழுது நெப்டியூன் ஸ்டுடியோவில் ஏ. காசிலிங்கம் டைரெக்ஷனில் முற்றுப் பெற்று வருகின்றன. லட்சியத்துக்காகப் போராடி தியாகத் தழும்புகளேற்ற ஒரு வீர உத்தமனின் உணர்ச்சி மிக்க கதையாம் இது. கதை–வசனம் மு. கருணாநிதியால் எழுதப் பட்டுள்ளன. எம். ஜி. ராமச்சந்திரன் ஒவ்வொரு கட்டத்திலும் உணர்ச்சியுடன் நடித்திருப்பதாகத் தெரிகிறது. பி. கே. சரஸ்வதி, வி. என். ஜானகி, எம். என். நம்பியார், எம். எஸ். எஸ். பாக்கியம், எஸ். ஆர். ஜானகி, எம். ஜி. சக்ரபாணி ஆகப் பலர் நடித்து வருகின்றனர் இப் படத்தில்.

செல்லப் பிள்ளை

இம் மாதம் திரைக்கு வரக்கூடிய படங்களில் ஏவி. எம். தயாரிப்பான "செல்லப்பிள்ளை" ஒன்றாக இருக்கும். இப்படம் பூர்த்தியாக ஒன்றிரண்டு ஒட்டு வேலைகள் மட்டுமே பாக்கியாக நிற்கின்றன. பிரசவ அறை; வெளியே மன நிம்மதியின்றி நிற்கிறார் ஒருவர். உள்ளே யிருந்து அஞ்சலைக்குப் பிறந்த குழந்தையின் குரல் கேட்டதும், ஓடி சுவாமி படத்திற்கு முன் நமஸ்கரிக்கிறார். இந்தக் கட்டம் சமீபத்தில் இப் படத்திற்கெனப் படமாகியது. நிம்மதியற்ற மனிதனைத் தவித்தவர் பி. ஆர். பந்துலு. பண்டரி பாய் தான் அஞ்சலையாக நடித்தவர். இப் படத்தில் கண்ணம்பா, கே. ஆர். ராமசாமி, சாவித்திரி, சஹஸ்ரநாமம் ஆகியோர் முக்கிய பாத்திரங்களில் நடித்து வருகின்றனர். மிகவும் உருக்கமான இக்கதை தெலுங்கிலும் "வதீனா" என்ற பெயரில் படமாகியிருக்கிறது.

பொன் வயல்

செம்பவளவல்லியைத் தேடி அவள் வீட்டுக்கு வருகிறான் அவள் அத்தான் செங்கோடன். செம்பவளவல்லியின் தந்தை "என் மகளை கட்டிக்கிறயா; இல்லாட்டி வேறு யாருக்கேனும் கட்டிக் கொடுத்து விடட்டுமா?" என்று கண்டிப்பாகக் கேட்கிறான். இந்தக் காட்சியும், இதை அடுத்து, சினிமா நடிகை பங்கஜத்தின் வீட்டின் ஒரு கட்டமும் தயாராயின. செங்கோடனிடமிருந்து ரகஸியத்தைத் தெரிந்து கொள்ள பங்கஜத்தின் வீட்டுக்கு அவனை ரௌடி பங்காரு அழைத்து வருகிறான். இந்தக் காட்சிகளில் செங்கோடனாக—அசல் பட்டிக்காட்டுப் பிச்சுவாக டி. ஆர். ராமச்சந்திரனும், செம்பவளவல்லியாக அஞ்சலியும், அவள் தகப்பனாக வி. கே. ராமசாமியும், சினிமா நடிகை பங்கஜமாக மைனாவதியும், ரௌடி பங்காருவாக மனோஹரும்,

நடித்தார்கள். ஜெயந்தி புரொடக்ஷன்ஸார் "பொன்வயல்" என்ற அவர்களது இந்தப் படத்தை "பங்காரு பூமி" என்ற பெயரில் உடனுக்குடன் தெலுங்கிலும் தயாரித்து வருகின்றனர். கே. சாரங்கபாணி ஒரு போலீஸ்காரனாகவும், புளிமூட்டை ராமஸ்வாமி செங்கோடனின் இணைபிரியாத துணைவன் 'சின்னப் பையனா'கவும், செம்பவளவல்லியின் தாயாக குமுதினியும் நடிக்கின்றனர். இந்த இருமொழிப் படத்தை ஏ. டி. கே. மிக சிரத்தையுடன் டைரெக்ட் செய்து வருகிருர்.

அன்பு

நடேஸ் ஆர்ட் புரொடக்ஷன்ஸ் தயாரிப்பான "அன்பு" நடேசன் டைரெக்ஷனில் நியூடோன் ஸ்டுடியோவில் உருப்பெற்று வருகிறது. இப்படத்தில் டி. ஆர். ராஜகுமாரி ஒரு வயோதிகரின் இளைய தாரமாக வருகிருர். மூத்த தாரத்தின் மகனாக சிவாஜி கணேசனும், வயோதிகராக துரைஸ்வாமியும் நடிக்கின்றனர். வயோதிகர்களை யௌவனர்களாக்கும் நாட்டு வைத்தியராக வந்து ஆர்ப்பாட்டம் செய்கிருராம் பாலய்யா. மற்றும் லலிதா, பத்மினி, 'பிரண்ட்' ராமசாமி ஆகியோரும் நடிக்கும் இப்படத்தின் பாட்டுகளை "சுரதா" எழுதியிருக்கிருர்.

புது யுகம்

ஸ்ரீ சாயி கானம்ருதா பிக்சர்ஸின் "புது யுகம்" ஓசைப் படாமல் நாலாயிரம் அடிகள் படமாகிவிட்டது, சியாமளா ஸ்டுடியோவிலே. இப்படத்தில் எஸ். ஏ. நடராஜன், எம். எஸ். திரௌபதி, காரைக்குடி லக்ஷ்மி, கிருஷ்ண குமாரி ஆகியோர் நடிக்கின்றனர். கோபு-சுந்தர் இருவரும் டைரெக்ட் செய்து வருகின்றனர். சங்கீத டைரெக்டர் ஜி. ராமனுதன் சம்பந்தப்பட்ட படம் இது. ஆகவே, சங்கீத டைரெக்டர் அவர்தான் என்று சொல்ல வேண்டியதில்லை.

பாசவலை

பாஸ்கர் டைரெக்ஷனில் ஸ்டார் கம்பைன்ஸ் ஸ்டுடியோவில் "பாசவலை" மெதுவாகப் படமாகி வருகிறது. கே. சாரங்கபாணி, டி. ஆர். ராதா இருவரும் சம்பந்தப்பட்ட காட்சிகள் இப்பொழுது படமாகி வருகின்றன. பி. எஸ். சரோஜா, கிருஷ்ண குமாரி, டி. எஸ். பாலய்யா, கே. சாரங்பாணி ஆகியோர் இப்படத்தில் நடிக்கின்றனர்



முதல் அகில இந்திய அச்சாளர் கண்காட்சி பம்பாயில் ஜனவரி 22-ந் தேதி முதல் பிப்ரவரி 10-ந் தேதி வரையில் நடைபெறுகிறது. அழகிய முறையில் அச்சிடப்பட்ட பல பிரதிகள் இந்தக் கண்காட்சியில் வைக்கப் பட்டுள்ளன. சென்னை கமர்ஷியல் அச்சகத்தினர் இந்தக் காட்சியில் போட்டிக்கு வைத்துள்ள (மேலே காணப்படும்) சில அழகிய மூவர்ணப் பிரதிகளில் நம் "குண்டூசி" தீபாவளி மலர் அட்டையும் ஒன்ருகும்.

வாழ்க்கை வர்ணனை

[12-ம் பக்கத் தொடர்ச்சி]

மனோஹர் அடிக்கடி நாடகங்களில் ஈடுபட்டு வந்தபோதிலும், நாடகத்தையோ, சினிமாவையோ தாம் தொழிலாகக் கொள்ளுவார் என்று அவர் கனவில்கூட நினைக்கவில்லை. ஆனால், இரண்டு பிரபல கிருஷ்ணஸ்வாமிகள் வலிய வந்து அவரை சினிமாவில் சேரும்படித் தூண்டவே, அவர் மறுக்க முடியாதவராய் ஒப்புக்கொண்டார்.

“ராஜாம்பாள்” ஒரு வெற்றிகரமான படமாய் முடிந்தது. அந்த முதல் படத்திலேயே மனோஹரின் நடிப்பும் நன்கமைந்திருந்தது. புது முகம் மனோஹரை பொது மக்கள் புகழ்ந்து ஆதரித்தனர். எனவே, சினிமா உலகம் மனோஹரை வெளியேற முடியாதபடி ஆகர்ஷித்துக் கொண்டுவிட்டது. மனோஹர் தபால் இலாகாவிலிருந்து விலகி, சினிவைத் தம் தொழிலாகவே மேற்கொண்டு விட்டார்.

“ராஜாம்பாள்” முடிந்த சமயத்தில் நாராயணன் கம்பெனியார் “தாய் உள்ளம்” படத்திற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தனர். “ராஜாம்பாளி”ல் மனோஹர் திறம்பட நடித்திருந்ததைக் கண்ட அவர்கள் அவரை “தாய் உள்ளம்” படத்திற்கு ஒப்பந்தம் செய்து கொண்டனர். இப்படம் சாதாரண வெற்றியையே பெற்றது.

அதன் பின்னர் டைரெக்டர் ஸ்ரீராமுலு நாயுடு தம் “காஞ்சனா” படத்திற்கு மனோஹரை ஒப்பந்தம் செய்துகொண்டு, கதாநாயகியின் சகோதரனாக நடிக்கச் செய்தார். படம் நல்ல வெற்றி பெற்றதால், உப பாத்திரத்தில் நடித்திருந்த போதிலும் மனோஹருக்கு நல்ல பெயர் கிடைத்து விட்டது.

மனோஹரின் மனைவி சீதாலக்ஷ்மி

இந்த மூன்று படங்களும் முடிந்ததும், மனோஹருக்கு சினிமா உலகில் நல்ல கிராக்கி ஏற்பட்டுவிட்டது. ஏக காலத்தில் மூன்று படங்களுக்கு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டிருக்கிறார். இவைகளில் ஒன்றான கஜானனா புரொடக்ஷன்ஸாரின் “மாமியார்” தமிழ்ப் படம் இந்த மாதத்தில் வெளிவரவிருக்கிறது. இது தவிர ஜயந்தி புரொடக்ஷன்ஸின் “பொன் வயல்” தமிழ், தெலுங்குப் படங்களிலும், அருணா பிலிம்ஸாரின் இரண்டாவது தயாரிப்பான “குமாஸ்தா” தமிழ், தெலுங்குப் படங்களிலும் மனோஹர் தற்போது நடித்துக் கொண்டிருக்கிறார். “ராஜாம்பாளை”ப் போலவே “குமாஸ்தா”விலும் அருணா பிலிம்ஸார் இவருக்கு நன்கு நடிப்பதற்கான சந்தர்ப்பங்களை நிறைய அளித்திருக்கிறார்களாம். நாடக மேடைப் பயிற்சி காரணமாக மனோஹரிடம் நல்ல நடிப்புத் திறமையும் சினிமாவுக்கேற்ற முக அழகும் பொருந்தியிருப்பதாலேயே அவர் சொற்ப காலத்திற்குள்ளேயே அரை டஜன் படங்களில் நடிக்கும் சந்தர்ப்பத்தைப் பெற்றிருக்கிறார். எதிர் காலத்தில் மனோஹர் மேலும் அதியுன்னத நிலையை அடைவார் என்று தாராளமாய் எதிர்பார்ப்பதற்கு இவைகளே போதிய காரணங்களாகும்.

மனோஹருக்கு பாடத் தெரியாது. அதற்குப் பதில் அவர் ஆடப் பழகி வருகிறார்! பொய்யல்ல, நிஜமாகத்தான் கூறுகிறேன். பிரபல டான்ஸ் மாஸ்டரான டெஸ்மாண்ட் என்பவரிடம் அவர் மேல் நாட்டு “டாப் டான்ஸை” ஆடப் பழகிவருகிறார். அதில் தேர்ச்சி பெற்றதும் அதைப் படத்தில் ஆடிக்காட்டினாலும் நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை.

சிறு வயதில் மனோஹர் ‘ஸ்கௌட்’ கோஷ்டியில் சேர்ந்திருந்தார். பிறகு கல்லூரியில் படிக்கும்போதே இராணுவப் பயிற்சி, விமானப் படைப் பயிற்சி இவைகளைப் பெற்றார். அந்தக் காலத்திலெல்

புயல் நிவாரணத்திற்கு குழந்தைகள் உதவி

சென்ற மாதம் 11ம் தேதி, கும்பகோணம் வாணி விலாஸ சபாவில் குமாரி சாருபாலாவின் நாட்டியக் கச்சேரி நடைபெற்றது. அன்னதான சிவன் பஞ்ச நிவாரண நிதிக்காக நடைபெற்ற அன்றைய கச்சேரி மூலம் ரூ. 1018 வசூல் ஆயிற்று.

• • •

தமிழ் நாடு புயல் நிவாரண நிதிக்காக சென்ற மாதம் 11ம் தேதி சென்னை செயின்ட் மேரீஸ் ஹாலில் பேபி லலிதா–பத்மினி ஆகியோரது நடனக் கச்சேரி நடைபெற்றது, மந்திரி கனம் யூ. கிருஷ்ண ராவ் தலைமை வகித்தார். கச்சேரி முடிவில் அன்று வசூலான ரூ. 2125க்கு செக் மந்திரியிடம் அளிக்கப் பட்டது. பிரபல சினிமா நக்ஷத்திரங்களான திலீப் குமார், ராஜ் கபூர், நர்கீஸ் ஆகியோர் நாட்டியம் பார்க்க வந்திருந்தனர். முடிவில் ராஜ் கபூரும், நர்கீஸும் குழந்தைகளுக்கு வெள்ளிக் கோப்பைகளையும் தங்கப் பதக்கத்தையும் பரிசளித்தனர்.

கழகக் கச்சேரிகள்

சென்னை, கலை அபிமானிகள் கழகத்தின் சார்பில் சென்ற மாதம் 25ம் தேதி, குமாரிகள் விசா, பிரகதா, சந்திரா இவர்களின் பரத நாட்டியக் கச்சேரி, கோகலே ஹாலில் நடைபெற்றது.

கோவை, தாகூர் கழகத்தின் ஆதரவில் சென்ற மாதம் குடியரசு தினத்தன்று குமாரிகள் ஸி. எஸ். வேதா, ஸி. என். வேதாவின் பரதநாட்டியம் நடந்தது.

ஸ்ரீ தியாகராஜ ஆராதனை

சத்குரு ஸ்ரீ தியாகராஜரின் ஆராதனை இந்தியாவின் பல நகரங்களிலும் கொண்டாடப் பட்டுள்ளது. கும்பகோணம் ஸ்ரீ தியாகபிரம்ம மஹோத்ஸவ சபையினர் சென்ற மாதம் 5ம் தேதி முதல் 9ம் தேதி முடிய ஆராதனை விழாவை நடத்தினார்கள். சென்னை, ரஸிக ரஞ்சனி சபையினர் சென்ற மாதம் 5ம் தேதி, என். ரகுநாதய்யர் தலைமையில் கொண்டாடினார்கள். ராதா, ஜயலக்ஷ்மியின் இன்னிசைக் கச்சேரி நடைபெற்றது. பம்பாய் ஸ்ரீ தியாகராஜ சபையினர் பதிமூன்று தினங்கள் ஆராதனை விழாவை நடத்தினார்கள்.

134142

விநயகர்
சுருட்டுகள்
ஷெல் பிராண்டு
TRADE MARK REGISTERED
PROPRIETOR V. ARUMUGA CHETTY
மணிலா சுருட்டுகள்
V. ஆறுமுக செட்டி, 18. அண்ணா பிள்ளை தெரு,
N.B. பொடிக்கு உயர்ந்த பர்தர் புகையிலைகளும்.....சென்னை-1.
எம்மிடம் கிடைக்கும்....

Madras—1. Published by P. R. S. Gopal (Gundoosi) at 26. Godown St. Printed by S. Sriraman at Commercial Printing & Publishing House, 46, Armenian

லாம், அவர் இராணுவத்தில் ஒரு ஆபீஸராகச் சேரவேண்டும் என்றுதான் திட்டமிட்டுக் கொண்டிருந்தார்.

பள்ளிக்கூட விளையாட்டுகளிலெல்லாம் மனோஹர் தாராளமாய் கலந்து கொள்ளுவார். பாஸ்கெட் பால், வாலி பால், புட்பால் முதலிய ஆட்டங்களை அவர் ஆடி வந்தார். சினிமாவில் சேர்ந்த பின் அவர் டென்னிஸ், கிரிக்கெட் முதலியவைகளை ஆடத் தொடங்கியிருக்கிறார். டென்னிஸ் ஆடுவதில் அவருக்கு மிகமிக இஷ்டமாம்.

மனோஹருக்கு குஸ்திச் சண்டையிலும் பழக்கம் உண்டாம்! அவர் பஞ்சாபில் இருந்தபோது இதைப் பொழுது போக்காக தமாஷாய் கற்றுக்கொண்டாராம். சந்தர்ப்பமும், ஜோடியும் கிடைக்கும் போது இப்பொழுதுகூட அவர் குஸ்தியிட்டு வருகிறாராம். தற்போதைக்கு அவருக்கு ஜோடியாக விளங்குபவர்—பிரபல நக்ஷத்திரம் எஸ். வரலக்ஷ்மியின் சகோதரரான பகதூர்தான். மனோஹருக்கு நீந்துவதிலும் மிக இஷ்டம்.

மனோஹர் தம் பெற்றோருடனும் சகோதரர்களுடனும் தியாகராய நகரில் தம் விஸ்தாரமான பங்களாவில் வசித்து வருகிறார். அவரது தம்பியான ஸ்ரீநிவாஸனும் சினிமாத் தொழிலில்தான் ஈடுபட்டிருக்கிறார்; ஆனால் நக்ஷத்திரமாகவல்ல; பில்ம் ஸென்டர் ஸ்டுடியோவில் பில்ம் எடிட்டராக. மனோஹருக்கு 1950 வருஷம் மே மாதம் 22ந் தேதி திருமணம் நடந்தேறியது. இன்டர் படித்தவரான சீதாலக்ஷ்மி—லக்ஷ்மி நரஸிம்மனின் மனைவியாகியிருப்பதால், லக்ஷ்மி கடாக்ஷம் இரட்டிப்பாகி ருப்பதில் ஆச்சரியமில்லை யல்லவா! னால் இத் தம்பதிகள் பெற்றோர்கள் கும் பாக்கியத்தை மட்டும் இன்னும் பறவில்லை.

மனோஹரின் தாய் பாஷை தமிழ். இது விர அவருக்கு ஆங்கிலம், சம்ஸ்கிருதம், ந்தி, தெலுங்கு ஆகிய பாஷைகளும் தரியும். அவர் புஸ்தகங்கள் படிப்பது, ங்கில, தமிழ்ப் படங்களைப் பார்ப்பது, தோட்ட வேலை செய்வது முதலியவைக ரில் தம் பொழுதைக் கழிப்பது வழக்கம்.

சிவந்த மேனியும், சுருட்டைத் தலைமயிரும், கூரிய கண்களும், சுமார் ஐந்தரை டி உயரமும் உடையவர் மனோஹர். ம்பாவமற்ற குணமும். மற்றவர்களு பழகும் போது காட்டும் உள்ளன் அவரது வெற்றிக்குப் பக்க பலமாய் க்கின்றன.

உணவு பற்றாக் குறையைத் தவிர்க்க

சந்திரா

பம்புகளை

அமையுங்கள்



நீர்ப் பாசனத்திற்கு

சிறந்த

சாதனம்



விசேஷ அம்சங்கள்

குறைந்த சிலவு

அதிக தண்ணீர் சப்ளை

நீடித்த உழைப்பு

Grams: CHANPUMP

PHONE : 2079

சந்திரா பவுண்டரீஸ் லிமிடெட்,
55, பேஸின் பிரிட்ஜ் ரோட், வண்ணாரப் பேட்டை, சென்னை.

P. C. M. Office : 256, மேலமாரட்டு வீதி, மதுரை.

UNDOOSI February 1953 Regd. No. M. 4924